# சிகரம்

மண்முனைப்பற்று பிரதேச செயலக சாகித்திய விழா சிறப்பு மலர் - 2009



பிரதேச கலாசார பேரவை மண்முனைப்பற்று

# சிகரம்

**ஆறாவது ஆண்டு**
**சாகித்திய விழா சிறப்பு மலர்**

**வெளியீடு**

பிரதேச செயலக கலாசார பேரவை
மண்முனைப்பற்று
ஆரையம்பதி
2009

## மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார பேரவை – 2009

**தலைவர்**
கலாநிதி எஸ்.அமலநாதன்
(பிரதேச செயலாளர்)

**உப தலைவர்கள்**
திரு.கோ.தனபாலசிங்கம்
(உதவி பிரதேச செயலாளர்)

திரு.க.செல்லத்தம்பி
(ஓய்வுபெற்ற கிராமசேவை உத்தியோகத்தர்)

**செயலாளர்**
திருமு.சதாகரன்
(கலாசார உத்தியோகத்தர்)

**உப செயலாளர்கள்**
ஜனாப்.எ.எல்.முசாதீக்
(கலாசார அபிவிருத்தி உதவியாளர்)

திரு.ச.சோமசுந்தரம்
(கலாசார உத்தியோகத்தர்)

**பொருளாளர்**
க.பிறேம்குமார் (கணக்காளர்)

**உறுப்பினர்கள்**
திரு.கி.குணரெட்ணம்
திரு.M.விக்னேஸ்வரராஜா
அல்ஹாஜ்.M.I.A.முஸ்தபா
திரு.த.மலர்ச்செல்வன்
திரு.I.மகேசானந்தம்
திரு.ஐ.சிவானந்தராஜா
திரு.மு.கணபதிப்பிள்ளை
திரு.மூ.அருளம்பலம்
திரு.த.இன்பராஜா

# சிகரம்

ஆறாவது ஆண்டு
சாகித்திய விழா சிறப்பு மலர்

**விழா ஒருங்கிணைப்பு**
கலாநிதி எஸ்.அமலநாதன்
(பிரதேச செயலாளர்)

**மலர் வெளியீட்டுக்குழு**
திரு.க.செல்லத்தம்பி
திரு.மு.கணபதிப்பிள்ளை
திரு.மு.சதாகரன்
திரு.த.மலர்ச்செல்வன்
அல்ஹாஜ்.M.I.A.முஸ்தபா
திரு.எஸ்.கோபாலசுந்தரம்
திரு.ஐ.சிவசுந்தரம்
திரு.மூ.அருளம்பலம்

**விடய எழுதுனர்**
திரு.T.துரைராஜா

**அட்டைப்படம்**
திரு.கு.விஜனுக்குமார்

**தொகுப்பு வடிவமைப்பு**
திரு.மு.சதாகரன்

**கணனிப் பதிவு**
செல்வி.அ.ஜெயசுதா

**அச்சகம்**
சன் அச்சகம்
இருதயபுரம் மேற்கு. மட்டக்களப்பு.

## வாழ்த்துச் செய்தி

**மட்டக்களப்பு மாவட்ட**
**அரசாங்க அதிபர்**



மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் வருடாந்தம் நடாத்தப்படும் பிரதேச சாகித்திய விழா இம்முறையும் நடாத்தப்படுவதில் பேருவகை அடைகின்றேன்.

இச்சாகித்திய விழாவிற்குச் சிகரம் வைத்தாற்போல 'சிகரம்' சிறப்பு மலர் வெளியிடுவது சாலப் பொருத்தமானதாகும். இப்பிரதேசமானது தமிழ், முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். இம் மக்களின் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் ஒரு ஆவண ஏடாகவும் கலை, இலக்கிய இரசனைகளை உள்ளடக்கிய ஒரு சஞ்சிகையாகவும் உருப் பெற்றுள்ள 'சிகரம்' மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன்.

சாகித்திய விழா சிறப்புற நடைபெறவும் மலர் வெளியீட்டுக்கும் முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் உள்ளிட்ட மலர் வெளியீட்டுக் குழுவினர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

## வாழ்த்துச் செய்தி

**பிரதேச செயலாளர்**
**மண்முனைப்பற்று**



மண்முனைப்பற்று மக்களின் கலாசார விழுமியங்கள் அவர்களது பண்பாட்டுடன் பின்னிப் பிணைந்தவையாக விளங்குகின்றன. அவை தனித்து நோக்க முடியாதவை. அன்று முதல் இன்றுவரை மாவட்டத்தின் கலைத்துவத்தைத் தக்கவைப்பதில் மண்முனைப்பற்றிற்கு பெரும் பங்குண்டு. கடந்த ஆண்டு கூட தேசிய மட்டத்தில் ஆற்றிய பங்கும், பெற்ற கௌரவிப்பும் இதற்கு நல்ல சான்றாதாரங்களாகும்.

2009 கலாசார விழாவானது, இலைமறைகாயாக இருக்கும் சிருஸ்டிகளை இனங்காணுதல், வேண்டிய பயிற்சிகளை வழங்குதல், கலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோரைக் கௌரவித்து சமூக அந்தஸ்து வழங்குதல் என்பவற்றை அடையாளப்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் பிரதேச மட்டப் பாரம்பரிய, சமகால, கலாசாரப் பண்பாட்டுப் பின்னணியைப் பிரதிபலிக்கும் வகையில் எழுத்துருக்கொண்டுள்ள "சிகரம்" நிலைபேறான ஆவணப்படுத்தலாக அமைவது பெருமைக்குரிய விடயமாகும். எழுத்துக்களால் சிகரத்தை உயிர்கொடுத்த எழுத்தாளர்களையும், நூல் வெளியீட்டுக் குழுவினரையும் பெருமனதோடு பாராட்டுகின்றேன். இவ்வாணப்படுத்தலுக்கான முழு நிதிவளத்தையும் பெருமனதோடு வழங்கிய "சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தின் தலைவர் ஆ.லோகேஸ்பரன் அவர்களுக்கு பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரதேச கலாசார விழா சிறப்பாக நிறைவேற ஒத்துழைத்த பிரதேச கலாசாரப் பேரவை, கலாசாரத் திணைக்களம், பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கலைசார் ஆர்வலர்கள், நிதியுதவி வழங்கி ஒத்துழைத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

**Dr.எஸ்.அமலநாதன்**
பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவையின் தலைவரும்
மண்முனைப்பற்று.


25.06.2009




**முன்வரிசையில் இடமிருந்து வலமாக :** திரு. கி. குணரெட்ணம், திரு. மு. கணபதிப்பிள்ளை, திரு. க. பிரேமகுமார், கலாநிதி. எஸ். அமலநாதன், திரு. கோ. தனபாலசிங்கம், திரு. க. செல்லத்தம்பி, அல்ஹாஜ். எம். ஐ. எ. முஸ்தபா

**பின்வரிசையில் இடமிருந்து வலமாக :** திரு. ஐ. மகேசானந்தம், திரு. ஐ. சிவானந்தராசா, திரு. மு. சதாகரன், திரு. த. மலர்ச்செல்வன், திரு. மூ. அருளம்பலம், திரு. எம். விக்கினேஸ்வரராஜா, திரு. ச. சோமசுந்தரம், ஜனாப். எ. எல். முசாதீக், திரு. த. இன்பராஜா

# உள்ளே.....



## கட்டுரைகள்


நாடக நிகழ்வில் பயன்படுத்தப்படும் மேடை உத்திகள் 01

நவீனத்தின் தோற்றத்தைப் புரிந்துகொள்ளல் 11

கூத்து அங்கும் இங்கும் ஒரு பார்வை 17

தமிழறிஞர் செல்லப்பா பூபாலபிள்ளை பண்டிதர் அவர்கள் 23

மண்முனைப் பிரதேசத்தில் இரண்டு ஈஸ்வரங்கள் 35

வழக்கொழிந்துவரும் வசந்தன் கலை 41

பாலமுனைக் கிராமமும் பாரம்பரியப் பாடல்களும் 45

கூத்துக்கலையில் மீளுருவாக்கம் தேவைதானா? 51

மண்முனைப் பிரதேசத்தில் குடிசைக் கைத்தொழில்கள் 57

மண்முனைப்பற்றும் வேடர் குடியிருப்பும் 63

சர்ரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தின் சமூகப் பொருளாதாரப் பணிகள் 67

புதுக்குடியிருப்புக் கிராமத்தில் கரகாட்டம் 79

ஆரையம்பதியில் வீரசாகச விளையாட்டுக்களும் நானும் 89

கிராமியப் பாடல் "எண்ணெய்ச்சிந்து" 92

முஸ்லிம்களின் ஆடைக்கலாசாரம் 94

ஆரையம்பதியின் மெல்லிசை வளர்ச்சி 98

எனக்குள் உயிர்த்த கலையுள்ளம் (பத்தி) 106






## கவிதைகள்


மண்முனையே...... (vi)

தனிமை 10

முற்றத்து மல்லிகை 34

ஆசான் பணி 78

கவி 104




## சிறுகதை


பாரம் குறைந்தது (73)


## மற்றும்


கலாசாரப் போட்டி முடிவுகள்

கலைஞர் கௌரவம்

நன்றியுரை

# மண்முனையே...!



வங்கக் கடலலை வாழ்த்துரைக்கும் - மட்டு
வாவிவாழ் மீனினம் வரவேற்கும்
செங்கதிரோனின் ஒளியினிலே மண்முனை - தினம்
திக்கெட்டும் ஒளி வீசி நலங்கொழிக்கும்

மங்களமாய் முத்தமிழும் களிகம்பும் - இங்கு
மண் வாசனையுடன் கூத்தும் கரகமும்
சங்கத்தமிழ் கவிதைகளும் சிறுகதையும் - செந்தமிழ்
சரித்திர காவியமும் சிறந்தெழுந்த மண்முனையே!

மங்கிடாத விருந்தோம்பல் பண்பினாலே - மக்கள்
மனநிறைவாய் வந்தாரை வரவேற்பாரே
தங்கிடுமே வரலாற்று பதிவுகளில் - எங்கள்
தாயகமே மண்முனையின் கலைவளமே!

மங்கையாம் உலகநாட்சி ஆண்ட பூமி - இங்கு
மகத்துவமாய் மூவினமும் முக்கனிபோல்
ஓங்காரம் பிறை சிலுவை ஒன்றாய் - இங்கு
ஒற்றுமையாய் ஒளியேற்றும் மண்முனையே!

சிங்காரமாகவே கைப்பணியும் மீன்பிடியும் - தினம்
சீர்பெறு கமமும் வியாபாரமும்
சிங்கமான மனிதர்களும் இந்த மண்ணில் - தினம்
சிரித்துவாழ வழிவகுக்கும் மண்முனையே!

தூங்காத உயிரோட்ட கலைஞர்களே! - தினம்
தூசகற்றி மண்துலங்க கலைவளர்த்தால்
தங்கமாம் மண்முனையின் சிகரமிது - புகழ்
தந்திடுமே போற்றுகிறோம் வாழியவே!

— சுபம் —

**த.இன்பராஜா**



# நாடக நிகழ்வில் பயன்படுத்தப்படும் மேடை உத்திகள்


எம்.சதாகரன்

மனிதத் திறன் *(Skill)* வெளிப்பாடே கலைகள் என்பர். கலைகள் பலவாக இருப்பினும் நாடகக் கலையே அனைத்துக் கலைகளிலும் தலையாயதும், தனித்துவமுடையதாகவும் விளங்குகின்றது. எல்லாக் கலைகளையும் தன்னுள் அடக்கியதாகவும் பார்ப்போருக்கு அதிக தாக்கத்தைக் கொடுப்பதாகவும் அமைந்திருப்பதாலேயே நாடகத்தைக் கலைகளின் அரசன் என்பர்.

நாடகம் *(Drama)* என்பது நிகழ்த்தப்படுவது எனப் பொருள்படும். இது ஓர் நிகழ்கலையாகும். மேடை எனும் குறுகிய வரம்பினுள் பார்வையாளர் முன்னிலையில் நாடகம் நிகழ்த்தப்படும். நிகழ்த்திக் காட்டுதல் மூலம் உணர்வு வெளிப்பாட்டைக் கொண்டுவருதல் நாடகத்தின் இயல்பு எனலாம்.

நாடகம் பல்வேறு கலைகளாலும், பல்வேறு கலைஞர்களின் ஒன்றிணைவாலும் உருவாவதாக இருப்பினும் நாடகத்தில் முக்கிய அம்சமாக விளங்குபவன் நடிகனே. நடிகனின்றி நாடகம் இல்லை. இதனால்தான் நாடகத்தை நடிகனின் கலை என்பர். பார்ப்போருக்கு முன் தெரிபவர்கள் நடிகர்கள் மாத்திரமே. நடிகர்களின் நடிப்பும் வார்த்தைகளும் மிகவும் முக்கியமானவை. எனினும் இந்நடிப்பையும், வார்த்தைகளையும் உயிர்பெறச் செய்து, நிஜப்படுத்தி அவற்றின் உணர்வுகளை வெளிக்கொணரச் செய்வதற்கு நாடகத்தில் பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. இவற்றையே நாம் நாடக நிகழ்வில் பயன்படுத்தப்படும் மேடை உத்திகள் என்கிறோம். அவற்றில் ஒளியமைப்பு, ஒலியமைப்பு, இசையமைப்பு, ஒப்பனை, காட்சியமைப்பு என்பன அடங்கும்.

ஒரு நாடக நெறியாளன் தான் சொல்லவந்ததை சிறப்பாக வெளிப்படுத்தி அதைப் பார்ப்போருக்கு போய்ச் சேரச் செய்வதில் இம்மேடை உத்திகள் பெரிதும் உதவுகின்றன. ஒரு நாடகத்தின் வெற்றி தோல்வியைக் கூட இவை நிர்யிக்கின்றன என்றும் கூறலாம். எனவேதான் நாடகத்துறையில் ஈடுபடுபவர்கள் இவற்றின் பயன்பாடு பற்றியும், முக்கியத்துவம் பற்றியும் ஓரளவாவது அறிந்திருத்தல் அவசியமானதாகும்.



**ஒளியமைப்பு :**

நாடக நிகழ்வில் ஒளியின் பயன்பாடு முக்கியமானதாகும். ஆரம்ப காலங்களில் தீப்பந்தங்களே ஒளிக்காகப் பயன்படுத்தப் பட்டாலும், நவீன காலத்தில் ஒளி பாய்ச்சும் மின் விளக்குகளில் ஏற்பட்ட வளர்ச்சி மேடையிலும், ஒளியமைப்பை நுணுக்கம் நிறைந்த ஒன்றாக மாற்றியுள்ளது. நாடகத்தில் மேடையையும் நடிகரை தெளிவாகக் காட்ட பயன்படுத்த இவ் ஒளியமைப்பு 16ம் நூற்றாண்டின் பின்னர் பிரக்ஞைபூர்வமாக வளர்ச்சியடைந்தது. முதன்முதலில் அரங்கிற்கு சிறப்பாக ஒளியைப் பயன்படுத்தியவர் ஒளியமைப்பின் தந்தை எனப் போற்றப்படும் அடோலப்பியா என்பவராவார். இவர் குறியீட்டுவாத நாடகங்களுக்காக வழங்கிய ஒளியமைப்பு முக்கியமானது. இவர் காட்சிகளை வெளிப்படுத்த மட்டுமன்றி உணர்வுகளை வெளிப்படுத்தவும், கருத்துக்களை குறியீடாகப் புலப்படுத்தவும் ஒளியைப் பயன்படுத்தினார். ஒளியை மேடையில் பல்வேறு கோணங்களில் பல்வேறு அளவுகளில் வழங்கி முப்பரிமாணத் தோற்றத்தை ஏற்படுத்தினர். அரங்கில் ஒளியையும், நிழலையும் கலந்து பல காட்சிக் கோலங்களையும், வர்ணக்கோலங்களையும் உருவாக்கினார். உணர்வைக் கண்ணால் பார்க்கக்கூடியளவு வர்ணமாகக் காட்டிய அவரின் ஒளியமைப்பு முறையையே இன்றும் பின்பற்றுகின்றனர்.

நாடக மேடைகளில் ஒளிவழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மின்விளக்குகள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியமானதாகும். மேடை முழுவதும் பரவலாக ஒளிபரப்புவதற்காக வெள்ளை விளக்குகள் *(Flood Lights)* பயன்படுத் தப்படுகின்றன. அதேபோல தலைக்கு மேலுள்ள விளக்குகளால் நடிகர்களின் முகங்களின் நிழல்படிய நேரிடும். அவற்றினைத் தவிர்த்து நடிகர்களின்

முகங்களைத் தெளிவாகக் காட்டுவதற்கு தரைவிளக்குகள் *(Foot Lights)* பயன் படுத்தப்படுகின்றது. இவை நீண்ட வரிசையில் மேடையின் முன்பாக வைக்கப் பட்டிருக்கும். இவற்றுடன் ஒரு பொருளையோ ஒரு நடிகரையோ குறிப்பாகக் காட்டுவதற்குப் புள்ளி விளக்குகள் *(Spot Lights)* உதவுகின்றன. மேடையில் பயன்படுத்தப்படும் ஒரு சிறு பொருளையும் தெளிவாகக் காட்டுகின்ற சக்தி இவ்விளக்குகளுக்கு உண்டு. அத்துடன் நாடகத்தில் ஏற்படும் மாற்றம், காட்சி மாற்றம் போன்றவற்றிற்கு ஒளியைச் சட்டென்று நிறுத்தாமல் சிறிது சிறிதாகக் குறைத்து வருவதற்கு டிம்மர்கள் *(Dimmers)* உதவுகின்றன. இவற்றினைவிட வானவில், மின்னல், பனி, தீச்சுடர், மேகங்கள் ஆகியவற்றைக் காட்டுவதற்கும் புரஜெக்சன் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பல விளக்குகளும் உண்டு.

நாடக நிகழ்வில் இவ்வாறான விளக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு நன்மைகளைப் பெறமுடிகின்றது. மேடையைப் பெருப் பித்துக் காட்டவும், சிறுப்பித்துக் காட்டவும், நீளமாகக் காட்டவும் ஒளியமைப்பினால் முடிகின்றது. அதேபோல் பகல்பொழுதின் உக்கிரமும், இரவுநேரத்தின் இதமும், மழைக் காலத்தின் இடிமுழக்கமும் ஒளியினால் கொண்டுவரப்படுகின்றது. மேடையில் நாடகக் காட்சி இடம்பெறுகின்ற காலம், நேரம், இடம், சூழல் என்பவற்றைக் காட்டவும் இவ் விளக்குகள் உதவுகின்றன. ஒளியில் வெள்ளை ஒளி பகலைக்குறிப்பதற்கும், நீல ஒளி இரவைக்குறிப்பதற்கும், சிவப்பு, நெருப்பொளி மாலைப் பொழுதைக்குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றுடன் ஒளியமைப்பானது உணர்வு வெளிப்பாட்டிற்கும் சிறப்பாக உதவுகின்றது. மகிழ்ச்சி நிறைந்த காட்சிக்கு முழு ஒளியும், துக்கம் நிறைந்த காட்சிக்கு குறைந்த ஒளியும் பாய்ச்சப்படுகின்றது. ஒளியைக் கலந்தும் இவ்வெளிப்பாட்டுக்கு பயன்படுத்தலாம். மேடையில் ஒளியைக் கண்டபடி பயன்படுத்த முடியாது. ஒரு ஒளி வழங்கப்படுமிடத்து அதற்கான அர்த்தமும் உணர்த்தப்படல் வேண்டும். இல்லையேல் கருத்தற்றுப் போய்விடும்.

## ஒலியமைப்பு :

நாடகச் சூழலை உருவாக்குவதில் ஒலியின் பயன்பாடு இன்றிய மையாததாகும். மேடையில் கொண்டுவர முடியாத சில காட்சிகளையும், பொருட்களையும் அவற்றின் உணர்வுகளையும் ஒலியினைப் பயன்படுத்துவதன்

மூலம் வெளிப்படுத்த முடிகின்றது. மேடையின் திரைக்குப் பின்னாலிருந்து காட்சிகளுடன் தொடர்புடையதாக இவ்வொலிகள் வழங்கப்படும். இவை இசைக் கருவிகளினாலோ, ஒலிப்பதிவுகளினாலோ, வாயினாலோ, ஏனைய பொருட்களினாலோ வழங்கப்படலாம். நாடகக் காட்சிகள் சிலவற்றில் இவ்வாறான ஒலி வழங்கப்படுகின்ற சில இடங்களை நோக்குவோம். நாடகக் காட்சியில் ஒரு அடர்ந்த காட்டினைக் கொண்டுவர வேண்டுமென வைத்துக் கொள்வோம். மேடையில் மரக்கிளைகளை நட்டோ அல்லது வரையப்பட்ட மரங்களை நிறுத்தியோ மட்டும் அவற்றை வெளிப்படுத்திவிட முடியாது. பின்னணியாக பறவைகளின் ஒலிகளையும், ஏனைய ஒலிகளையும் வழங்குவதன் மூலமே அக்காட்டின் உயிர்ப்பினைக் கொண்டுவரமுடியும். அதேபோல் மேடையில் சிலரை இருத்தி பின்னணியாக விமானம் வருவதும் போவதுமான ஒலிகளையும் அதன் நேரங்களை அறிவிக்கும் அறிவிப்பையும் வழங்குவதன் மூலம் அக் காட்சி ஒருவிமான நிலையத்தில் இடம்பெறுகின்றது என்கிற உணர்வினை ஏற்படுத்திவிடலாம். இவ்வாறாக புகையிரத நிலையத்தைக் காட்ட புகையிரத எஞ்சின்கள் ஒலிக்கும் ஒலி, பண்டங்களை விற்போர், புகையிரதம் புறப்படும் நேரங்களை அறிவித்தல்கள் போன்றவற்றையும், நகர்ப்புறத்தைக் காட்ட கார், பேருந்து, மோட்டார் சைக்கிள்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றின் ஓசைகளையும், கிராமப்புறத்தைக் கொண்டுவர கிராமத்து இசை, மாட்டு வண்டில் ஓட்டும் சத்தம் முதலிய ஒலிகளையும், சுடுகாட்டைக் காட்ட பறவைகள் கீச் சிடும் குரல், ஆந்தை அலறல், பேய் நடமாடுவதைக்காட்ட சதங்கை ஒலி, பயங்கரமாகச் சிரிக்கும் ஓசை முதலியவற்றையும் இரவைக்காட்ட நிசப்த ஒலி, நாய் ஊளையிடும் சத்தம், விடியலைக்காட்ட சேவல் கூவுதல், குயில், காகத்தின் சத்தம் முதலியவற்றையும்; விழாக் காலங்களைக்காட்ட மேளதாள வாத்திய ஒலியையும், தீபாவளியைக் காட்ட பட்டாசு சுடும் சத்தத்தையும் என காட்சிகளுக்குப் பொருத்தமாக ஒலியைப் பயன்படுத்தலாம். குண்டுவீச்சு, போராட்டம், சண்டைக்காட்சிகள், இடிமுழக்கம் முதலியவற்றுக்கும் அவற்றுக்கேற்ப ஒலி உத்திகளைப் பயன்படுத்தி கொண்டு வரலாம். ஒரு பொருளின் ஒலியினைக் கீழிருந்து மெதுவாகக் கூட்டிக்கொண்டு வரும் போது அப்பொருள் மெல்ல மெல்ல மேடையை அண்மித்துவரும் உணர்வு ஏற்படும். இவ்வாறாக பல வகையான ஒலி சம்பந்தப்பட்ட உத்திகளை நாடகத்தில் கையாளலாம். சினிமாவிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் ஒலியமைப்பின் உச்சப் பயன்பாட்டைக் காணமுடியும். இவை நாடகம் யதார்த்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உணர்வினை பார்ப்போர் மனதில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

## வேட உடை ஒப்பனை :

நாடகத்தில் மிக முக்கிய அம்சமாக இது உள்ளது. நாடகத்தில் நடிகனே பிரதான மூலமாவான். இந் நடிகனது உரு மேற்கொள்ளல் மூலமே நாடகம் நடாத்தப்படுகின்றது. இந் நடிகனைக் கதாபாத்திரமாக மாற்றுவதற்கு வேட உடை ஒப்பனையே உதவுகின்றது. இது ஒருவரை இன்னொருவராக மாற்றும் பணியைச் செய்கிறது.

பாத்திரத்துக்குப் பொருத்தமாக உடை அணிதல் உடல்பூச்சி, அணிகலன்கள் என்பன இவற்றில் உள்ளடங்கும். நாடகத்திற்கு உடை ஒப்பனை செய்யப்படுவதால் பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன. பாத்திரங்களின் பால், வயது, அந்தஸ்து, பண்பாடு, மதம் முதலியவற்றை வெளிக்காட்டுதல் உணர்வைத் தோற்றுவித்தல், பெருங்காட்சிப் பண்பை உருவாக்கல், நடிப்பை இலகுவாக்கல் என்பன அவற்றுட் சில.

ஒரு நாடகத்திற்கு வேட உடை ஒப்பனை செய்பவர் பல்வேறு விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். நாடகம் யதார்த்த நாடகமா, குறியீட்டு நாடகமா என நாடகத்தின் பாணியைக் கவனத்திற் கொள்ளுதல் அவசியம். அத்துடன் நாடகத்தின் காலத்தையும் இடத்தையும் கவனத்தில் எடுக்க வேண்டும். வரலாற்று நாடகமாயின் அதன் காலத்தையும் எங்கு நடைபெற்றதோ அந்த இடத்தையும் உடை ஒப்பனை பிரதி பலிக்கவேண்டும். மேலும் பாத்திரத்தின் வயதுக்கு பொருத்தமாகவும் பொருளாதார அந்தஸ்து மனநிலை என்பவற்றையும் கவனத்திற் கொண்டும் உடை ஒப்பனை செய்யப்பட வேண்டும். பாத்திரத்தின் பண்பாடு, சூழல் என்பவற்றையும் உடை ஒப்பனை பிரதிபலிக்கவேண்டும். இவற்றுக்கும் மேலாக உடை ஒப்பனையானது நடிகரின் நடிப்பைக் கட்டுப்படுத்தாதவாறும், கற்பனைகளோடும் ஆக்கத்திறனோடும் செய்யப்படவேண்டும்.

ஒப்பனைக்குப் பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. முகத்தில் தெரியும் அடித்தளங்கள் மறைய கிரீஸ் *(Greese)* பூசப்படும். அதேபோல் கன்னங்களில் செம்மை தோன்றுவதற்கு ஈர ரவுஜ் *(Rouge)* பாவிக்கப்படும். அத்துடன் அழகான வரிகள் இடவும், கண்களுக்கும் உதட்டுக்கும் லைனர்கள் பயன்படுத்தப்படுகின்றன. புருவத்திற்குத் தீட்ட ஐபுரோ பென்சில் பாவிக்கப் படுகின்றது. முகத்தில் எண்ணெய்ப்பசை போக்க தியேட்டர் பவுடரும் முகம் மேலும் ஒளிவீச டச்சரும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் இவ் ஒப்பனைக்காக

முத்து வெள்ளை, வர்ணப்பவுடர், உதட்டுச்சாயம், பவுண் தூள், சில்வர்தூள், சீக்குவின்ஸ், மணிகள், மாலைகள், வெல்வெட் துணி, காதணி, காப்பு, தலைப் பாகை தும்பு என பல்வேறு பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றன.

நடிகர்களின் முகம், உருவம், உடை எல்லாவற்றையும் பாத்திரங்க ளுக்கேற்ப மாற்றலாம். பாத்திரங்களின் உணர்வையும் ஒப்பனை மூலம் கொண்டு வரலாம். கண், மூக்கு, உதடு என்பவற்றை உணர்வுக்கேற்ப பெருப்பித்துக் காட்டலாம்.

பாத்திரங்களுக்கு உடை அணிவிக்கும் போது ஒரு நடிகரின் உடை நிறத்துடன் மற்றைய நடிகரின் உடை நிறம் மோதாவண்ணம் அணிவிக்க வேண்டும். அத்துடன் ஒளியமைப்பின் நிறபேதங்களையும் கருத்திற் கொண்டு உடை நிறம் தெரியப்படல் வேண்டும். காட்சி, சோடனைக்குப் பொருத்தமாகவும் நிறம் அமைய வேண்டும்.

அணிகள் தேர்ந்தெடுக்கும் போதும் சில விடயங்களைக் கவ னத்திற் கொள்ளவேண்டும். புராண வரலாற்று நாடகங்களாயின் மகுடம், குண்டலம், வாகுவளையம், வீரகண்டை அரைஞான், ஐம்படைத்தாலி, பதக்கம், தோளணி, காதணி, கங்கணம், கைவளை, கிண்கிணி, புஜகீர்த்தி, சடைநாகம், சூரியபிரபை, சந்திர பிரபை, வீரக்கழல், புல்லாக்கு, ஒட்டியாணம் போன்ற அணிவகைகளைப் பயன்படுத்துவர். மேலும் பணக்காரியாயின் அதிகபட்ச வைர நகைகளையும், ஏழையாயின் கில்ட் அல்லது பாசியாலான நகைகளையும், குறத்தியாயின் நிறைய பாசிமணி வகைகளையும், துறவியாயின் உருத்திராட்ச மாலைகளையும் என பாத்திரப் பொருத்தங்களுக்கு ஏற்ப அணிகள் அணிவிக்கப்பட வேண்டும். பாரம்பரிய நாடகங்களிலேயே உடை ஒப்பனை கூடுதலாகப் பயன்படுத்தப் படுகின்றது. ஒப்பனைக் கலை தற்காலத்தில் அறிவு நிரம்பப் பெற்றவர்களைக் கொண்ட பல நிறுவனங்களினாலும் வளர்க்கப்படுகின்றது. தமிழ் சினிமாவில் இந்தியன், ஔவைசண்முகி, தசாவதாரம் முதலியவற்றில் இவை உச்சம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

## இசையமைப்பு :

நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்ற உத்திகளுள் இசையும் முக்கிய மானதாகும். நாடகத்தின் உணர்வுகளை பார்ப்போருக்கு கொண்டு சேர்ப்பதில்

இசையின் பங்கு முதன்மையானதாகும் இசையமைப்பு நாடகத்திற்குப் பக்கதுணை நல்குகின்றது. நடனத்திற்கு தாளம் எவ்வளவு முக்கியமோ அவ்வ எவுக்கு நாடகத்தின் வசனப் பொலிவிற்கும் உணர்வு வெளிப்பாட்டிற்கும் இசை இன்றியமையாததாக இருக்கின்றது. பாத்திரங்கள் பேசுகின்ற வசனங்களால் மாத்திரமன்றி இசையின் துணையுடனேயே அப்பாத்திரங்களின் துக்கமோ, சந்தோஷமோ போன்ற உணர்வுகளையெல்லாம் சிறப்பாக வெளிக்கொணர முடிகின்றது. ஒவ்வொரு பாத்திரமும் நடிப்பாலும், பேச்சாலும் உணர்வினை வெளிப்படுத்தினாலும் அவ்வுணர்வுக்கு அழுத்தம் கொடுத்து அதனைப் பார்வையாளருக்கு எடுத்துச் செல்வது இசையின் பயன்பாடு எனலாம்.

நாடகத்துக்குப் பயன்படுத்தப்படுகின்ற இசையை பின்வருமாறு வகைப் படுத்தலாம். கரு இசை, மன உணர்வு இசை, பின்நோக்கு இசை, குறியீட்டு இசை, இசைவிளைவு என்பவை அவை. கரு இசை என்பது நாடகத்தின் கரு/ அடிப்படைச் செய்தியின் ஒலியாகும் நாடகம் முழுவதும் வந்து சேரும் இவ் இசை நாடகத்தினைக் காவிச்செல்லும் இசையாக அமையும். மன உணர்வு இசை என்பது பாத்தி ரங்களுக்கு அடிக்கடி ஏற்படு கின்ற மன உணர்வுகளை பார்ப்போருக்குக் கொண்டு செல்லும் இசையாகும். பின்நோக்கு இசை என்பது முன் நடந்த ஒரு நிகழ்வை திரும்பத் திரும்ப நினைவுக்கு கொண்டுவரப் பயன்படுத்தப்படும் இசையாகும். குறியீட்டு இசை என்பது குறிப்பிட்ட சம்பவத்தை குறியீடாக உணர்த்தி நிற்கும் இசையாகும். உதாரணமாக காடு ஒன்றைக் காட்டுவதானால் காட்டின் ஒலிகளை குறியீடாக வெளிப்படுத்துவதாகும். இசை விளைவு என்பது குண்டுவெடிக்கும் ஒலி, கதவு தட்டும் ஒலி, குதிரை ஓடும் ஒலி முதலியவற்றைக் கொண்டு வழங்கப்படும் இசையாகும். இவை எல்லா வகையான இசையும் ஒரு நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்றது.



இவ்வாறு நாடகத்தில் நடிகர்களின் பேச்சின் உணர்வுகளை வெளிப் படுத்துவதற்கு அப்பால் நடிகர்கள் பேசாமல் சிலையாய் நிற்கும் வேளையிலும்

அவர்களது நிலையை இசையின் துணையுடன் இனம் காட்டிவிடலாம். உதாரணமாக சோகமே உருவாகிய ஒரு பெண் தன்னந்தனியாக மேடையில் நிற்கின்றாள் எனில் பேசவோ, அழவோ நாதமில்லாது நிற்கும் அவளின் நிலையை பின்னணியாக தம்புராவையோ வயலினையோ அழவைப்பதன் மூலம் வெளிப்படுத்திவிடலாம் அல்லவா. அதுபோன்றே மகிழ்ச்சியோ, பயமோ, கோபமோ என எந்த உணர்ச்சியாயினும் நாடகத்தில் இசையோடு அது வெளிப்படுத்தப்படும் போது அது தரும் தாக்கம் பார்வையாளர்களுக்கு அதிகமாகும். சினிமாவிலோ, தொலைக்காட்சி நாடகங்களிலோ இவ்வாறு இசை வழங்கப்படுவதனை நாங்கள் அனுபவித்திருக்கின்றோம். இசை மிகவும் சக்தி வாய்ந்தது. நாடகத்துடன் இசை இணையும் போது நாடகமும் சக்தி பெறுகின்றது. இவ்வாறு இசை வழங்கப்படும்போது அது பார்ப்பவரை சங்கீதத்தால் கவர்ந்திழுக்காது உணர்வு வெளிப்பாட்டிற்கு ஏற்ப அமைக்கப்படுதல் அவசியமானதாகும்.



## காட்சியமைப்பு :

கடைசியாக நாடக நிகழ்வுக்கு மேடையைப் பயன்படுத்துவது பற்றி நோக்குவோம். எழுத்துருவிலுள்ள விடயத்தை மேடை நிலைக்குக் கொண்டு வரும்பொழுது அதற்கான சூழலை உருவாக்கிக் கொடுத்தலே காட்சியமைப்பாகும். இக் காட்சியமைப்பு நாடகத்தின் ஒவ்வொரு காட்சிக்கும் மாறும் அரங்க அமைப்பாகும். பாரம்பரிய நாடகங்களில் பாட்டு, வசனம் மூலமே காட்சியமைப்பை வெளிப்படுத்தினர். அதன்பின்னர் இயற்கைப் பின்னணிகளைக் காட்ட திரைகள் பயன்படுத்தப்பட்டன. எனினும் உள்ளக அரங்கின் தோற்றத்துடனேயே பிரக்ஞைபூர்வமான காட்சியமைப்புக்கள் தோன்றத் தொடங்கின. இயற்பண்பு, யதார்த்தவகை நாடகங்களுக்கு தத்துரூபமான காட்சியமைப்புக்கள் (முப்பரிமாணம் கொண்ட) செய்யப்பட்டன. இவை காட்சி மாற்றங்களின் போது மிகவும் சிரமம் கொடுத்ததால் குறியீட்டு வகை நாடகங்களில் குறியீட்டுப் பாங்கான காட்சியமைப்புக்கள் கொண்டுவரப்பட்டன. தற்காலத்தில் நாடகத்தின் மோடிக்கேற்ப காட்சியமைப்புக்கள் செய்யப்படுகின்றன. காட்சியமைப்பு என்பது முப்பரிமாணம், மற்றும் இருபரிமாணம் கொண்ட பொருட்களை மேடையில் இருத்தி, வர்ணம் தீட்டி, ஒளிபாய்ச்சி அதன்வழி நாடக நிகழ்வுக்கான தளத்தை உருவாக்குதலாகும்.

நல்ல காட்சியமைப்பு என்பது சித்திரம் அல்லது படம் போன்றதாகும். ஒவ்வொரு காட்சியமைப்பு ஒவ்வொரு ஓவியம் போன்றமைதல் வேண்டும். மேடையில் மேடைப் பொருட்கள் வைக்கப்படும்போது அவற்றில் சமநிலை பேணப்படுவதோடு வர்ணப் பாவனையிலும் ஒரு பக்கம் குவிவு இல்லாமல் சமநிலையில் அமைதல் வேண்டும். எனினும் மேடைப் பொருட்கள் அதிகம் உந்தப்பட்டு நடிகன் பின்னுக்குத் தள்ளப்படவும் கூடாது. நடிகனின் நடிப்புக்கு அவை இடையூறாக அமையவும் கூடாது.

மேலும் நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளை மேடையில் தெரிகின்ற எந்தப் பொருளும் நாடகக்காட்சியுடன் சம்மந்தப்பட்ட பொருளாகவே கருதப்படும். ஆகவே காட்சியுடன் சம்மந்தப்படாத எந்தப் பொருளும் நிகழ்வு நடைபெறும் அவ்வெல்லைக்குள் இருத்தல் ஆகாது. அத்துடன் நாடகம் நடை பெற்றுக்கொண்டிருக்கின்ற சமயம் திரை இழுக்கவோ மேடைப்பொருட் களைச் சீர்ப்படுத்தவோ எனச் சிலர் குறுக்குமறுக்காகச் செல்லுதலும் தவிர்க்கப் படல் வேண்டும். அது பார்வையாளரின் உணர்வினைத் திசை திருப்பும் நடவடிக்கையாக அமைந்துவிடுகின்றது ஆகவே நடைபெறும் நாடகக் காட்சியானது எந்தவித வெளித்தாக்கங்களும் இன்றி நடைபெறுதல் வேண்டும்.

இவ்வாறாக நாடகத்தில் ஒளியமைப்பு, ஒலியமைப்பு, ஒப்பனை, இசையமைப்பு, காட்சியமைப்பு ஆகியன நாடகத்தை மேலும் சிறப்படையச் செய்வதற்குத் துணை நல்குவதைக் காண்கிறோம். ஆகவே நாடகக்கலையில் ஈடுபடுபவர்கள் நடிகர்களையும் அவர்களின நடிப்பையும் நம்பி மட்டும் நாடகம் போடாமல் மேற்கூறப்பட்ட நாடக உத்திகளிலும் கவனம் செலுத்துவதன் ஊடாகக் காத்திரமான பெறுமதியான பார்ப்போருக்கு அதிக தாக்கத்தைக் கொடுக்கும் நாடகங்களைக் தயரிக்க முடியும் என்பது திண்ணம். எமது பிரதேசத்திலும் ஒவ்வொரு நாடகக் குழுக்களிலும், மன்றங்களிலும் திறன் வாய்ந்த கலைஞர்கள் இருப்பார்கள். அவர்களை இனங்கண்டு ஒவ்வொரு உத்திகளுக்கும் பொறுப்பாக ஒவ்வொருவரை நியமித்து அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளையும் கொடுத்து துறைசார் வல்லுனர்களாக்கி பின் அவர்களை நாடகத்தில் இணைத்து பயன்படுத்துவதன் ஊடாக சிறந்த நாடகங்களைத் தயாரிக்கலாம். அப்போது நாடகக் கலை வளரும், நாடகத்திற்கு ரசிகர்களும் அதிகரிப்பார்கள்.



# த னி மை


சொந்தங்களெல்லாம்
சந்தர்ப்ப வாதம்
நட்புகளெல்லாம்
நம்பிக்கைத் துரோகம்
நொறுங்கிப் போன மனசுடன்
நொந்து கிடக்கும் என் பொழுதுகள் மட்டுமே
யதார்த்தம்

நெல்லுக்கும்
புல்லுக்கும் - ஏன்
கல்லுக்குங் கூட
மழையாய்ப் பொழிந்து மகிழ்வேன்
செய்நன்றி கொல்லும் - உம்
செந்தணலின் அனலில்
மெழுகாய் உருகி வடிவேன்

தலை சாய்க்கத் தோள் தேடித் தோற்பேன்
போற்றும் தலைவனிடம் நான் என்ன கேட்பேன்
இன்னும்
நன்மை செய்து துன்பம் வாங்கும்
உள்ளம் கேட்பேன்

தூரத்தில் காணும் போதே
துள்ளி வரும் நாய்க் குட்டியே!
நிர்ப்பந்தத்தின் பேரால்
நிதமும்
பொய் முகங்களுடன்
புன்னகை செய்து
புண்பட்டுப் போன - என்
மனசுக்கு மருந்தாக
நீயாவது ஒரு தடவை
வாஞ்சையுடன் வாலாட்டு.

■ தருமலிங்கம் தயாபரம்



# நவீனத்தின் தோற்றத்தைப் புரிந்துகொள்ளல்

**க.மோகனதாசன்**

> **"மொடேனிஸம் என்பது பொதுப்படையாக நோக்கும் போது, அது மேற்கத்தேயக் கலையில் மாத்திரமல்லாது, மேற்கத்தேயப் பண்பாட்டிலே ஏற்பட்ட வேண்டுமென்றே செய்யப்பட்டனவும், தடையற்ற பண்புடையனவுமான, மரபுத்தள விடுபாடுகளைக் குறிக்கும்."**
>
> **பேரா.கா.சிவத்தம்பி**

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்தே தான் யார், எங்கிருந்து வந்தோம், எங்கே போகிறோம், தன்னைச் சூழவுள்ள இயற்கை எப்படித் தோன்றியது, எப்படி இயங்குகிறது எனப் பல்வேறு கேள்விகளை எழுப்பி அதற்கு விடைகாண முயன்று வந்துள்ளான்.

இயற்கை பற்றியும் பிரபஞ்சம் பற்றியும் மனிதனுக்குக் கிடைத்த விடைகள் மனுக்குலத்தின் அவ்வக்கால அறிவியல் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப மாற்றம் அடைந்துவந்திருக்கிறது. இம்மாற்றங்களை மூன்று பெரும் கால கட்டங்களாக வகுக்கலாம்.

1. பண்டைய காலம்
2. மத்திய காலம்
3. நவீன காலம்

**பண்டைய காலம் :**

இது வரலாற்றுக்காலம் தொட்டு கிபி 6ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியாகும். அதாவது தொல் பழங்குடிகளின் வாழ்வு தொடங்கி முடி

மன்னர்கள் அடிமை எசமானர்கள் வரையான காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியில் பூமி, பிரபஞ்சம் பற்றிய புரிதலில் பூமியே மையமாகவும் பிறகோள்கள் அனைத்தும் இதையே மையமாகக் கொண்டு இயங்குவதாகவும் கருதப்பட்டது. இக்காலத்தில் கடவுள் கருத்து, கடவுள் மறுப்புக் கருத்து, இயக்கவியல் கருத்து, இயக்கவியல் மறுப்புக் கருத்து ஆகிய இருவேறு சிந்தனைப் போக்குகளையும் காணமுடிகிறது. இக்காலத்தில் சிந்தனையாளர்களாக பொருள் முதல் வாதத்திற்கு வித்திட்ட தேலஸ் (கி.மு. 624 - 547), அனாக்சிமான்டர் (கி.மு. 610 - 546), அனாக்சி மெனிஸ் (கி.மு.588 - 525), ஹெராக்றிட்டஸ் (கி.மு. 544 - 483), கருத்து முதல்வாதியான பிளாட்டோ (கி.மு. 427 - 347), அரிஸ்டோட்டில் போன்றோரைக் குறிப்பிடலாம்.

**மத்திய காலம் :**

இது கி.பி 6ம் நூற்றாண்டு தொடங்கி 14ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியாகும். நிலமானிய முறை வலுப்பெற்று பேரரசுகளின் ஆட்சியுருவான காலகட்டமாகும். பேரரசர்கள் இறைவனின் தூதுவர்களாகச் சித்திரிக்கப்பட்டு, இவர்களுக்கு விசுவாசமாகவும் அடிபணிந்தும் கிடந்து வேலை செய்வதே இறைவனுக்குச் செய்யும் சேவையாகும் எனும் கருத்து முதல்வாதத்தின் மூலம் பேரரசுகளும் மத நிறுவனங்களும் எல்லாம் வல்ல அதிகார மையங்களாக இக்காலப்பகுதியில் ஆக்கப்பட்டிருந்தன.

புனித அகஸ்டின், தாமஸ் அக்வினாஸ் போன்ற மதப் பாதிரிமார்களே இக்காலப்பகுதியின் தத்துவ கர்த்தாக்களாக விளங்கினர். இதனால் பண்டைத் தத்துவத்தின் பொருள் முதல்வாதக் கடவுள் மறுப்புக் கொள்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு கடவுள் நம்பிக்கையூட்டும் கருத்து முதல்வாதக் கூறுகளே முதன்மைப்படுத்தப்பட்டன.

**நவீன காலம் :**

இது 15ம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக் காலம் தொடங்கி 19ம் 20ம் நூற்றாண்டு காலம் வரையான சிந்தனைகளை உள்ளடக்கியதாகும். புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், தொழிற்புரட்சி, முதலாளித்துவத்தின் தோற்றம் என்பன நிலமானிய முறைமையையும் பேரரசுகளான முடிமன்னர் ஆட்சியையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து முதலாளிய ஜனநாயக தேசிய அரசுகள் அமைய வழிவகுத்தன.

முதலாளியத்தின் உச்சகட்ட வளர்ச்சியாக ஏகாதிபத்தியம், அவைகளுக் கிடையிலான மோதல்கள், சோசலிஷம், கம்யூனிஷம் முதலான கருத்தாக்கங்களின் எழிச்சி அவற்றுக்கான போராட்டங்கள், கட்டுமானங்கள் ஆகிய அனைத்திற்குமான தத்துவங்களின், விஞ்ஞான பூர்வமான சிந்தனைகளின் காலப்பகுதியாக இது கொள்ளப்படுகிறது.

இக்காலப் பகுதியில் புது யுகப் பொருள் முதல்வாதச் சிந்தனையாளர் எனப் போற்றப்படும் பிரான்ஸஸ் பேக்கன், அறியொணாக் கொள்கையை முன்வைத்த இம்மானுவல் காண்ட், இயக்கவியல் கொள்கை நிலை நாட்டிய ஹெகல், பொருள்முதல்வாதக் கருத்தாக்கத்தை நிறுவிய பாயர் பாக், இயக்கவியல் பொருள்முதல்வாதம் மற்றும் வரலாற்றியல் பொருள்முதல்வாதம் ஆகிய தத்துவ மூலவர்களான கார்ல்மாக்ஸ், பிரடறிக் ஏங்கல்ஸ் போன்றவர்கள் பல்வேறு தத்துவங்களை முன் வைத்தனர். இவையெல்லாம் சேர்த்துத்தான் நவீன காலத்தை உருவாக்கின. இதனை மேலும் புரிந்துகொள்ள மூன்று சிந்தனை மரபுகளின் தத்துவங்கள் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

## 1) கார்ட்டீசின் அறிதல் முறை

கணிதவியல் தத்துவ வாதியாக விளங்கிய டேக்கார்ட் (1956 - 1650) என்பவரின் பெயரினாலேயே இவ் அறிதல்முறை அழைக்கப்படுகின்றது. அனுபவமாயிருந்த அறிதல் முறையைத் தர்க்கத்திற்குட்படுத்தியும் அறிதல் செயற்பாட்டில் சிந்தனையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியும் பகுத்தறிவு வயப்பட்ட அணுகு முறையினை முன் வைப்பது இவரது அணுகுமுறையாகும்.

## 2) அறிவொளிக்கால சிந்தனை மரபு

18ம் நூற்றாண்டில் பிரான்சில் தோன்றிய இச்சிந்தனை மரபு, வரட்டுத் தனமான மதக் கோட்பாடுகளுக்கும், பிரபுத்துவ அதிகாரத்துக்கும் எதிராகக் குரல் எழுப்பி அறிவார்ந்த சனநாயக சிந்தனைகளுக்கு முக்கியத்துவமளித்தது. இது கருத்தியல் ரீதியான மாற்றங்களை எதிர்பார்த்தது. இச்சிந்தனை மரபின் முன்னோடிகளாக வால்டேர், ரூஸோ போன்றோரைக் குறிப்பிடலாம்.

### 3) மார்க்சியச் சிந்தனை


கார்ல் மாக்ஸ் (1818-1883), ஏங்கெல்ஸ் (1820-1895) ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட இத்தத்துவம் அறிதல் முறையில் மட்டுமல்லாது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத்துறை அனைத்திலும் புரட்சிகரமானதோர் அணுகு முறையைக் கொண்ட தத்துவமாக விளங்கியது. இது தனக்கு முன் விளங்கிய தத்துவ முறைகளை உள்வாங்கி அவற்றின் தவறுகளைக் களைந்து புதிய ஓர் அணுகுமுறையினை முன்வைத்தது. இது இயக்கவியல் பொருண்முதல்வாதம், வரலாற்றுப் பொருண்முதல்வாதம் எனும் கருத்தோட்டம் வழியாக பேரண்டத்தையும் சமூகத்தையும் அணுகி விளக்கியதோடு, உலகைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.

மேற்கூறப்பட்ட சிந்தனைப் போக்குகள் எல்லாம் முன் மொழியும் பிரதான கருத்துக்களாக பகுத்தறிவு, சனநாயக மயப்பாடு, மதச்சார்பின்மை என்பனவே வலியுறுத்தப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக பல விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகளும் (Research), வெளிப்படுத்துதல்களும் (Discovery), கண்டுபிடிப்புக்களும் (Invention) இவ்வாதங்களை பலப்படுத்துகின்றன.

இதில் சாள்ஸ் டார்வினுடைய கூர்ப்புக்கொள்கை (Evaluation Theory) முக்கியமானதாகும். அதாவது 'X' எனும் ஒரு மூதாதையிலிருந்து மனிதனும் குரங்கும் தோன்றினர் எனவும் தக்கன மட்டுமே பிழைக்கும் எனவும் கூறுவதோடு அதற்கான ஆதாரங்களையும் அறிவியல் ரீதியாக முன் வைக்கின்றார். இக்கூர்ப்புக் கொள்கை கடவுளினடியாகத் தோற்றம்பெற்ற படைப்புக் கொள்கையைக் கேள்விக்குள்ளாக்கியது. இவரோடு சிக்மன் பிராய்ட்டும் தமது உளப்பகுப்புக் கோட்பாட்டோடு இணைகிறார். அதாவது மனித நடத்தைகளுக்கு காரணம் அவனது இயல்பூக்கமான செயற்பாடுகளே ஆகும் என்கிறார். இதுவும் இவ்வளவு காலமும் இருந்த கடவுள்தான் மனித நடத்தைகளைத் தீர்மானிப்பவர் எனும் கருத்தியலை நிராகரிப்பதாக அமைகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அச்சியந்திரமும் நீராவி இயந்திரமும் கண்டுபிடிக்கப் படுகின்றன. மனிதன் அதீத சக்திபெற்றவனாக மாறுகின்றான். மேலும் மரபணுக்கள்

கண்டுபிடிக்கப்படுகின்றன. இதனால் சந்ததி உருவாக்கம் பற்றி விஞ்ஞான அத்தாட்சிப்படுத்தல்கள் முன் வைக்கப்படுகின்றன. இவையெல்லாம் சேர்த்து கடவுளைக் கேள்விக்குள்ளாக்கின. இச்சந்தர்ப்பத்தில் தான் நீட்ஷே கடவுள் இறந்து விட்டார் எனக் கூச்சலிடுகின்றார்.



மேற்கூறிய எல்லா விடயங்களும் சேர்த்து இதுவரை காலமும் மரபுச் சமூகத்தில் சாஸ்வதம் என எண்ணியிருந்த மதம், கடவுட் கோட்பாடு போன்றவற்றை நிராகரித்ததோடு புரட்சிகரமான மாற்றத்தையும் மேலைத்தேயச் சமூகத்தில் ஏற்படுத்தின. இவையெல்லாம் பாரம்பரிய சமூகத்தின் அழிவிலிருந்து தோன்றின. இதனைத்தான் நவீனம் என ஒற்றைச் சொல்லால் அழைக்கின்றோம். இந்த ஒற்றைச் சொல்லைப் புரிந்துகொள்ள இன்னும் சில சொற் பிரயோகங்களை அறிதல் அவசியமாகின்றது.

Modern - நவீனம்
Modernity - நவீனமயமாகும் தன்மை
Modernization - நவீன மயமாதல்
Modernidm - நவீனத்துவம்

நவீனம் என்பது பழமையும் வழிவழியே மரபானதுமான விடயங்களை மீறும் நோக்கம் கொண்ட புரட்சிகர மாற்றம் எனப்படுகின்றது. நவீனமயமாகும் தன்மை எனும் போது நவீனத்தைப் படிப்படியாக உருவாக்கத் தொடங்கும் அரசியல் சமூகப் பின்னணியாகும். நவீனமயமாதல் எனும் போது பாரம்பரிய சமூகம் முற்றுமுழுதாக மாறுதலடைதலாகும். "நவீனத்துவம் எனும் போது அது மேற்கத்தையக் கலை இலக்கியங்களில் மாத்திரமல்லாது மேற்கத் தேயப் பண்பாட்டிலே ஏற்பட்ட வேண்டுமென்றே செய்யப்பட்டனவும் தடைப்பற்ற தடையற்ற பண்புடையனவுமான மரபுத்தளவிடுபாடுகளைக் குறிக்கும்" எனக் கூறுவர். இதனையே பாரதி "சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது..." எனக் கூறினான்.

இந்நவீனம் கீழைத்தேயத்தில் மேனாட்டு ஆட்சியுடன் வருகிறது. மேற்குலகில் நவீனம் முந்தியிருந்த விடயங்களைஅழித்து புதியதை உருவாக்க கீழைத்தேயத்தில் பாரம்பரிய மீட்புணர்வை ஏற்படுத்தியது. இதனால் பழமைக்கு புதிய கட்டமைப்பு ஏற்பட்டது. இதனை ஏற்படுத்தியவர்களில் இந்தியாவில் மறைமலையடிகள், அண்ணாத்துரை போன்றோரும் இலங்கையில் வித்தியானந்தன், எதிர்வீரசரச்சந்திர போன்றோரும் இவ்விடயத்தில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

நவீனம் நடையுடை பாவனைகளில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்து தனித்துவ கலாசாரங்களை கேள்விக்குள்ளாக்கினாலும் நவீனத்தினை கீழைச் சமூகம் தன்வயப்படுத்தியிருப்பதும் உண்மையாகும். இதற்கு குறியீடாகத் திகழ்பவரே மகாகவி பாரதியார் ஆவார்.

நவீனம் தந்த விடயங்களை இங்கு சுருக்கமாகப் பார்த்தலும் அவசியமாகும். அதிகாரப் படி நிலைச் சமூகத்தை மாற்றியமைப்பதற்காக "சட்டத்தின் முன் சமத்துவம்" எனும் கொள்கையை முன் வைத்தது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக அதுவரை காலமும் குழு நிலையில் இருந்து வந்த கல்வி முறை எல்லோருக்குமாக பரம்பலடைந்தது. அதாவது எந்த மனிதனும் கல்வி மூலம் உயர்நிலையடையலாம் என அனைவருக்குமான கல்வியை அறிமுகப்படுத்தியது. இங்கு சாதாரணமானவனாகக் கருதப்பட்ட மனிதன் அசாதாரணமானான்.

எனவே நவீனத் தோற்றம் என்பது வரலாற்றின் முக்கிய திருப்பு முனையாகவும், பல்வேறு மாற்றங்களை மானிடர்க்கு வழங்கிய உலக தரிசனமாகவும் திகழ்கின்றது. மதக் கொள்கையிலிருந்து மனிதனைப் பிரித்தெடுத்து அவனுக்கு சர்வ வல்லமையினை வழங்கி அதி மானுடனாக்கி (Super Man) எதையும் எதிர்கொள்ள அவனால் முடியுமென்ற நம்பிக்கையினையும் பலத்தினையும் வழங்கியது. பகுத்தறிவு, தர்க்கம், பொதுமைப்படுத்தல் என்பன மூலம் சமயச் சார்பின்மை, சனநாயக மயப்பாடு என்பனவற்றை சமூகங்களிடையே விதைத்து, சமத்துவமான சமூகத்தைக் கட்டியெழுப்ப நவீனம் விளைகிறது எனலாம்.



# கூத்து அன்றும் இன்றும் ஒரு பார்வை

திருமதி.உமா சிறிசங்கர்

ஈழத்தின் கிழக்குக் கரையோரப் பகுதியில் மட்டக்களப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. கிழக்கே கடலையும் கடல்சார்ந்த பிரதேசங்களையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு பிரதேசம், மேற்கே செல்லச் செல்ல பல்லாயிரக் கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயல் நிலங்களையும், காடுகளையும், தரிசு நிலங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது. இப்பிரதேசத்தின் நடுவே வடக்குத் தெற்காக முப்பது மைல் நீண்டு மட்டக்களப்பு வாவி என்றொரு நீர்ப்பரப்பு காணப்படுகின்றது. கடலோடு கலக்கும் இவ்வாவி கடலிலிருந்து ஏறக்குறைய இருபது மைல்நீளம் வரை உப்பு நீரையும், ஏனைய பகுதி நன்னீரையும் கொண்டுள்ளது. உப்பு நீர்ப்பகுதியில் மீன்பிடித்தலும், நன்னீர்ப் பகுதியைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தலும் இங்கு நடைபெறுதலால் இவ்வாவி பயனுள்ளதாகின்றது.

மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் பகுதிகள் எழுவான்கரை எனவும், மேற்குப் பகுதிகள் படுவான்கரை எனவும் அழைக்கப்படுகின்றன. எழுவான் கரைப்பிரதேசம் மீன்பிடிப்போர் அதிகம் வாழும் கடலும் கடல்சார்ந்த நெய்தல் பிரதேசமாகும். படுவான்கரைப் பகுதி உழவர்கள் நிறைந்து வாழும் மருத நிலத்துடன் முதிரை, கருங்காலி முதலிய மரங்களுடைய சோலைக் காடுகளையும் கொண்ட முல்லை நிலப்பகுதியையும், மலைகளைக் கொண்ட குறிஞ்சி நிலப்பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

இவ்வாறான பகுதிகளிலேதான் வடமோடி, தென்மோடிக் கூத்துகளும், வசந்தன் கூத்து, பறைமேளக் கூத்து, மகுடிக் கூத்து என்பனவும் ஆடப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் இன்று மட்டக்களப்பு பிரதேசத்திலே ஆடப்படும் வடடேமாடி, தென்மோடி ஆகிய இரு கூத்து மரபுகளையே வளர்ச்சியடைந்த மரபுகளாகக் கருதுகின்றனர்.

இக்கூத்துகள் சடங்குக் கோயில்களை அடிப்படையாகக் கொண்டும், பண்டிககைகள், விழாக்களை மையமாகக் கொண்டும் ஆடப்பட்டு வந்தன. வடமோடி, தென்மோடி கூத்துக்கள் இரண்டும் ஆடப்படும் முறைகளில் வேறுபட்ட தன்மைகள் கொண்டவை.

கூத்து என்பது கதை தழுவி வரும் ஆடல் முறையாகும். கூத்தானது ஒரு கிராமத்தில் உருவாகின்ற பொழுது, கூத்திற்கும் அச்சமூகத்திற்குமான உறவு என்பது மிகவும் முக்கியமானதாகும். கூத்து உருவாகும் முறையில், சமூகத்தோடு பிண்ணிப்பிணைந்த தன்மையினைக் காணலாம்.

கூத்து உருவாவதற்கு 5 தொடக்கம் 8 மாதம் வரை எடுக்கின்றது. கூத்து உருவாக்கமே ஓர் ஒழுங்கான முறையில் நடைபெறுவதையும், இவ்வுரு வாக்கலில் ஒரு கிராமத்தில் வாழும் அனைவரும் ஏனைய கிராமத்தில் வாழும் அதே சாதியினரும் ஒன்றுபடுவதையும் காணமுடிகிறது. கூத்து பின்வரும் படிநிலைகளுக்கூடாக உருவாகிறது.

1) ஊர் கூடுதலும் அண்ணாவியார் கதை தெரிதலும்
2) ஊருக்குச் சொல்லுதல்
3) சட்டம் கொடுத்தல்
4) தினக் கூத்து
5) சதங்கை அணிதல்
6) கிழமைக் கூத்து
7) அடுக்குப் பார்த்தல்
8) அரங்கேற்றல்
9) வீட்டுக்கு வீடு ஆடுதல்
10) 2ம் அரங்கேற்றம்

இவ்வாறாகக் கூத்து உருவாகின்ற படிமுறைகளுக்கூடாக, மட்டக்களப்புச் சமூகத்திற்கும், கூத்திற்குமான உறவு பற்றிப் பார்க்கின்ற போது, சமூகச் சமநிலை

பேணப்பட்டமை, அழகியல் உளவியல் தேவைகள் நிறைவேற்றப்பட்டமை, பொழுதுபோக்கு அம்சமாக இருந்தமை, கல்வி பண்பாட்டு அம்சங்கள் ஊக்கப்படுத்தப்பட்டமை, திருமணங்கள் நிறைவேறியமை போன்ற விடயங்கள் நடந்தேறியதைக் காணலாம். இவ்வாறு ஒரு கிராமத்தின் தேவைகள் கூத்தின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றபோது, கூத்திற்கும் சமூகத்திற்குமிடையிலான உறவை விளங்கிக்கொள்ள முடிகிறது.

இவ்வண்ணம் மட்டக்களப்பு மக்கள் அனைவருக்கும் பொதுவான கலையாக அமைந்த கூத்து, கிராமிய மக்களின் முழு அம்சங்களையும் பிரதிபலித்தது. அவர்கள் மத்தியில் வழங்கிய நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள், பழமொழிகள் யாவற்றையும் அது பிரதிபலித்தது எனலாம். அதுமட்டுமன்றி கூத்தானது சமூக ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தியது எனலாம்.

மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் பழகி ஆடப்படும் காலங்களுக்கும், மட்டக்களப்பு சமூக அமைப்பிற்குமிடையே ஓர் ஒற்றுமை காணப்படுகிறது. இதனைத் தமக்குரிய ஓய்வுநேரக் கலையாகக் கொண்ட வேளாண்மைத் தொழில் செய்பவர்கள் தமது விதைப்பு, வெட்டுக்களுடன் இயைய இக்கூத்துப் பழகுவதையும் அரங்கேற்றுவதையும் அமைத்துக் கொண்டனர். இங்கு கூத்தானது அப்பிரதேச தொழில், விழா, காலநிலைக்கு இயையவே சென்றமை புலனாகின்றது.

இதேபோன்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் காலையில் ஆற்றுக்கோ, கடலுக்கோ சென்று பெரும்பாலும் மாலையில் மீண்டும் வருபவர்கள் எனவே இவர்கள் விவசாயிகளைப் போல இடைவிட்டுப் பழகாது தொடர்ந்து ஏழோ எட்டோ மாதங்கள் பழகி கூத்தை முடிக்கின்றார்கள். இவர்கள் புரட்டாதியில் அரங்கேற்றுவது குறிப்பிடத்தக்கது. கார்த்திகை, மார்கழி போன்ற மழைக் காலங்களில் கூத்துப் பழக்குவதோ, அரங்கேற்றுவதோ இல்லை. இங்கும் கூத்து மீனவர்களின் தொழில், பருவகாலம், விழாக்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதைக் காணுகின்றோம்.

கூத்தின் முக்கியத்துவம் என எடுத்துக்கொண்டால் கூத்தானது கூத்தாடும் சமூகத்தினை கட்டிக்காக்கும் விடயமாகக் காணப்பட்டது. அதாவது மட்டக்களப்பின் நிலமானிய அமைப்புக்கும் கூத்துக்கலைக்குமிருந்த அத்தியந்த உறவுகளே

அதை அங்கு இன்னும் அழியாது காத்து வருகின்றன. ஒரு கலை ஏற்கப்படுவதும் ஏற்கப்படாததும் அக்கலை வழங்கும் சமூகத்தின் தேவையைப் பொறுத்தது.

இவ்வாறிருந்த சமூக அமைப்பானது, ஆங்கிலேயர் வருகையின் பின்னர் பல மாற்றங்களை அடைந்தது. அந்த மாற்றங்கள் அச்சமூகத்தில் இருந்த கலைகளிலும் மாற்றங்களைக் கொணர்ந்தது. ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வியும், சுயமொழிக்கல்வியும் சகலநிலை மக்களையும் கல்விபடைத்தோராக்கியது. இன்ன சாதியினர் இன்ன தொழில் செய்பவர் என்ற நிலமை மாறி, வேறு தொழில்களில் ஈடுபடுவோரும் உருவாகினர். பாடசாலைகள் மூலமாக கல்வி கற்கும் பரம்பரை உருவாகியது. பெண்களும் கல்வி கற்கும் நிலை உண்டாகிறது. 1980களில் பாடசாலைகளின் பெருக்கம் அதிகரிக்கின்றது. எழுவான் கரை, படுவான்கரைப் பிரதேசங்களில் எல்லோரும் கல்விகற்கும் நிலை மூலமாக சமூகத்தில் மாற்றமேற்படத் தொடங்கியது.

1980களின் பின்னர் ஏற்பட்ட போர்ச்சூழல், பல்வேறு இடப்பெயர்வு களை ஏற்படுத்துகின்றது. இதன் காரணமாகவும் மட்டக்களப்புச் சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

நவீன தொழில்நுட்பச் சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி என்பன அறிமுகமாவதுடன் கிராமங்களை நோக்கி இவை சென்றதனால் பொழுதினைப் போக்கிக் கொள்ளும் விடயங்களாக இந்த தொழிநுட்ப சாதனங்கள் அமைந்து விடுவதனால் கிராமியக் கலைகளில் பின்னடைவுகள் ஏற்படத்தொடங்கின.

தமிழ் நாட்டுச் சினிமாவின் தாக்கம் என்பது, ஈழத்தைப் பெருமளவில் பாதித்தது எனலாம். ஈழம் சுதந்திரமடைந்து ஒரு தசாப்த காலத்திற்குத் தமிழ்ச் சினிமாவே ஈழத்து நாடக உலகைப் பாதித்திருந்தது. மேலும் தகவல் தொழி நுட்பத்தின் (கணினி) வருகை காரணமாகவும், வீட்டினுள் இருந்தவாறே உலக விடயங்களை அறியும் நிலை ஏற்படுகின்றது. மேற்குறிப்பிட்ட பின்னணிகள் காரணமாக மட்டக்களப்புக் கூடத்தில் பல மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. பாரம்பரிய பொருளாதார அகச்சிதைவு காரணமாக மட்டக்களப்பின் சமூக அமைப்பின் இறுக்கம் மாறியதனால் கூத்து சகல சாதியினர் மத்தியிலும் பயிலப்படும் கலையாக மாறியது.

மேற்கூறப்பட்ட காரணங்கள் கூத்துக்கலையை அது உருவாகும் முறையிலும், அதன் உள்ளடக்க விடயத்திலும் அதாவது சமூக அடித்தளத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தின.

பண்டைய காலத்தில் ஒரு கிராமத்தில் கூத்துப் பழகுவதென்றால் பத்து மாதங்கள் வரை அந்நிகழ்வு நீண்டு செல்லும். அதற்கான காரணம் ஓய்வு நேரம் அதிகமாக இருந்தவை. ஆனால் இன்று இரண்டு மாதங்களில் கூத்தினைப்பழகி கோயிற் சடங்குகளில் ஆடி வருகின்றார்கள். சில கிராமங்களில் அண்ணாவிமார்களின் மறைவின் பின்னாலும், இன்னும் வேறு பல காரணங்களாலும் கூத்து அழிந்துவிட்டதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்கள் இன்று நேரச் சுருக்கத்துடனும், கதைச் சுருக்கத்துடனும் ஆடப்படுகின்றன. கூத்தினது ஆடல், பாடல் வடிவங்களை நவீன நாடகங்களுக்குப் பயன்படுத்தும் முறை உருவாகின்றது. இதுவரை காலமும் ஒரு சாதியினர் ஆடிய கூத்தானது ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் ஊடாக ஈடசாலைகளிலே போடப்படு வதைக் காணலாம். ஆண்களும், பெண்களும் என அனைத்து சாதியினரும் கூத்தினை ஆடுவதைக் காணலாம். மேலும் பாரம்பரியக் கரப்பு உடுப்பும், பூ முடியும், கைப்புஜங்களும் பெற்ற இடத்தினைச் சினிமா அறிமுகம் செய்த நவநவமான உடுப்புகள் பெற ஆரம்பித்தன. இவ்வாறாக சமூக மாற்றம் காரணமாக, கூத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் அமைகின்றன.

இதனடிப்படையில் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் கூத்துக்கள் அரங்கேற்றப்படுகின்றன. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வடமோடிக் கூத்து பாடநெறியாக அறிமுகமாவதுடன் கூத்தினைப் பயில்கின்ற மாணவர் தொகையும் அதிகரிப் பதனைக் காணலாம். இங்கு கூத்துப்பாடல்கள், ஆட்டமுறைகள் என்பன செம்மைப்படுத்தப் பட்டன. பாடல்கள் எல்லோராலும் இரசிக் கத்தக்க வகையிலும் செம்மைப்படுத்தப் பட்டன. இதன்பால் பல இளம் தலைமுறை யினர் ஈர்க்கப்பட்டனர் மட்டுமல்லாது ஈடுபாடு காட்டவும் தொடங்கினர்.

இன்று சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்திலும் வடமோடிக் கூத்து பாடநெறியாக அறிமுகப்படுத்தப் பட்டவுடன் அதன்பால் ஈடுபாடு கொள்ளும் இளம் தலைமுறையினர் ஏராளம்.

இவ்வாறாக மரபுகளின் அடிப்படையில் கூத்துக்களை ஆடுதல், பாடசாலைகளில் மேடையில் கூத்துக்களை ஆடுதல், பல்கலைக்கழகங்களில் கூத்தினை ஆடுதல் என கூத்துக்களை வளர்த்தெடுக்கும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். சிலர் எல்லா மட்டங்களிலும் வேலை செய்கின்றனர். சிலர் ஓரிரண்டுகளில் வேலை செய்கின்றனர். இன்னும் சிலர் ஒன்றிலேயே தங்கியிருப்பர். இவர்களுக்கிடையில் ஆழமான புரிந்துணர்வு காணப்படாமையே இன்றைய துரதிஷ்டமாகும்.

இன்று வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் சமூக மாற்றத்தின் காரணமாக சகல பிரிவினராலும் ஆடப்பட்டு மட்டக்களப்பு தேசிய கலை வடிவங்களாக பேசப்படுகின்றன. பண்பாட்டுணர்வு காரணமாக இன்று பேணப்படும் நிலையிலுள்ளன. சமூகப் பிரக்ஞையுடைய புத்தி ஜீவிகளினால் இன்று கூத்து, சமூகத் தேவைக்கு ஏற்ப வளர்க்கப்படுவதையும் இன்றைய ஈழத் தமிழ் நாடக உலகில் மட்டக்களப்புக் கூத்து முக்கிய இடம் பெறுவதையும் காண்கின்றோம்.

**கூத்து என்பது கதை தழுவி வரும் ஆடல் முறையாகும். கூத்தானது ஒரு கிராமத்தில் உருவாகின்ற பொழுது. கூத்திற்கும் அச்சமூகத்திற்குமான உறவு என்பது மிகவும் முக்கியமானதாகும். கூத்து உருவாகும் முறையில், சமூகத்தோடு பின்னிப்பிணைந்த தன்மையினைக் காணலாம்.**

அந்த வகையில் கூத்திலே ஈடுபாடுடைய அனைவருமே இதய சுத்தியோடு ஈடுபடுபவர்கள் தாம்தாம் இவற்றை செய்கின்றோம் என்று முதன்மைப் படுத்துவது தவறானதாகும். கூத்தை வளர்ப்போர் பக்கம் எந்த செயற்பாடுகளிலும் சாதகம், பாதகம் அமைவது இயல்பு. சுய விமர்சன நோக்கில் தமது பலங்களையும், பலவீனங்களையும் புரிந்து கொள்வதுடன் அனைவரும் இணைந்து கூத்துக்கலைக்கான வளர்ச்சியில் ஈடுபடுவதே கூத்துக்கலை மட்டக்களப்பில் சிறப்படைவதற்கு காலாகின்றன. ■



# கிழக்கிலங்கையில் தமிழாசிரியர்களின் தந்தை எனப் போற்றப்படும் மாமனிதர் - தமிழறிஞர் பேராசிரியர் செல்லப்பா பூபாலப்பிள்ளை பண்டிதர் அவர்கள்

ஆரையூர் இளவல்

தமிழே! அமிர்தே!! எமதுயிரே!!! என்று பாடிப்பாடிச் சாதனைகள் பல புரிந்து மக்கள் மனதில் என்றென்றும் நீங்காது நிலைத்திருக்கும் செந்தமிழ் அறிஞர்களில் மாமனிதர் பேராசிரியர் செல்லப்பா பூபாலபிள்ளைப் பண்டிதர் அவர்களுக்குச் சிறப்பிடமுண்டு.

பண்டிதர் ஐயா அவர்கள் முப்பது அறுபதுகளில் இம்மண்ணில் வாழ்ந்த அத்தனை உள்ளங்களிலும் இன்றும் உயிரோவியமாக ஒளிர்ந்துகொண்டிருக்கின்றார் என்று கூறின் அது மிகையாகாது.

**"சால்வையைப் பூணூலாகச் சார்த்தியே கையில் கருத்தை**
**மாலறக் கூறும் நூலை மறை நிறை கமண்டலமாகக்**
**கோலமார் குடையாந் தண்டம் கொண்டு குருகுலம் நோக்கிப் பூ**
**பாலனாம் தமிழ்சொல் ஆசான் பண்டிதர் வந்தால் அவரோர்**
**சீலமார் நவயுகத்துத் திருமுனி வேதவியாசர் போலவே பொலிவார்"**

என அவரது மாணவர் கவிஞர் இராஜபாரதி பாடியதுபோல் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நெஞ்சில் அஞ்சாமை, நெற்றியில் சிவசின்னமாம் திருநீறு, தேசிய உடைகளான வெள்ளை வேட்டி அதே பால் வண்ணத்தில் வாலாமணி, தோளில் இட்டு மார்பின் குறுக்கால் தரித்த கரைமடித்த சால்வை, நெஞ்சோடு அணைத்த புத்தகம், மறு கையில் குடை, என்றும் மலர்ந்த முகம் இத்தகைய அழகுத் தோற்றத்தில் கல்லடியிலிருந்து மட்டக்களப்பை நோக்கி நாள்தோறும் கம்பீரமாக நடந்துவரும் திருவுருவம் பண்டிதர் செல்லப்பா பூபாலபிள்ளை. அவர்கள் வரும் வழியில் அவரை எதிர்கொள்பவர்கள் பண்டிதர் ஐயா! என்று அன்பொழுகச் சொல்லி மரியாதையாக ஒதுங்கி நிற்கும் மாண்பு.

உலக மொழிகள் அனைத்திலும் தொன்மையும், சிறப்பும், இனிமையும் உடையது செந்தமிழே என்று மேல்நாட்டு நல்லறிஞர்கள் வியந்து பாராட்டும் தகைமையுடைய செந்தமிழுக்கும், சிவசமயத்திற்கும், அனைத்துச் சமூகங்களுக்கும் சேவை செய்வதே பண்டிதர் ஐயா அவர்களின் இலட்சியமாக இருந்தது.

ஐம்பது ஐம்பத்திரெண்டு காலப்பகுதியில் பேராசிரியர் பண்டிதர் ஐயா அவர்களிடம் பாலபண்டிதர் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கற்றுக் கொண்டிருந்தேன். மட்டக்களப்புக் கல்லடியிலுள்ள சரவணை வீதியில் அமைந்திருந்த அவரது மரக்கறித் தோட்டத்தில் வைத்தே அடியேனுக்குப் பாடம் சொல்லித்தருவார். பெரும் பாலும் சனி, ஞாயிறு வார நாட்களில் மாலை வேளைகளில் அந்த மரக்கறித் தோட்டத்தின் பசுமைச் சூழலில் பசுமையான எண்ணங்களும், இயல்புகளும், அன்பும், ஆதரவும், பண்பும் பாசமும்மிக்க பண்டிதர் ஐயாவிடம் பாடம் கேட்பதற்காக ஆரையம்பதியிலிருந்து ஆவலுடன் கால் நடையாகவே கல்லடி வருவேன். தமிழ், இலக்கண, இலக்கியம், யாப்பு, அணி, சங்கத்தமிழ், வரலாறு என்பவற்றுடன் சமயம், சுகாதாரம், விவசாயம், ஆகிய பாடங்களும் கச்சிதமாகக் கற்றுத் தந்தனர்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் முதன்மை மாணவர்களிலொருவரான பண்டிதர் ஐயா அவர்கள் சமய, இலக்கியச் சொற் பொழிவாற்றலில் பெரும் புகழீட்டியவர். ஆலய அரங்குகளிலும், பொது விழா மேடைகளிலும் சொற்பொழிவுகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் தனது குருவான சுவாமி விபுலானந்த அடிகளுக்கு குரு வணக்கம் செய்த பின்னரே சொற்பொழிவாற்றத் தொடங்குவார்.

**"முத்தமிழ் மாமுனி விபுலானந்தன் புகழ்**
**இத்தரை மீதில் இசைத்திடவே - எந்தன்**
**சித்தம் குளிருது ஆனந்தம் பொங்குது**
**செந்தமிழின்பம் பிறக்குதடீ"**

அக்காலங்களில் ஆலயத் திருவிழாக்களில் சிறப்பம்சமாகச் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். பெரும்பாலும் சமயச் சொற்பொழிவுகள் இன்றி ஆலய உற்சவங்களே நடைபெறமாட்டாது என்ற வகையில் சமயச் சொற்பொழிவுகளுக்கு முதன்மை வழங்கப்படும்.

பெரும்பாலும் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கு பண்டிதர் ஐயா அவர்களும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும், ஆசிரியமணி அருணாசலம் தேசிகர் அவர்களும் வித்துவான் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்களும், பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா அவர்களும் அழைக்கப்படு வார்கள். 1960களிலிருந்து அடியேனும் மேற்படி சமயச் சொற்பொழிவாற்று வதற்காக அழைக்கப்பட்டேன். அடியேன் நிகழ்த்தும் சொற்பொழிவுகளுக்குப் பண்டிதர் ஐயா அவர்களே அடியெடுத்துத் தருவார்கள்.

இறைபக்தியும் குருபக்தியும் மிக்கவராக மக்கள் சேவைக் கென்றே மலர்ந்தவரான மூதறிஞரும், மாமனிதரும், பேராசிரியருமான பண்டிதர் செ.பூபாலபிள்ளை ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமும், அவர் ஆற்றிய அரும்பெரும் சேவைகளிற் சிலவும் வருமாறு :

**"தான மிகு ஆரையூர் தக்கபெயர் ஆரைப்பற்றை**
**ஞானமுளார் வாழ்பதியில் தமிழின் - மானமுள்ள**
**பூபாலன் பிறந்தான் பூந்தமிழும் அத்தினமே**
**பூபாளம் பாடிற்றுப் புகழ்"**

**- கலாநிதி க.தா.செல்வராஜகோபால் -**

## வரலாற்றுக் குறிப்புக்கள் :

1. **பெயர்** : பண்டிதர் செல்லப்பா பூபாலபிள்ளை
2. **தோற்றம்** : திகதி - 02.07.1902 இடம் - ஆரையம்பதி
3. **பெற்றார்** : தந்தை - கணபதிப்பிள்ளை செல்லப்பா
   தாய் - சீனித்தம்பி அன்னபூரணி (தனது 12 வயதில் தாயாரையும், 31 வயதில் தந்தையாரையும் இழந்தார்)
4. **திருமணம்** : தினம் - 15.01.1937
   **துணைவியார்** - சுப்பிரமணியம் கமலாவதி
   கல்லடி திரு.ப.சுப்பிரமணியம், திருமதி.சிறீரங்கம் தம்பதியரின் ஏக புதல்வி
5. **மக்கட் செல்வங்கள் :**

   **புதல்வர்கள் -** 1. குழந்தைக்குமரன் 2. சிவபாதசுந்தரம் 3. சிவசண்முகம் 4. பரஞ்சோதி

   **புதல்விகள் -** 1. மங்கையற்கரசி 2. மரகதவல்லி 3. திலகவதி 4. தெய்வநாயகி 5. அன்னபூரணி 6. சரஸ்வதி

**6. இளமைக்கல்வி :**

**ஆரம்பக்கல்வி -** ஆரைப்பற்றை சைவ வித்தியாலயம்

**சிரேஷ்ட கல்வி -** காத்தான்குடி அரசினர் பாடசாலை

**7. உயர்கல்வி :**

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் மாணவனாக 1926ம் ஆண்டிலிருந்து தமிழ், இலக்கண, இலக்கியம், சைவ சமய ஞானத்தைப் பெற்றுத் தன் வாழ்நாள் முழுவதும் விபுலானந்தர் இட்ட பணிகளைச் சிரமேற்கொண்டு செந்தமிழும், சைவமும் வளர்த்தார்.

1924 ஐப்பசி தொடக்கம் 1926 புரட்டாதி வரையும் யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட தமிழாசிரியர் பத்திரம் பெற்றார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் 03.10.1927ந் திகதியன்று தேர்ச்சியடைந்தார். 14.05.1934ந் தினத்தில் சுகாதாரக் கல்விப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

**8. ஆசிரியர் பணி :**

1. 1918 ஐப்பசி 1920 ஐப்பசி வரை காத்தான்குடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கற்பித்தார். (இதே பாடசாலையில் தான் சிரேஷ்ட வகுப்புவரை கல்வி பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது).


2. 1922 கார்த்திகை 1924 புரட்டாதி வரை நிந்தவூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்பித்தார். (இங்கு கற்பிக்கும் காலத்தில் ஆசிரியர் பயிற்சி பெறும் தகுதியைப் பெற்றதால் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்தார்).

3. 01.10.1926 - 10.08.1928 வரை திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணி புரிந்தார்.

4. 21.08.1928ல் இருந்து 31.12.1928 வரையிலான காலத்தில் மட்/காரைதீவு சைவப் பாடசாலையில் ஆசிரியப் பணிபுரிந்தார்.

5. 17.01.1929 - 18.02.1930 வரை கொழும்பு மூர் வீதி ஹனிபா பாடசாலைத் தலைமையாசிரியர் பதவியை ஏற்றுப் பணி புரிந்தார்.

ஆசிரியக் கலாசாலைப் போதனாசிரியர்களுடன் தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்கள்



இப்படம், "பேராசிரியர் செ.பூபாலபிள்ளைப் பண்டிதர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்" எனும் நூலில் இருந்து எடுத்தாளப்படுகின்றது. நன்றி.

6. 01.04.1930 - 28.02.1945 வரை மட்டக்களப்பு கோட்டமுனை புனித செபஸ்தியார் பாடசாலையில் தலைமை ஆசிரியராகப் பணி புரிந்தார்.

7. 01.04.1945 - 30.04.1946 வரை அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

8. 01.05.1946ல் இருந்து 30.07.1962 வரை மட்டக்களப்பு அரசினர் ஆண்கள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றார்.

இந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மட்டக்களப்பில் நிறுவுவதற்கு ஏர்கோல் இட்ட பெருமை நமது பண்டிதர் ஐயா அவர்களையே சாரும்.

**9. சமூக சமயப் பணிகள் :**

வாழ்வாங்கு வாழ்ந்த இப்பெருமகனார் செய்த தமிழ், சமூக, சமயப் பணிகள் அளப்பரியன. அவற்றுள் சில.

1. 1942ம் ஆண்டில் கல்லடி கிராம சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு சமுதாய நலன்புரிப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

2. இதே காலகட்டத்தில் அரச காணிகளைப் பெற்று வீடுமனையற்ற மக்களுக்குப் பங்கீட்டுக் கொடுத்து அவர்களைக் குடியேற்றினார். இவ்விடம் 'வேலூர்' என நாமம் பெற்றது. கல்லடி ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு அண்மையில் அமைந்திருந்தமையால் இந்நாமம் பெற்றது.

**10. விவசாயத்தில் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி :**

3. 1943ல் உலக மகாயுத்த காலத்தில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக தக்க விவசாயச் சுலோகங்களைப் படைத்தளித்து இலங்கை அரசின் பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்றார்.

4. 1953ல் நடந்த கமத்தொழில் போட்டியில் வெங்காயச் செய்கையை மட்டக்களப்பிலும் நல்விளைச்சலைத் தரும்முறையில் செய்யலாம் எனச் சாதனைப்படுத்திக் காட்டி முதற் பரிசைப் பெற்றார்.

5. 1954ம் ஆண்டில் ஆட்டுப்பண்ணை வளர்ப்புப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றார்.

6. 1955ம் ஆண்டிலும் ஆட்டுப்பண்ணை வளர்ப்புப் போட்டியில் மீண்டும் பங்குபற்றி இரண்டாவது தடவையாகவும் முதற் பரிசைப் பெற்றார்.

7. விவசாயத்தின் மேம்பாடுகள் பற்றி சாதனையிலும், போதனையிலும் செய்துகாட்டியதுடன் இதுபற்றிப் பல கட்டுரைகளை 'கமத்தொழில் விளக்கம்' முதலிய பத்திரிகைகளில் வெளியிட்டார்.

**11. சமயப்பணி**

8. 1955ல் அருள்நெறிச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

9. 1955ல் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உறுப்பினரானார்.

10. 1956ல் அகில இலங்கை இந்துமாமன்ற உதவித் தலைவராகப் பதிவி ஏற்றார்.

11. 1956 - 1960ம் ஆண்டு காலகட்டத்தில் இந்து சமயப் பாட உதவிப் பரீட்சகராக நியமனம் பெற்றார்.

**12. பெற்ற பாராட்டுக்களும், விருதுகளும் :**

1. 1962ம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பேராசிரியர் பதவியில் இருந்து இளைப்பாறிய போது மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை பழைய மாணவர் மன்றத்தினால் "பண்பில் சிறந்த பண்டித ரத்தினம்", "செந்தமிழ் சொரியும் திருநிறைச் செல்வர்", "சைவ மணங்கமழும்

தமிழ்த் தலைவர்" என வாழ்த்திப் பண்புபாராட்டுப் பத்திரமும், பொன்னாடையும் பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 11.05.1963ல் இந்நிகழ்வு மட்/ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

2. அப்பொற்கிளியை மட்டக்களப்பு விபுலானந்த குருகுலத்துக்கு அன்பளிப்புச் செய்து அதைத் தனது குருதட்சணையாகச் செலுத்தினார்.

3. 1964ல் கல்வித் திணைக்களப் பாடப்புத்தக ஆலோசனைச் சபையில் அங்கத்துவம் பெற்றார்.

4. 1964ல் சர்வமத காங்கிரசின் உறுப்பினரானார்.

5. 1964ல் மட்டக்களப்பு முத்தமிழ் கலாமன்றத்தினால் பொன்னாடை, தங்கப்பதக்கக் கௌரவம் பெற்றார்.

6. மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவும், சைவ சமய விரிவுரையாளராகவும் செய்த சேவைகளினால் கிழக்கிலங்கையிலுள்ள அனைத்து ஊர்களிலும் வாழ்ந்த இவரது மாணவர்கள் இவரைத் "தமிழாசிரியர்களின் தந்தை" எனப் போற்றிப் பாராட்டினார்கள்.

7. சைவ சித்தாந்த பிறநாட்டு ஆலோசனைக்குழு உறுப்பினர் உரிமத்தை 1957 - 1966ம் ஆண்டு காலகட்டத்துக்குப் பெற்றார்.

**13. மக்கள் கவனத்தை வெகுவாக ஈர்த்த பண்டிதர் ஐயா ஆற்றிய விசேட பணிகள் :**

1. **பாத யாத்திரை :**
   மட்டக்களப்பில் தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தி விழிப்புணர்ச்சிகொள்ளச் செய்யவும் அதன் மூலம் அரச கவனத்தை ஈர்க்கவும் பொத்துவில் இருந்து திருகோணமலை வரை பாத யாத்திரை மேற்கொண்டார்.

2. அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமங்கள் தோறும் பாத யாத்திரை செய்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்திச் சமயம் வளர்த்தார்.

3. சமய, இலக்கியச் சொற்பொழிவுகளைக் காலத்துக்குக் காலம் நிகழ்த்திச் சமயத்துக்கும், சங்க இலக்கியங்களுக்கும் பெருமை சேர்ந்தார்.

4. மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்களை ஆராய்ச்சி செய்து அவற்றின் தனிப் பெருமைகளை இலங்கை வானொலியிலும், பத்திரிகைகளிலும் இடம்பெறச் செய்தார்.

**14. எழுத்தாக்கங்கள் :**

இவரது விவசாயம், இலக்கியம், இலக்கணம், சொல்லாய்வு, இட ஆய்வு, சமய தத்துவம், சமய இலக்கியம் பற்றிய பல கட்டுரைகள் ஆத்ம ஜோதி, கமத்தொழில் விளக்கம், ஆனந்தசாகரம், இந்து இளைஞன், தினகரன், வீரகேசரி, ஈழச்சுடர், கலைப்பூங்கா, சுதந்திரன், ஈழகேசரி, கலைச்செல்வி, சிவயவசி, யாழ்ப்பாணன் தினபதி ஆகிய சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும், பல விழா மலர்களிலும் வெளிவந்துள்ளன.

**15. கலாசார அரும்பொருட்காட்சி :**

1949ல் இலங்கைச் சுதந்திர தின விழாவின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் கலாசார அமைச்சு நடாத்திய அகில இலங்கை ரீதியிலான கலாசார அரும்பொருட்காட்சியில் பண்டிதர் அவர்கள் மட்டக்களப்பு மாநிலத்தில் தேடித் திரட்டிய பண்டைய அரும்பொருட்களை கொழும்பில் காட்சிப்படுத்தியதன் மூலம் மட்டக்களப்பு மாநில மக்களின் தொன்மையையும், கலை கலாசார முதிர்ச்சியையும் வெளிப்படுத்திப் பாராட்டுப் பெற்றார். இவற்றுள் அதிகமான காட்சிப் பொருட்கள் மட்டக்களப்பு மாநில மக்களின் பண்டைய தொழில்சார் பொருட்களும், இருபாங்குக் கூத்துச் சார்ந்த (வடமோடி, தென்மோடிக்கூத்து) பொருட்களும் அடங்கியிருந்தன. தெற்கே பாணமை தொடக்கம் வடக்கே திருகோணமலை வரையுள்ள ஊர்களில் அவரது மாணவர்கள் பரந்தளவில் ஆசிரியப் பணி செய்து கொண்டிருந்தனர். இந்த வாய்ப்பைப் பண்டிதர் தனது தேவைகளுக்காக என்றுமே பயன்படுத்தியதில்லை. இத்தகைய வசதிகளை அவர் மட்டக்களப்பின் வளத்துக்காகவே பயன்படுத்தி வந்தார். அந்தவகையில் இந்தக் காட்சிப்படுத்தலுக்கு அவர்களின் உதவியை நாடிப் பல அரும்

பொருட்களை உத்தரவாதத்துடன் திரட்டி கொழும்புக்கு எடுத்துச் சென்று தனக்காக ஒரு மண்டபத்தைப் பெற்று அதில் காட்சிப்படுத்தினார். அங்கே வரும் தமிழரல்லாத பார்வையாளர்களுக்கு அவற்றைப்பற்றி விளங்கப் படுத்துவதற்கு ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தேர்ச்சிமிக்க தனது மாணவர்களை (ஆண், பெண் இருபாலாரும்) அமரர் டி.எஸ்.கே. வணசிங்க அவர்கள் தலைமையில் அமைத்தார்.

காட்சிப் பொருட்களின் அருமை, பெருமைகளைப் பற்றி விளக்கிக் கூறும் வாசகங்களை மும்மொழிகளிலும் எழுதி காட்சிப் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் அருகில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தார். இந்தக் கண்காட்சி பலரின் கவனத்தை ஈர்த்தது. பொதுவாக வெளிநாட்டறிஞர்களை வெகுவாக ஈர்த்தது. அத்துடன் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த அமைப்பின் பாராட்டுதல்களையும், பரிசையும் பெற்றது.

அப்பொருட்காட்சியைத் தொடர்ந்து கொழும்பில் நடைபெற்ற பிரதேச மக்கள் கலைவிழாவிலே (இலங்கையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் புகழ்பெற்ற பாரம்பரியக் கலைகள்) மட்டக்களப்புப் பிரதேசத்தின் சொத்தான மட்டக்களப்புக் கூத்தான "அலங்கார ரூப நாடகம்" (தென்மோடி) "சுபத்திரா கல்யாணம்" (வடமோடி) ஆகிய இரு கூத்துக்களும் பண்டிதர் அவர்களின் தலைமையில் ஆரையம்பதிக் கலைஞர்களால் ஆடப்பட்டது. இக்கூத்துக் கலை உள்நாட்டு, வெளிநாட்டுக் கலைஞர்களின் ஏகோபித்த பாராட்டுதல்க ளையும், கௌரவத்தையும் பெற்றது.

## 16. காக்கும் கரங்கள் :

"பேறிஞர் தாக்கும் பிறர் துயரந்தாங்கியே
வீரமோடு காக்க விரைகுவர் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோலடி தன்மேற்
கைசென்று தாங்குங்கடிது" -நன்னெறி-

1958ம் ஆண்டில் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் காரணமாக மட்டக்களப்பு முதலிய தமிழ் மக்கள் வாழ்விடங்களில் இராணுவம் நிலை கொண்டிருந்தது. பல சிங்கள இராணுவ வீரர்கள் தமிழர்களின் பண்பாடுகளைச்

சிதைக்கும் வண்ணம் நடந்துகொண்டனர். அவ்வாறான செயல்களுள் சைவ ஆலயங்களில் சப்பாத்துக் கால்களுடன் புகுந்து நடமாடுவதும் ஒன்றாக இருந்தது.

இந்த நிகழ்வு பண்டிதரின் மனதை வதைத்தது. இராணுவ வீரர்களை எதிர்த்துரை செய்தால் உடலுக்கும் உயிருக்கும் கேடு ஏற்படும் என்பதை நன்கறிந்திருந்த பண்டிதர் அதைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதிலும் பார்க்க உயிரை இழப்பது மேல் என்றெண்ணினார். இராணுவ வீரர்களிடம் சென்று அப்படிச் செய்யாதீர்கள் என்று வேண்டினார். அவரது வேண்டுகோளை அலட்சியம் செய்த வீரர்கள் கர்ப்பக் கிரகத்துட்கூட தம்மால் செல்ல முடியுமென்பதை காட்ட முயன்றனர். ஆனால் பண்டிதர் சோர்ந்து விடவில்லை. இந்தச் செய்கையை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்று செயற்பட்டார்.

மடக்களப்பில் முன்னாள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அமைந்திருந்த இடத்தில் முகாமிட்டிருந்த இராணுவ அதிகாரியை நேரில் சந்தித்து முறையிடுவதெனத் தீர்மானித்தார். அப்போது மடக்களப்பிலிருந்தவரும் சிங்கள வர்த்தகருமான விக்கிரமசிங்க முதலாளியுடன் படையதிகாரியைச் சந்தித்து தனது மனக்குறையைத் தெரிவித்தார்.

அந்த இராணுவத் தளபதி பண்டிதரின் முறைப்பாட்டைக் கேட்டுக் கவலைப்பட்டார். தானும் கதிர்காமக் கந்தனின் பக்தன் என்றும் இத்தகைய செயல்கள் தனக்கு மனவேதனை தருகின்றதென்றும், இனிமேல் இப்படி நடைபெறாது பார்த்துக்கொள்வது தனது கடமை என்றும் ஆறுதல் கூறி உடனே புறப்பட்டுச் சென்று ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்த படைவீரர்களிடம் ஆலயங்களுக்குள் முக்கிய காரணங்களுக்காக தேடுதல் செய்ய வேண்டியிருந்தால் பாதரட்சை இல்லாமலே செல்லவேண்டுமெனக் கட்டளையிட்டார்.

பொது நலனுக்காகத் தனது உயிரைக் கூடப் பொருட்படுத்தாது எதையும் துணிச்சலுடனும் சமயோகித புத்தியுடனும் செயற்படும் காக்குங் கரங்களுடையர் பண்டிதர் அவர்கள்.

**17. எழுதி வெளியிட்ட நூல்கள் :**

1. மண்டூர் வடிவேல் முருகன் இரட்டைமணிமாலை.
2. கதிர்காம வடிவேலவர்
3. உழவர் கைநூல்
4. திருமுருகன் விளையாடல்
5. யாழ்நூல் தந்தோன்.
6. விபுலானந்தர் மணிமொழி நாற்பது

**18. அமரத்துவம் :**

26.04.1967ல் அமரத்துவம் பெற்றார். உன்னிச்சையில் அவரது நெல் வயலின் மத்தியில் தனது நண்பர்களுடன் கலகலப்பாகக் கரைத்து மகிழ்ந்துகொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக இறைபதம் அடைந்தார்.

தனக்காகவன்றிப் பிறர்நலம் வேண்டி வாழ்ந்து அவர்களுக்கு நல்வழி காட்டியவர் பேராசிரியர் செபூபாலபிள்ளைப் பண்டிதர் ஐயா அவர்கள்.

நன்றி மறவா நன்நெஞ்சங்கள் ஆரையம்பதியிலும், கல்லடியிலுமுள்ள இரண்டு வீதிகளுக்கு அவரின் நாமத்தைச் சூடி நினைவுகூருகின்றனர்.

**"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை**
**இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே." (வெற்றிவேற்கை)**

**உசாத்துணை :**

1. பேராசிரியர் செபூபாலபிள்ளைப் பண்டிதர் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்
   படைப்பாளிகள் : கலாநிதி க.தா.செல்வராசகோபால்
   நாவற்குடா இ.தங்கராசா
2. கலாபூஷணம் மாஸ்ரர் சிவலிங்கம் எம்.ஏ.(பண்டிதர் ஐயாவின் மூத்த மருமகன்)
3. கலாபூஷணம் இரா.நாகலிங்கம் (அன்புமணி) எஸ்.எல்.ஏ.எஸ்.

தகவல் தந்துதவிய சான்றோர்க்கு எமது அன்பின் நன்றிகள்.

# முற்றத்து மல்லிகை



மறைந்த பண்டிதர்
திரு.செ.பூபாலப்பிள்ளை
அவர்கள்

## வெண்பா

ஆரையூர் அன்னை அருந்தவத்தால் பெற்றமகன்
சீராய் தமிழ்வளர்த்த செம்மலிவர் – பாரறிந்த
பண்டிதர் பூபாலர் பண்புச் சிறப்பெல்லாம்
கண்டினிதாய் போற்றல் கடன்


முத்தமிழ் வித்தகர் எம்விபுலா நந்தர்தம்
உத்தம மாணவராய் ஊக்கமுடன் – தித்திக்கச்
செந்தமிழைத் தந்த சிறப்புள்ள ஆசானை
வந்தனை செய்யவே வா

உத்தமர் காந்தியை உண்மையாய் நேசித்து
பக்தியுடன் வாழ்ந்து வந்த பண்பாளர் – சாத்வீகராம்
காந்தி அணிந்த கதராடை கட்டிவந்து
மாந்தரிடம் பெற்றார் மதிப்பு
(அ.பி.ப.பா)

ஆசிரியர் பல்லோர்க்கு ஆசானாய்க் கற்பித்து
மாசிலாத் தொண்டினால் மாண்படைந்து – தேசத்தில்
பாசமும் பற்றும் பலர் போற்றக் காட்டிவந்த
நேசரை நித்தம் நினை

பற்றுமிக வைத்துப் பயிர்செய்து இன்பமுற்றார்
தற்பெருமை இல்லாத் தரமுள்ளார் – நற்றமிழில்
நெஞ்சத்தில் உள்ளதை நேர்முகமாய் எப்போதும்
அஞ்சாது சொல்வார் அறி

கலாபூசணம் கவிஞர் ஆரையூர் அமரன்




# மண்முனைப் பிரதேசத்தில் இரண்டு ஈஸ்வரங்கள்

**மூனாக்கானா**

மண்முனைப் பிரதேசத்தைப் பற்றியும், அதில் அழிந்துபோன காசிலிங்கேஸ்வரர் ஆலயத்தைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு முன், மட்டக்களப்பைப் பற்றியும் கொஞ்சம் அறிந்துகொள்ளவேண்டும். மட்டக்களப்பு மாநகரைச் சுற்றியுள்ள நிலப்பரப்புத்தான் மட்டக்களப்பு என இன்று நாம் நினைத்துக்கொண்டிருக்கின்றோம். இதை மறந்துவிடுங்கள் - அன்றைய மட்டக்களப்பு வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே பாணமை வரை பரந்திருந்த பெரு நிலப்பரப்பாகும். இதை சேனன், இலஞ்சன், சிறிகுலன், வாகூரன், பிரசன்னசித்து, தாசகன், தனசேனன் போன்ற பல அரசர்கள் ஆண்டுள்ளனர். இவர்களின் இராசதானிகளாக பல நகரங்கள் இருந்துள்ளன. 'இதில் உன்னரசுகிரி' என்பது சிறந்த நகராகும். இது திருக்கோயில் பகுதி என பல ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இனி, இந்த மட்டக்களப்பை குணசிங்கன் ஆண்ட காலத்துக்கு வருவோம்.

இந்தியாவில், இன்று 'ஒரிசா மாநிலம்' என அழைக்கப்படும் கலிங்க நாட்டை அன்று குகசேனன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அக்காலத்தில் பௌத்த மதகுரு ஒருவர் தான் மிக்க கவனமாகப் பாதுகாத்து வந்த புத்ததாது ஒன்றை மன்னனிடம் கொடுத்தான். அக்காலம் இலங்கையில் புத்த சமயமும் சைவ சமயமும் நன்கு பரவியிருந்தன. இந்த புத்த சின்னத்தை இலங்கை

மன்னனுக்கு அனுப்புவது நல்லதென நினைத்த குகசேனன் இதனோடு காசிலிங்கம் ஒன்றையும் சேர்த்து தனது மகள் உலகநாச்சியிடம் கொடுத்து, தனது மகன் உலகநாதனோடும், பரிவாரங்களோடும் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பினான். காசிலிங்கத்தைத் தனது கூந்தலுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு இலங்கைக்குச் சென்றாள் உலகநாச்சி. அக்காலம் அநுராதபுரியில் இருந்து அரசாண்ட ஸ்ரீ மேகவர்ணனிடம் பௌத்த சின்னத்தைக் கொடுத்தாள். இதைப் பெற்றுக்கொண்டதும் மகிழ்ச்சியடைந்த மன்னன் உனக்கு என்ன வேண்டுமெனக் கேட்டான். அவளோ மனித சஞ்சாரமற்ற ஒரு நிலப்பகுதி வேண்டும் எனக் கேட்டாள். உடனே மன்னன் அப்போது மட்டக்களப்பை ஆண்டு கொண்டிருந்த தனது அண்ணன் மகன் குணசிங்கனுக்கு ஒரு கடிதமும் கொடுத்து, இவளுக்குத் தேவையான பெருநிதியையும், படையையும், உதவியாளர்களையும் கூட அனுப்பி வைத்தான். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட குணசிங்கன் மண்முனைப் பிரதேசத்தில் குடியேறும்படி அனுப்பி வைத்தான். இது கிட்டத்தட்ட கி.பி. 312ம் ஆண்டளவில் நடந்தது. (மட்டக்களப்பு மாண்மியம்)



அங்கு சென்ற உலகநாச்சி காடுகளை வெட்டித்திருத்தி நகராக்கி ஆட்சி அமைத்து தனத பரிவாரங்களோடு தற்போது கோயில் குளம் என அழைக்கப்படும் இடத்தில் சிகர கோபுரங்களோடு கூடிய ஒரு கோயிலை கருங் கற்களால் கட்டி அதில் தான் கொண்டுவந்த காசிலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வைத்தாள். பூசைகள் செய்வதற்கு வீர சைவர்களையும் மாலைகட்டல், பூப்பறித்தல், விளக்கேற்றல், அமுது செய்தல், சந்தனம் அரைத்தல், பூசை செய்யும் உபகரணங்களை விளக்குதல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு கோயிலாளர்களையும் நியமித்து பூசைகள் ஒழுங்காக நடைபெறச்செய்தாள். இந்தக் காசிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிந்ததைப் பற்றி பின்னர் ஆராயலாம்.

சில வருடங்கள் கழிந்த பின் 'திகடன்' என்ற வேடன் மண்முணைக்கு மேற்குப் புறமாக காடுகளை வெட்டிக் கொண்டிருக்கும் போது ஒரு கொக்கட்டிய மரத்தில் கோடரி பட்டதும் அதிலிருந்து இரத்தம் சொரிந்தது. இந்த அதிசயத்தை

வேடன் ஓடிவந்து உலகநாச்சியிடம் கூறினான். அவள் தன் பரிவாரங்களோடு வேடன் வழிகாட்டிச் செல்ல அங்கு சென்று பார்த்தபோது அவள் கண்களுக்கு ஒளிமயமான ஒரு லிங்கம் தெரிந்தது. உடனே பரிவாரங்களை காசிலிங்கேஸ்வரர் கோயிலுக்கு அனுப்பி அங்கிருந்து சூலாயுதமும், பூசைப்பொருட்களும், உபகரணங்களும் எடுப்பித்து லிங்கத்தின் மேல் கம்பு தடிகள் குழைகளால் ஒரு பந்தலிட்டு பூசை செய்வித்துத் திரும்பினாள். இதுவே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும். இதன் பின்னர் வருடா வருடம் காசிலிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து சூலாயுதமும், பூசைப்பொருட்களும் கொக்கட்டிச்சோலைக்கு கொண்டு சென்று விழாவெடுத்துத் திரும்பி வருவது வழக்கமாகும். பின்னர் ஆண்ட பல மன்னர்களால் இக்கோயில் பெரிதாகக் கட்டப்பட்டு தேரோட்டமும் நடந்து வந்தது.

மண்முனையைச் சுற்றியுள்ள பிரதேசங்கள், ஓடைகள், கேணிகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள் அதிகம் உள்ள பகுதியாகும். தற்போதையை காத்தான்குடியின் வடக்குப் புறத்தில் காத்தான் என்னும் வேடன் வசித்து வந்தான். இக்காலத்தில் மலபாரிலிருந்து மரக்கலத்தில் முஸ்லிம்கள் கடல் வழியாக வந்து கொண்டிருக்கும் போது, காத்தான் வசித்த இடத்திலிருந்து புகை மேலே கிளம்புவதைக் கண்டார்கள். இவ்விடத்தில் மனிதர்கள் வாழ்கின்றார்கள் என உணர்ந்துகொண்ட முஸ்லிம்கள் கரையிறங்கி தங்கினார்கள். இவர்களைத் தொடர்ந்து புத்தளத்திலிருந்தும் பலர் இங்கு குடியேறத் தொடங்கினார்கள். இவர்களின் வரவை விரும்பாத காத்தான் தான் வணங்கி வந்த முக்கோணக் கல்லையும் எடுத்துக் கொண்டு தெற்குப் பக்கமாக வந்து ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுள்ள இடத்தில் கல்லை வைத்து பந்தலிட்டு வணங்கி வந்தான்.

இதன் பின்னர் மண்முனைப் பிரதேசத்திலே கொடிய வைசூரி நோய் பரவத்தொடங்கி பல நூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர். காத்தானுடன் குடியிருந்த மக்களை இந்நோய் தாக்கவில்லை. அவன் சாம்பலைத் தூவக் கொடுத்து மக்களைக் காப்பாற்றினான். இதைக்கேள்வியுற்ற மக்களெல்லாம் காத்தான்குடியிருந்த இடத்தையும் கோயிலையும் சுற்றிக் குடியேறத் தொடங்கினார்கள். காத்தான் காலம் 1612ம் ஆண்டை அண்டிய காலமாகும். என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இனி காசிலிங்கேஸ்வரர் ஆலயம் கவனிப்பாரற்று இடிந்து அழிந்த வரலாறு பற்றி சிறிது ஆராய்வோம் - இதில் இரண்டு விதமான காரணங்கள் கூறப்படுகின்றன. ஆய்வாளர் அமரர் சிவ.விவேகானந்த முதலியார் அவர்கள் இக்கோயிலை கிட்டத்தட்ட 1627ல் 'அல்மேய்டா' என்ற போர்த்துக்கீசத் தளபதி இடித்ததாகவும் இதனால் பயந்த மக்கள் ஆரைப்பற்றையில் குடியேறியதாகவும் கூறுகிறார். ஆனால் ஆய்வாளர் திரு.க.இராசரெத்தினம் அவர்கள் கொடிய வைசூரி நோய்க்குப் பயந்து குடியேறியதாகக் கூறுகிறார். போர்த்துக்கீசத் தளபதி இடித்துவிட்டு அங்கே தங்காமல் போயிருப்பான். எனவே மக்கள் பயந்து வெளியேறியிருந்தாலும் திரும்பி வந்திருப்பார்கள். எனவே திரு.க.இராசரெத்தினம் அவர்களின் கூற்று ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதாகவே நான் கருதுகிறேன். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

> **உலகநாச்சி காடுகளை வெட்டித்திருத்தி நகராக்கி ஆட்சியமைத்து தனது பரிவாரங்களோடு தற்போது கோயில்குளம் என அழைக்கப்படும் இடத்தில் சிகரகோபுரங்களோடு கூடிய ஒரு கோயிலை கருங்கற்களால் கட்டி அதில் தான் கொண்டுவந்த காசிலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வைத்தாள்.**

ஆலயத்தை இடிக்கச் சென்ற போத்துக்கேயத் தளபதி அங்கே இருந்த கருங்கல் நந்தியைப் பார்த்து இது புல் சாப்பிடுமா? என்று கேட்டதாகவும், குருக்கள் ஆம் என்று கூறியதாகவும், மறுநாள் அவன் வந்தபோது நந்தி, ஐயர் கொடுத்த புல்லைச் சாப்பிட்டதாகவும், ஆச்சரியமடைந்த தளபதி இக்கோயிலை இடிக்காமல் பல உதவிகள் செய்துவிட்டுச் சென்றதாகவும் நாம் அறிகிறோம்.

ஏதோ ஒரு காரணத்தால் காசிலிங்கேஸ்வரர் ஆலயம் இடிந்து அழிந்தாலும், ஆரைப்பற்றையில் குடியேறிய மக்கள் வருடா வருடம் பூசைப் பொருட்களோடும் தூப தீப உபகரணங்களோடும், பூசைகள் செய்யும் தம்பிமார்களோடும் சென்று அழிந்த கோயிலின் கரையில் பந்தலிட்டு பூசை செய்து திரும்புவதாகவும் அறிகிறேன். கோயில்குளத்தில் வசித்து அமரத்துவமடைந்த பெரியார் பரமக்குட்டி கணபதிப்பிள்ளை என்பவர் இதை என்னிடம் கூறும் போது இவருக்கு கிட்டத்தட்ட 100 வயது இருக்கும். இதுமட்டுமல்ல கோயில்

குளம் விநாயகர் வித்தியாலயத்தில் 1979-1981 காலப்பகுதியில் நான் அதிபராகப் பணிபுரியும்போது அப்பகுதிக்காடுகளில் கொத்து வேலைகள் செய்யப்பட்ட, உடைந்த கருங்கல் துண்டுகளைக் கண்டுள்ளேன். இது மட்டுமல்லாமல் இப்பகுதியில் நீறு சுடும் தொழிலில் ஈடுபட்டுவந்த ஒரு தொழிலாளி மடு வெட்டும்போது ஒரு பாத்திரத்தில் ஒரு சிறிய படிகலிங்கமும், சிறிய மணிகளும், உடைந்த தீபத்துண்டுகளும் இருந்ததைக் கண்டெடுத்துள்ளனர். இது எனக்கு மட்டுமல்ல கிராமசேவை அதிகாரி திரு.க.கோபாலப்பிள்ளை அவர்களுக்கும் தெரியும். இப்பொருட்கள் இப்பொழுதும் பத்திரமாக இருப்பதாக அறிகிறேன். இவ்விடத்திற்கு சிகரம் என்றும் பெயரிருப்பதால் இக்கோயில் சிகர கோபுரங்களோடு கூடிய பெரிய கோயிலாக இருந்திருக்கவேண்டும். 1904ம் ஆண்டு ஆரையம்பதியில் பிறந்து பின்னர் திருகோணமலையில் வசித்து அமரரான கொஸ்தாப்பர் தம்பாப்பிள்ளையின் இரண்டாவது மகன் திரு.த.பொன்னம்பலம் அவர்கள் தான் சிறுவனாக இருக்கும் போது இவ்விடத்தில் சில கருங்கல் தூண் நின்றதாகவும் சில சாய்ந்து கிடந்ததாகவும் கூறியுள்ளார். சேதமடைந்த இக்கோயிலிலிருந்து எடுக்கப்பட்ட சில தூண்கள் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலைப் பெருப்பித்துக்காட்டும்போது பயன்படுத்தப்பட்டுள்ளன. 15 அங்குலச் சதுரமும் 12 அடி உயரமுங் கொண்ட இக்கருங்கல் தூண்களை இப்போதும் கோயிலில் காணலாம்.

காசிலிங்கேஸ்வரர் கோயிலிலிருந்து வருடாவருடம் தான்தோன்றீஸ்வரர் கோயில் விழாவுக்கு சூலாயுதம் கொண்டு சென்ற வழக்கம் இப்போதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இக்கோயில் கந்தசுவாமிக் கோயிலாக இருப்பதால் சூலாயுதத்திற்குப் பதிலாக வேலாயுதம் கொண்டு போகப்படுகிறது. காசிலிங்கேஸ்வரர் கோயில் அழிந்துவிட்டாலும் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் இதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்.

**ஆதாரங்கள்**


1. ஆரையூர்க்கந்தன் கும்பாபிஷேக மலர்
2. திரு.சிவ.விவேகானந்த முதலியாரின் கவிதையும் கையெழுத்துப் பிரதியும்
3. திரு.க.இராசரெத்தினம் அவர்களின் கட்டுரைகள்
4. மட்டக்களப்பு மான்மியம்
5. சில முதியோர்களின் கூற்றுக்கள்.

தேசிய இலக்கியப் பெருவிழா-2009

பாடசாலை மட்டம்

# போட்டி முடிவுகள்

## கட்டுரை (கனிஷ்ட பிரிவு)

**1ம் இடம் : க.மு.மிஹ்ஹாஜ் பேகம்**
மட்/பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம்

**2ம் இடம் : இரவீந்திரன் ஜிலக்ஷி**
மட்/ஆரையம்பதி இராம கிருஷ்ணமிஷன் மகா வித்தி.

**3ம் இடம் : நாகலிங்கம் ஜெயரஞ்சிதா**
மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலம்

## கவிதை (கனிஷ்ட பிரிவு)

**1ம் இடம் : யோகராசா தனுஜா**
மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்

**2ம் இடம் : சிவராசா ரனிஷ்காந்**
மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்

**3ம் இடம் : பஞ்சாட்சரம் கமலேஸ்வரி**
மட்/மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலம்

## கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)

**1ம் இடம் : செல்வி தவராசா வினோதினி**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்

**2ம் இடம் : செல்வி சின்னத்தம்பி டிலோசனா**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்

**3ம் இடம் : கோபாலப்பிள்ளை ருஷாந்தினி**
அன்னை சாரதா அறநெறிப் பாடசாலை தாழங்குடா

## கவிதை (சிரேஷ்ட பிரிவு)

**1ம் இடம் : செல்வி சதாசிவம் நிலோஜினி**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்

**2ம் இடம் : வடிவேல் கிருத்திகா**
மட்/ஆரையம்பதி இ.கி.மி. மகா வித்தியாலயம்

**3ம் இடம் : உ.மு.அஸ்லம்**
மட்/காங்கேயனோடை அல்அக்ஷா மகா வித்தியாலயம்



# வழக்கொழிந்துவரும் வசந்தன் கலை

தருமலிங்கம் தயாபரம்

மீன் மகள் பாட வாவிமகள் ஆட, தென்றலின் கீதத்திற்கும், மூங்கிலின் நாதத்துக்கும் தென்னையும் நெல்லும் தலையசைக்க, அல்லியும் தாமரையும் அபிநயம் பிடிக்க இயற்கை அழகும் எட்டுத்திசையும் முழங்கும் கலையின் வளமும் கொண்டது எங்கள் மட்டக்களப்பு நாடு. இன்றைய மட்டக்களப்பைப் போலன்றி பண்டைய மட்டக்களப்பானது முதலாம் கஜபாகு மன்னனால் இலங்கைக்குக் கண்ணகி வழிபாடு கொண்டுவரப்பட்ட இரண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட கண்ணகி வழிபாட்டுப் பரம்பலை ஆதாரமாகக் கொண்டு நோக்கினாலும் வடக்கே மகாவலி ஆறு எல்லையிடும் வெருகல் தொடக்கம் தெற்கே பொத்துவில் வரையும் மேற்கே மலைநாட்டு எல்லையிலே தொடங்கி கிழக்கே வங்களாவிரிகுடாக் கடல்வரை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால்வகை நிலங்களுடன் நல்வளம் கொழிக்கும் பூமியாகப் பரந்து கிடந்ததனை நாம் அறிய முடியும்.

மட்டக்களப்பு நாட்டு மக்கள் மிக்க உழைப்பாளிகள். அவர்களுடைய உழைப்பும் ஓய்வும் இயற்கை அன்னையின் மடியிலே நிகழ்ந்தபோது இயற்கையில் நெஞ்சம் பறிகொடுத்தான். தொழில், வழிபாடு, காதல், வேடிக்கை, விளையாட்டுப் போன்ற சந்தர்ப்பங்களில் இயற்கையின் உந்துதலினால் தன் உள்ளக் கிளர்ச்சியின் வெளிப்பாடாக வெளியீடு செய்தவையே நாட்டார் பாடல்களாக உருவாக்கம் பெற்ற பாடல்களாகும். மனிதர்கள் கூட்டங் கூட்டமாக வாழ்ந்த அன்றைய சூழ்நிலையில் ஒருவர் ஒரு பாடலைப்பாடி முடிக்கும் போது மற்றொருவர் அதனைத் தொடர்ந்து மறு செய்யுளைப்

பாடுவதும், ஒருவரின் பாட்டுக்கு இன்னும் ஒருவர் பதில் பாட்டுப்பாடுவதுமாக எழுத்தாணி கொண்டு ஏட்டில் எழுதப்படாது செவி வழி இலக்கியங்களாக தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்த நாட்டார் பாடல்கள் பெயரறியாக் கவிஞர்களான பாமர மக்களால் குறிப்பாக எழுத்தறி வில்லாத நாட்டுப்புற மக்களால் பாடப்பட்டவையாகவே கொள்ளப்படுகின்றன.

எனினும் இன்று மட்டக்களப்பில் வழக்கொழிந்து போயுள்ள வசந்தன் பாடல்கள் சற்று வித்தியாசப்பட்டு நிற்பவையாகவே காணப்படுகின்றன. இப்பாடல்கள் எப்போதும் யாரால் இயற்றப்பட்டன என்று கூறமுடியாதவையும் மிகப்பழமையானவையுமாகும். இராச சிங்கன் பள்ளு, நரேந்திரசிங்கன் பள்ளு என்பன இற்றைக்கு 300 வருடங்களுக்கு முற்பட்டனவாகக் கூறப்படுகின்றது. அன்றியும் வசந்தன் பாடல்களின் நடை, சொற்பிரயோகங்களும் இவற்றின் பழமையை பறைசாற்றி நிற்கின்றன. பாடி ஆடுவதற்கேற்ற இப் பாடல்கள் பாடி ஆடுபவர்கள் தொடர்ச்சியாகப் பாடுவதற்கு ஏற்றாற்போல் செய்யுட்கள் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளதுடன், சரித்திரப் புராணச் செய்திகளை எடுத்துரைப்பனவாயும் உள்ளன.

ஒவ்வொரு வசந்தனுக்கும் குறிக்கப்பட்ட தருவின் ஓசை விதிப்படியே அதன்பின் வரும் கண்ணிகள் பாடப்படுகின்றன. அத்துடன் தாளம், ஓசை நயம், எதுகை மோனைத் தொடை நயம் உள்ளனவாயும் காணப்படுகின்றன மேற்படி இயல்புகளை எடுத்து நோக்கும் போது இவ் வசந்தன் பாடல்களில் சிலதோ பலதோ காலத்துக்குக் காலம் கற்றறிந்த கல்வி அறிவுள்ளவர்களாலும் இயற்றப்பட்டுள்ளன என்னும் முடிவு கொள்ள முடிகின்றது.

வசந்தன் பாடல்கள் மட்டக்களப்பு மக்கள் தம் குல தெய்வமான கண்ணகி தேவிக்கு விழா எடுக்கும் வசந்த காலத்தில் பாடி ஆடப்படுவதனால் வசந்தன் என்னும் பெயர் பெற்றன. மட்டக்களப்பின் சில பிரதேசங்களில் இது வயந்தன் என்னும் பெயரிலும் வழங்கப்படுகின்றது.

கண்ணகி வழிபாடானது மட்டக்களப்பிலே பெரு வழக்கில் இருந்து வருகிறது. இங்கு எல்லாப் பிரதேசங்களிலும் கண்ணகி தேவிக்குக் கோயில்கள் உண்டு கூவாய் குயில் வசந்தன் பண்டைய மட்டக்களப்பு நாட்டில் கண்ணகி தேவி கோயில் கொண்டருளிய மிக்க பிரசித்தி பெற்ற இடங்களைப் பற்றிக் கூறுகின்றது. அவ் இடங்களாக தம்பிலுவில், காரைதீவு, வீரமுனை, கல்முனை,

நீலாவணை, பாண்டிருப்பு, கல்லாறு, மகிழூர், எருவில், செட்டிபாளையம், மண்முனை, தாண்டவன்வெளி, என்னும் இடங்கள் கூறப்படுகின்றன. இவ் இடங்களில் கோயில் கொண்டுள்ள கண்ணகியின் பெருமைகளையும், புகழையும் பாடிக் கூவுமாறு குயிலைக் கேட்பதாக இப் பாடல்கள் அமைந்துள்ளன.

கண்ணகி தேவிக்கு விழாக் கொண்டாடும் காலங்களில் கிராம மக்கள் இவ் வசந்தன் கவிகளைப் பாடி ஆடுவார்கள். வேறு திருவிழாக்களிலும் ஆடுவதுண்டு. கண்ணகி விழாக்காலங்களில் ஊரே விழாக்கோலம் பூண்டு நிற்கும் எங்கும் இயல்பாகவே ஒரு புனிதத் தன்மை நிறைந்துவிடும் மக்களிடையே மிக்க களிப்பும், உற்சாகமும், வேடிக்கையும், விளையாட்டும் காணப்படும். இவ்வாறான வசந்த காலச்சூழலில்தான் கண்ணகி தேவியின் வரலாறும், பெருமையும், புகழும் கூறும் வசந்தன் பாடல்கள் பாடி ஆடப்படுகின்றன. இப்பாடல்களைப்பாடி ஆறுபேர், எட்டுப்பேர், பன்னிரண்டு பேராகச் சேர்ந்து ஆடுவார்கள். ஆடும்போது இரண்டு கைகளிலும் இரண்டு கோல்களைப் பிடித்து ஒன்றோடொன்று தட்டிக்கொண்டு ஆடுவார்கள். அதனால் இவ் ஆட்டமானது பார்ப்பதற்கு கோலாட்டத்தினை ஒத்ததாகக் காணப்படும்.

இவ் வசந்தன் பாடல்கள் கட்டியம், தோத்திரம், சரித்திரம், தொழில், வேடிக்கை, விளையாட்டு என்னும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தக் கூடியன. அந்த வகையில் கட்டியத்தின் கீழ் வசந்தராசன் கொலுப்பாடல்கள் வருகின்றன.

தோத்திரப் பாடல்களாக கொள்ளப்படும் வகையின் கீழ் பிள்ளையார் வசந்தன், செவ்வாய்ப்பள்ளு வசந்தன், தானானாப்பள்ளு வசந்தன், களரி வசந்தன், முத்தமிழ் வசந்தன், கூவாய் குயில் வசந்தன், ஆறு கம்பு வசந்தன், தேவி வசந்தன், கிறுகு வசந்தன், ஆள் கண்டு மீண்டான் வசந்தன், பல்லக்கு வசந்தன், வசந்தன் பள்ளு, அபய வசந்தன், போற்றி வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன், பாங்கி வசந்தன், எச்சரிக்கை வசந்தன், ஞான வேதியர் பள்ளு என்னும் பாடல்களைக் கொள்ளலாம்.

சரித்திர விடயங்கள் பாடப்படும் வசந்தன்களாக நரேந்திர சிங்கன் பள்ளு, இராச சிங்கன் பள்ளு, அனுமான் வசந்தன், இந்திர சித்து வசந்தன்,

அங்கதன் வசந்தன், தம்பாபிள்ளை வசந்தன், அம்மன் பள்ளு, மாதவி நடனம் என்பவை காணப்படுகின்றன.

தொழில் பற்றி எழுந்த வசந்தன் பாடல்களில் வேளாண்மை வசந்தன், வேளாண்மை வெட்டு வசந்தன், உப்பட்டி கட்டு வசந்தன், சூட்டு வசந்தன், மாடு பிடித்தல் வசந்தன், சூடு போடல் வசந்தன், பொலி காவுகிற வசந்தன், செவ்வாய் வசந்தன், சவனிக்கை வசந்தன் என்னும் பாடல்களே வழக்கில் உள்ளன. இவ்வகைப் பாடல்களில் பல பாடல்கள் காலப்போக்கில் வழக்கொழிந்து போயிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

நாகரிக வளர்ச்சி, நகரமயமாக்கல் என்பவற்றின் வழியாக மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்களால் விதி விலக்கின்றி மட்டக்களப்பு மண்ணுக்கே உரித்தான வசந்தன் கவிகள் என்னும் இவ் நாட்டார் இலக்கியமும் காலவோட்டத்தில் காணாமல் போகும் நிலையை அடைந்தது. எனினும் இவ் ஆபத்தை உணர்ந்து இற்றைக்குச் சுமார் அறுபத்தியெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அக்காலப் பகுதியிலே வட்டாரக் கல்வி அதிகாரியாகவிருந்த தி. சதாசிவ ஐயர் அவர்கள் மட்டக்களப்பு பகுதியெங்கனும் வழக்கிலிருந்த வசந்தன் கவிகள் எனும் நாட்டுப்பாடல்களைத் தேடித்தொகுத்து மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு எனும் பெயரிலே புத்தகமாக வெளியிட்டார். அழியாத இவ் ஆவணப்படுத்தலுக்காக அவ் அறிஞருக்கும் இம் மட்டக்களப்பு மண் என்றென்றும் நன்றி சொல்லக்கடமைப்பட்டுள்ளது.

இம்மண்ணுக்குரிய அடையாளங்களில் ஒன்றாகக் காணப்பட்ட இக் கலையானது நாட்டில் தொடர்ந்து வந்த அமைதியற்ற சூழ்நிலை உள்நாட்டுப்போர், இடப்பெயர்வுகள் காரணமாக மக்களால் மறக்கப்பட்டும், நாகரிகத்தால் மறைக்கப்பட்டும் ஆவணப்படுத்தப்பட்ட நூலிலேயே தன் ஆயுளையும் முடிக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

நாட்டுக்கூத்துத் தொடக்கம் கும்மி, கரகம், கோலாட்டம் என்று ஏட்டிலே தூங்கிய கலைகளுக்கு உயிர்கொடுத்த உத்தமர்களான அறிஞர் பெருமக்களும், அண்ணாவிமார்களும், எமது இனத்தின் அடையாளங்களாக எஞ்சியுள்ள கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களில் வழக்கொழிந்து போயுள்ள வசந்தன் போன்ற கலைகளுக்கு மறு வாழ்வு தரவேண்டும். இது தமிழ் கூறும் நல்லுலகுக்குச் செய்யும் மகத்தான சேவையும், காலத்தின் தேவையுமாகும்.



# பாலமுனைக் கிராமமும் பாரம்பரியப் பாடல்களும்

அல்ஹாஜ் M.I.A.முஸ்தபா

மீன்களும் கவிபாடும் தேனாடாம் மட்டுநகரிலிருந்து தெற்கே நான்கு மைல் தொலைவில் மண்முனைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் கிழக்கே கடலை அண்டிய பிரதேசமாக அமைந்துள்ளது பாலமுனைக் கிராமம். பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இக்கிராமம் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிராமமாதலால் அவர்களது சமய கலாசார தொழில் பின்னணிகளை ஒட்டியதாகவே இலக்கியப் பின்னணியும் அமைந்துள்ளதை நாம் காணலாம்.

ஆரம்ப காலத்தில் நெசவுத் தொழிலும் மீன்பிடித்தொழிலுமே இக் கிராமத்தின் பிரதான தொழிலாக இருந்துள்ளது. முதலில் நாம் நெசவுத் தொழிலை எடுத்துக்கொண்டால் அங்கே நூல் சுற்றல், பசைபோடுதல், நெசவு செய்தல், பிடவை மடித்தல், பேக் பண்ணல் போன்ற வேலைகளில் ஆண்களும் பெண்களும் தொழில் புரிவதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்பதற்கேற்ப வேலை செய்யும் நேரத்தில் அவர்கள் நாவிலிருந்து தொழிலோடு தொடர்பான இன்னிசைகள் வெளிவரும். பின்வரும் பாடல்வரிகள் அவற்றில் சிலவாகும்.


நெய்ய நெய்ய நெய்யும் சோறும்
நெய்து முடிந்தா நீ தருவாய்
நாலு நாளய்க்கு நான் நெய்யாட்டி
நம்ம வயிறை யாருபாப்பா

மற்றுமோர் பாட்டு

சின்னச் சின்னக் கோட்டுச் சோமன்
சிகப்பு மஞ்சள் கோட்டுச் சோமன்

**மாமி மதினி உடுக்கும் சோமன்**
**மனமுவந்து வாங்கும் சோமன்**

அடுத்து நாம் கடற்றொழிலை எடுத்துக் கொள்வோமானால் இங்கு தோணி, வள்ளம், இயந்திரப்படகு என்பவற்றைக் கொண்டு ஆழ்கடல் மீன் பிடித் தொழில் நடைபெறுகிறது. கரையை அண்டிய நீர்ப்பகுதி கற்பாறைகளாகக்



காணப்படுவதால் கரைவலை மீன்பிடி இங்கு நடைபெறுவதில்லை. ஆழ்கடல் மீன் பிடியில் கணவா மீன்பிடி, தூண்டில் மீன்பிடி, மாயவலை மீன்பிடி, உலமியான் மீன் பிடி எனப் பிரிவான மீன்பிடித் தொழில்கள் இங்கு நடைபெறுகின்றது. மாலை வேளையில் ஆழ்கடல் நோக்கிச் செல்லும் இவர்களது வாகனங்கள் மறுநாள் அதிகாலை முதல் கரையைநோக்கிவர ஆரம்பிக்கும். கரைதட்டிய வாகனத்தை கரையிலே நிற்கும் மக்களுடன் சேர்ந்து மீனவர்கள் பாடல் இசைத்தவாறு கரை மேட்டிற்கு இழுப்பர். களைப்பை நீக்கி மனதிற்கு இதம் ஊட்டும் இப்பாடல் பின்வருமாறு அமைந்து காணப்படும்.

**ஏலேலோ ஏலேலோ**
**ஏலம்பா ஏலேலோ**
**ஆண்டவனே உன்னை நம்பி**
**அரிய கடல் ஏறி வந்தோம்**
**ஏறினோம் எல்லாஞ்சி**
**எமையாளும் மன்னவனே**
**மனவிரக்கம் உள்ளவனே**
**மறந்திடாது உதவி செய்வாய் (ஏலேலோ......)**
**இந்த போட்டு எந்தப் பாரம்**
**பாரோ படகோ பாரிச்சுக் கொண்டது**
**சோம்பா சொறியா சோத்து விளிங்கி**
**சோம்பல் போக்கி இழுடா போட்ட**
**நாய்க்குட்டித் தலையா நான் செத்துப்போனா**
**நீ என்ன செய்வாய் போட்டை இழுக்க (ஏலேலோ...)**

இப்பாடல் வரிகளை ஒருவர் இசைக்க ஏனையோர் சேர்ந்து இசைப்பர்.

இனி நாம் சமூகத்தில் ஆண்டுதோறும் நிகழ்வுறும் திருமணம் சுன்னத் பெருநாள் போன்ற வைபவங்களில் இலக்கியப் பின்னணி எவ்வாறு ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பதை சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் முன்னோக்கிப் பார்ப்போம். முதலில் திருமணத்தை எடுத்துக்கொண்டால் மணமகனை மணமகள் வீட்டை நோக்கி கூட்டிச் செல்லும் போது அறபு பைத் (பாடல்) இசைத்தவாறே கூட்டிச் செல்வர்.

**மௌலாய சல்லிவசல்லிம் லிம்தாயி மன்னவரா**

**ஆலாஹ பீபிக்கஹை ரில் ஹல்கி குல்லிகிமி**

என்ற தொடர் பைத் (பாடல்) அறபு மொழியில் இசைத்தவாறு கூட்டிச்செல்வர். இதனை பள்ளிவாசல் லெப்பை (பேஸ் இமாம்) முன்னின்று நடத்திச் செல்வார். சில இடங்களில் மேள வாத்தியங்கள் கம்படி (கோலாட்டம்) என்பனவும் கூடச் செல்லும். கோலாட்ட நிகழ்வுப் பாடல்கள் தமிழ் மொழியில் அமைந்திருக்கும்.

அடுத்து நாம் சுன்னத் வைபவத்தை எடுத்துக்கொண்டால் சுன்னத் நடைபெற்ற வீடுகளில் மூன்று நான்கு இரவுகள் கண்விழித்து சுன்னத் செய்யப்பட்ட சிறுவரை கண்ணின் இமைபோன்று பாதுகாப்பார். இவ்வீடுகளில் ஊரில் பிரபல்யம் பதம் படிப்பதில் பெற்றிருந்த பிரமுகர்கள் முதலிடம் பெறுவர்.

| | |
|---|---|
| A.உமறுலெவ்வை | அசனார் மரைக்கார் |
| K.யூசுப் லெவ்வை | A.L.வெள்ளத்தம்பி |
| S.சுலையுமா லெவ்வை | மு.அகமது லெவ்வை |

என்போர் முக்கியமானவர்களாவர். பதம் படித்தல் என்ற தலைப்பில் நடைபெறும் நிகழ்வுப் பாடல்கள் மார்க்க வரலாற்றை எடுத்துக் கூறுவதாகவே காணப்படும். அந்தவகையில்,

**விதியை மதிதான் வெல்லுமோ**
**எமன் வராமல் வினைவந்துயிரைக் கொல்லுமோ**
**ஆதியில் சுவர்க்கமதிலே ஆதமுடன் ஹவ்வா**
**கோதும்பைக் கனியைத் தின்றதும்**
**பதிகள் எடுத்துரை புவியில் விடுத்ததும்**
**பாடுபடுத்தியே பலனைக் கெடுத்ததும் (விதியை மதிதான்...)**

மூஸா தாரனி ஆண்டதும்

பிர் அவன் வந்து முரண்டாய் வாதாடி நின்றதும்

ஆசாவால் படை வென்றதும்

அலிபாதுஷா அவரை முதலை தின்றதும்

ஈசா நபி தம்மை காபிர் அடித்ததும்

யூசுப் நபியை தம்பி கிணற்றில் போட்டதும் (விதியை மதிதான்....)

மற்றுமோர் பதம்

வானும் புவியும் படைத்தான்

அவன் தன் புர்கானில் திருவுளமானான்

நானும் என்தன் மலக்கும் சொன்னோம் சலவாத்தென்றான்

ஆனபடியால் தீனோர் யாவரும் சொல்லுமென்றான்

ஸல்லல்லாஹு அலாமுகம்மது

ஸல்லல்லாஹு அலைவஸல்லிம்

தொடர்ந்து நாம் பெருநாள் தினங்களை எடுத்துக்கொள்வோம். பெருநாட்கள் வருவதற்கு ஒருகிழமைக்கு முன்னிருந்தே ஊஞ்சல் போடும் வேலை ஆரம்பித்து விடும். ஏழெட்டுப் பேர் ஆடக்கூடிய பெரிய ஊஞ்சல் தென்னை மரத்தினால் கால்கள் நாட்டி அதே மரத்தினால் விட்டம் போட்டு பெரிய தேடாக்கயிறு அல்லது சங்கிலி கொண்டு ஊஞ்சல் போடப்படும். பெண்கள் இரவில் மாத்திரம் ஆடுவர். ஆண்கள் பகலிலும் இரவிலும் ஆடுவர். ஆண்கள் ஆடும் ஊஞ்சல் வேகமாகப் பறந்தாடும் போது ஆடுவோர் நாவுகள் இசையோடு ஊஞ்சல் பறந்தாடும்.

அவற்றில்,

தனதந்தினா தனதந்தினா தனதந்தினா

தனதந்தினா தனதந்தினா தனதந்தினா

தங்கத்தினால் சலங்கை கட்டி

தரையில் விட்ட சேவல்

தரையில் விட்ட சேவல் தன்னை

சாச்சிக் கொண்டவள் யாரோ (தனதந்தினா....)

கொண்டயில் கும்பி கட்டி
குலாவி வரும் சேவல்
குலாவி வரும் சேவல் தன்னை
கூப்பிட்டழைத்தவன் யாரோ (தனதந்தினா....)

மற்றுமோர் பாடல்

ஆடவாங்கள் ஹாறுலீன்கள் ஓடிவாங்கள்
அன்னமே பொன்னூஞ்சல் ஆடவாங்கள்
ஆதிஇறையோன் பொருட்டதனால் கால்கள் நாட்டி
அவனது வொழிவதனாலே விட்டம் போட்டு (ஆடவாங்கள் ஊஞ்சல்)

(இவ்வாறு இறை நபி புகழோடு பாடல் தொடர்ந்து செல்லும்)


இனி இரவு வேளைகளில் பெண்கள் ஆடும் ஊஞ்சல் பறந்தாடும் போது அவர்களது பாடலில் ஊஞ்சலை அம்பா என்று அழைப்பதை நாம் காணலாம்.

பாடல் :

அம்பா போ... இம்பா போ.... (ஏலேலம் ஏலேலம்)
அம்பாக்காறன் காசல்லே போ (ஏலேலம் ஏலேலம்)
பட்டுலேஞ்சு பளபளென (ஏலேலம் ஏலேலம்)
வாளக்காய் பாரமேற்றி (ஏலேலம் ஏலேலம்)
வாறாராங்கா வண்ணமச்சான் (ஏலேலம் ஏலேலம்)
சின்னச் சின்ன வெத்திலயாம் (ஏலேலம் ஏலேலம்)
சின்ன மச்சான் நித்திரயாம் (ஏலேலம் ஏலேலம்)
பெரிய பெரிய வெத்திலயாம் (ஏலேலம் ஏலேலம்)
பெரிய மச்சான் நித்திரயாம் (ஏலேலம் ஏலேலம்)

இவ்வாறு ஒருவர் பாட ஏனையோர் ஏலேலம்... சொல்ல ஊஞ்சல் வேகமாகப் பறந்தாடும்.

இனி தாலாட்டுப் பாடல் என்ற விடயத்தையும் பார்த்து விடுவோம். இங்கு பரம்பரையாகப் பாடிவரும் தாலாட்டு எனவும் சமய வரலாற்றை எடுத்துக் கூறும் இன்னோர் வகையான தாலாட்டையும் நாம் காணலாம்.



1. **பரம்பரையாகப் பாடிவரும் தாலாட்டு**

ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
கண்ணாளா கண்ணுறங்கு
கண்மணியே நித்திரை செய் (ஆராரோ....)

ஆரம்பத் தொட்டிலிலே
ஆடிப்பாடி நித்திரைசெய்
கண்ணாளா கண்ணுறங்கு
கண்மணியே நித்திரை செய் (ஆராரோ....)

(இவ்வாறு தொடர்ந்து செல்லும்)

2. **சமய வரலாறோடு தொடர்பான தாலாட்டு**

ஆராரோ ஆராரோ ஆறுமஞ்சிக்கப்பாலே
ஆராய்ந்ததின் பொருளையறிந்துணர்ந்து நித்திரைசெய்

தீனையுகந்திடுவாய் தீதாதைக் கண்டிடுவாய்
தீனியை வெறுத்திடுவாய் தீபகமே நித்திரை செய் (ஆராரோ...)

பஞ்சவர்ணத் தொட்டிலிலே மாணிக்கக் கட்டிலிலே
அஞ்செழுத்து மெத்தையிலே அருமை மகள் நித்திரை செய் (ஆராரோ....)

நித்திரை மவுத்தாகும் நினைவு ஹயாத்தாகும்
பத்திரமா என் மகளே புத்தியுடன் நித்திரை செய் (ஆராரோ...)

கலிமா உயிரெழுத்து காயிலா நற்கனியை
அலிமாமனாருரை போல் அறிந்துணர்ந்து நித்திரை செய் (ஆராரோ...)



# கூத்துக்கலையில் மீளுருவாக்கம் தேவைதானா?

அன்புமணி

## 1. அறிமுகம்

கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசக் கிராமங்களில் பன்னெடுங்காலமாக கூத்துக்கலை வளர்ந்துவருகிறது. கோயில் திருவிழாக் காலங்களிலும், பண்டிகைக்காலங்களிலும் கூத்துக்கள் அரங்கேறுகின்றன.

கன்னங்குடா, ஆரையம்பதி, அமிர்தகழி முதலிய பல கிராமங்கள் கூத்துக்களுக்குப் பேர்போனவை. தலைமுறை தலைமுறையாக, பரம்பரை பரம்பரையாக இக்கூத்துக்கலை வளர்ந்து வருகின்றது. இக்கூத்துக்கெனத் தனித்துவமான பாடல்களும் ஆட்டங்களும் உள. மத்தளம், சல்லாரி இரண்டுமே இதில் பயன்படுத்தப்படும் வாத்தியங்களாகும். கூத்தைப் பழக்குபவர் அண்ணாவியார் என்பதும் மத்தளம் அடிப்பவர் மத்தளக்காரர் என்பதும் யாவரும் அறிந்த விடயம். பிற்பாட்டுக்காரர் நடுவில் நிற்க கூத்துக்காரர் அவர்களைச் சுற்றி வட்டமாக ஆடிவருவர்.

இக்கூத்தின் ஆட்டங்கள் தனித்துவமானவை. கொலு, வரவுத்தாளம், தாளக்கட்டு என இவ்வாட்டங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பல நூறு வருடங்களாக இந்நெறிமுறை பிறழாது வளர்ந்து வந்துள்ளது கூத்து. இக்கூத்தில் இருவகை உள்ளன. அவை வடமோடி, தென்மோடி என அழைக்கப்படும். இவ்விரண்டு மோடிகளுக்கும் தனித்துவமான பாட்டு, ஆட்டம் என்பன உள்ளன. இதிலும் இற்றைவரை மாற்றங்கள் செய்யப்படவில்லை. நீண்ட நெடுங்காலம் கிராமப்புறக் கலையாக கிராமத்தவர்களால் ஆடப்பட்டுவந்த இக்கூத்தில் 1947ல் ஒரு

திருப்பம் ஏற்பட்டது. அன்றுவரை புராண இதிகாசக் கதைகளே கூத்தாக ஆடப்பட்டன. ஆனால் 1947ல் இக்கலை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைக்குள் புகுந்து ஆசிரிய மாணவர்களால் ஆடப்பட்டது. இதற்குக் காரணமாக இருந்தவர் முன்னோடிக் கவிஞர் 'மூனாக்கானா' ஆவார்.

## 2. கூத்துக்களில் சமூகக் கதைகள்

வரலாற்றில் முதன்முறையாக 1947ல் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் ஒரு சமூகக் கதை கூத்தாக ஆடப்பட்டது. லெச்சுமி கல்யாணம் என்ற இக் கூத்தை எழுதி ஆசிரியக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு பயிற்றுவித்து அரங்கேற்றியவர் மேற்படி கவிஞர் மூனாக்காணாவே. இக்கதை ஒரு கிராமத்துக்கதை. லெச்சுமி என்ற பெண்ணுக்கு அவளது பெற்றோர் வரன் தேடுகின்றனர். திருமணம் குழம்புகிறது. பெண்ணின் பெற்றோரும், மாப்பிள்ளையின் பெற்றோரும் சண்டை பிடிக்கின்றனர். இப்பிரச்சினை கிராமசேவை உத்தியோகத்தரிடம் எடுத்துச் செல்லப்படுகின்றது. விதானையார் பிரச்சினையைத் தீர்த்துவைக்கிறார்.

ஒரு மணிநேரம் நீடிக்கும் இக்கூத்து கிராமிய மணம் கமழ, கிராமத்துப் பாத்திரங்களை கொண்டு ஆடப்பட்டது. நீண்டகாலமாக புராண இதிகாசக் கூத்துக்களைப் பார்த்து வந்த மக்களுக்கு இது ஒரு புது அனுபவம். அதனால் பல ஊர்களிலும் இக்கூத்து பல்வேறு தடவைகள் ஆடப்பட்டது. கதையின் யதார்த்தமே இக்கூத்துக்கு மவுசை ஏற்படுத்தியது எனலாம். சமூகக் கதை கூத்தில் இடம் பெற்றாலும் ஆட்டத்திலோ, பாடல்களிலோ வாத்தியங்களிலோ எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

அதைத் தொடர்ந்து பாடசாலைகளிலும் சமூகக் கூத்துக்கள் ஆடப்பட்டன. ஒரு காலத்தில் கூத்தாட்டத்தை ஏளனம் செய்த படித்தவர்கள் கூத்தாடுவதில் அக்கறை செலுத்தினர். பாடசாலைப் பரிசளிப்புக்கள், கலாசாரப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டிகளில் கூத்து முக்கிய இடம்பெற்றது. ஆனால் படித்தவர்கள் கூத்து என்ற அமுத வார்த்தையை நாட்டுக்கூத்து எனக் கொச்சைப்படுத்தினர். அது இன்றுவரை தொடரவே செய்கிறது பரிதாபம்.

## 3. பல்கலைக் கழகத்தில் கூத்து

சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் 1960களில் கூத்தில் மற்றொரு திருப்பம் ஏற்பட்டது. பல்கலைக்கழகங்களில் கூத்துக்கலை இடம்பெற்றது. இதற்கு மூலகாரணமாக இருந்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பியும் கூத்துக்களில் ஆர்வம் காட்டினார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் பல்கலைக்கழக மட்டத்தில் கூத்துக் கலையை அறிமுகம் செய்தபோது அவர் அதில் சில மாற்றங்களைச் செய்தார். பிற்பாட்டுக்காரர்களை ஓரமாக நிறுத்தி, கூத்துக்காரர்களை நீள் சதுர மேடையில் ஆட வைத்தார். ஆனால் ஆட்டத்திலோ, பாட்டுக்களிலோ, மத்தளத்திலோ எவ்வித மாற்றங்களும் செய்யவில்லை. படித்தவர்கள் மத்தியில் இம்மாற்றம் ஓரளவு வரவேற்புப் பெற்றதென்றே கூறவேண்டும்.

மேற்படி மாற்றம் புதிதாகப் புகுத்தப்பட்டதல்ல சிங்கள நாடகாசிரியரான பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர மனமே, சிங்கபாகு முதலிய நாடகங்களை அரங்கேற்றிய போது இப்புதுமையைச் செய்தார்.

இதைக்கண்ணுற்ற பேராசிரியர் வித்தியானந்தன் இதே நடைமுறையை கூத்துக்களிலும் பின்பற்றலாமே என எண்ணினார். அதன்படி புகுத்தப்பட்டது தான் இப்புதுமை. இப்புதிய முறையைப் பின்பற்றி பட்டிணங்களில், பாடசாலைகளில் கூத்துக்கள் ஆடப்பட்டாலும் கிராமப்புறங்களில் இந்த மாற்றம் ஏற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் கிராமப்புற மக்கள் இத்தகையை மாற்றத்தை நிராகரித்தனர். என்றே கூறலாம். பரம்பரையான கூத்து ஆட்டததை இவ்வாறு மாற்றம் செய்வது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

## 4. பேராசிரியர் மௌனகுருவின் பங்களிப்பு

பேராசிரியர் மௌனகுரு பல்கலைக்கழக மட்டத்தில் பல கூத்துக்களை ஆடியவர். இராவணேசன், வாலிவதை முதலிய கூத்துக்களை ஆடிய இவர் இக்கூத்துக்கலையை ஆழ்ந்து நோக்கினார். அதில் பொதிந்துள்ள தனித்துவமான கலையம்சத்தை உய்த்துணர்ந்தார்.

அதன் காரணமாக மேலும் பல ஆய்வுகளைச் செய்தார். ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார். தனது முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வாகவும் இதனை மேற்கொண்டார். ஆய்வு நூல்களை வெளியிட்டார்.

பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி முதலியோர் கூத்துக் கலையில் எவ்வளவு ஆர்வம் காட்டினாலும் நேரடியாக இதில் இறங்க முடியாது. ஆனால் பேராசிரியர் மௌனகுரு கூத்துக்களை ஆடியவர், மத்தளம் அடிக்கக்கூடியவர், கூத்தைப் பழக்கக்கூடியவர். ஆட்டமுறைகளை நன்கு அறிந்தவர். வடமோடி தென்மோடி வேறுபாடுகளை அறிந்தவர். இவ்வாறு கூத்துக்கலையின் அனைத்து அம்சங்களையும் நேரடியாக அறிந்தபடியால் திட்டவட்டமான முடிவுகளை அவர் வெளியிட்டார்.

கூத்துக்கலை, பரதநாட்டியத்தைப் போல ஒரு செந்நெறிக்கலை என அறுதியிட்டுக் கூறினார். மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை ஆவணப்படுத்திய அல்லிநாடகம் (தென்மோடி) சுபத்திரை கல்யாணம் (வடமோடி) ஆகிய கூத்துக்களை மரபு நெறி தவறாது ஆடவைத்துப் பதிவாக்கியதில் பங்களிப்புச் செய்தவர் - இந்த ஆவணப்பதிவு செயற் திட்டத்தை மேற்பார்வை செய்தவர் அவரே.

## 5. கூத்துக்கலையில் மீளுருவாக்கம் தேவையா?

அண்மைக் காலமாக பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிலர் 'கூத்துக்கலை மீளுருவாக்கம்' என்ற பெயரில் கூத்துக்களை கண்டபடி மாற்றிவருகின்றனர். நாடகத்தைப்போல காட்சியமைப்பு, திரைகள், வாத்தியங்கள் என்பவற்றை கூத்துக்களில் புகுத்துகின்றனர். இவ்வாறு செய்தால் அது கூத்தாக இருக்காது. விலாச நாடகமாகிவிடும் இது தேவைதானா?

Traditional Art என்று சொல்லப்படும் பாரம்பரியக்கலைகளில் எவரும் கைவைப்பதில்லை. காரணம் அக்கலைகள் அதன் சுயத்தை இழக்கக்கூடாது என்பதுதான். அதன் மூலவடிவமே அதன் தனித்துவம் அதில் மாற்றம் செய்ய முற்படுவது தவறானது என்பதை நாம் உணரவேண்டும்.

நமது சிங்கள சகோதரர்களின் பாரம்பரியக் கலைகளைப் பாருங்கள். கண்டி நடனம், சோக்கரி, யக்கா முதலிய நடனங்கள் அவ்வாறே தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் யாரும் எவ்வித மாற்றங்களையும் இதுவரை செய்ததில்லை. கண்டி நடனத்தில் அதே உடை, அதே ஆட்டம், அதே 'பெர' வாத்தியம். அதில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. அவ்வாறே சோக்கரி, யக்கா முதலிய ஆட்டங்களிலும் எவ்வித மாற்றங்களும்

செய்யப்படவில்லை. கண்டி நடனக்காரர் அணியும் ஆடைகள் இன்றும் அப்படியே இருக்கின்றன. பெர என்ற மத்தள வாத்தியத்தைத் தவிர வேறெந்த வாத்தியங்களும் சேர்க்கப்படவில்லை. ஆட்டமுறை, தாளக்கட்டு முதலியவற்றிலும் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. இது பற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

### 6. பிறநாடுகளின் பாரம்பரியக் கலைகள்

அண்டை நாடான இந்தியாவில் பாரம்பரியக் கலைகள் இன்றும் எவ்வித மாற்றமும் இன்றித் தொடர்கின்றன. கதகளி, யட்சகானம், தெருக்கூத்து முதலிய அனைத்தும் பழைய முறையிலேயே ஆடப்படுகின்றன. உடைகள், ஒப்பனைகள் எவற்றிலும் மாற்றமில்லை. ஆட்டங்கள், பாட்டுக்களிலும் எவ்வித மாற்றமுமில்லை. அவ்வாறே ஜப்பானின் கடுக்கி நடனம், சீனாவின் ட்றேகன் நடனம் முதலியன அதே பழைய பாணியில் அதே பழைய உடை, ஒப்பனை, அதே பழைய ஆட்டம் எனத் தொடர்கின்றன. எத்தனையோ தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருந்த போதும் தங்களுடைய பாரம்பரியக் கலைகளில் அவர்கள் கை வைக்கவில்லை, எவ்வித மாற்றமும் செய்யவில்லை. அவ்வாறே நமது பாரம்பரியக் கலையான கூத்துக்கலையும் பேணப்படவேண்டும்.

**கூத்துக்கலையில் கைவைக்கக்கூடாது என்பதற்கான சில காரணங்கள் வருமாறு :**

1. பாரம்பரியக் கிராமியக் கலைகள் அதன் மூல வடிவத்திலேயே இருக்க வேண்டும்.
2. அவற்றில் மாற்றங்கள் செய்தால், அவை தமது தனித்துவத்தை இழந்துவிடும். போலி முகத்துடன் காட்சியளிக்கும்.
3. எந்த நாட்டிலும் பாரம்பரியக்கலைகளை இவ்வாறு மாசுபடுத்துவதில்லை, நவீனப்படுத்தவில்லை.
4. பாரம்பரியக் கலைகள் ஒரு சமூகத்தின் வரலாற்றுப் பதிவு ஆகவும், நாகரிகப் பதிவாகவும் அமைகின்றன.
5. பாரம்பரியக் கலைகள் நமது பரம்பரைச் சொத்து - முதுசம் அதில் எவ்வித மாற்றமும் வேண்டியதில்லை.

தேசிய இலக்கியப் பெருவிழா-2009

திறந்த மட்டம்

# போட்டி முடிவுகள்

## சிறுகதை

**1ம் இடம்** : **திருமதி. தமிழ்ச்செல்வி துஷன்**
ஆரையம்பதி - 01

**2ம் இடம்** : **திரு.தங்கராசா இன்பராசா**
புதுக்குடியிருப்பு வடக்கு

**3ம் இடம்** : **செல்வி.செல்லத்தம்பி அமிர்தேஸ்வரி**
ஆரையம்பதி - 01

## பாடலாக்கம்

**1ம் இடம்** : **செல்வி.செல்லத்தம்பி அமிர்தேஸ்வரி**
ஆரையம்பதி - 01

**2ம் இடம்** : **M.I.A. முஸ்தபா**
பாலமுனை

**3ம் இடம்** : **தங்கராசா இன்பராசா**
புதுக்குடியிருப்பு

## கவிதை

**1ம் இடம்** : **M.I.அப்துல்வஹாக்**
பாலமுனை

**2ம் இடம்** : **M.I.A. முஸ்தபா**
பாலமுனை

**3ம் இடம்** : **செல்லத்தம்பி தாமரைச்செல்வி**
ஆரையம்பதி - 01.



# மண்முனைப்பற்றுப் பிரதேசத்தில் குடிசைக் கைத்தொழில்கள்

கி.தெய்வேந்திரகுமாரி

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவில் வாழ் மக்களிடையே காலங்காலமாகப் பின்வரும் குடிசைக் கைத்தொழில்கள் பேணப்பட்டு வந்துள்ளமை அவதானத்துக்குரியவை ஆகும். இவை வருமானம், பயன்பாடு எனும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பேணிக் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

**இப்பிரதேசத்தில் காணப்படும் கைவினைகள் பின்வருமாறு :**

1. தென்னையை மூலப்பொருளாகக் கொண்ட கைவினைகள்
2. பனையை மூலப் பொருள்களாகக் கொண்ட கைவினைகள்
3. பிரம்பை மூலப்பொருளாகக் கொண்ட கைவினைகள்
4. பன்னை மூலப் பொருளாகக் கொண்ட கைவினைகள் என்பனவாகும்.

**1. தென்னையை மூலப்பொருளாகக் கொண்ட கைவினைகள் :**

இப்பிரதேசத்தில் தென்னை மரங்கள் மிகச் செழிப்பாக வளர்ந்து பயன்தருகின்றன. தென்னை மரத்திலிருந்து தேங்காய்கள், இளநீர், பாளை, மட்டைகள் முதலியன பெறப்படுகின்றன. முதிர்ந்த தென்னை மரத்திலிருந்து வீடு அமைப்பதற்குத் தேவையான கைமரங்கள் என்பனவும், தேங்காய் மட்டைகளிலிருந்து தும்பு பெறப்பட்டுப் பலவிதமான பாவனைப் பொருட்களும் செய்யப்படுகின்றன.

ஆரையம்பதி - எஸ். நாகராசா என்பவர் விளக்குமாறு தொழிலை செய்து வருகின்றார்.

**தென்னந் தும்பினாலான கைத்தொழில்கள் :**

தென்னந் தும்பைப் பயன்படுத்தி மெத்தை, கயிறு, கால்தட்டி, தும்புத்தடி, வீட்டலங்காரப் பொருட்கள் என்பன செய்யப்படுகின்றன. கயிற்றில் பல இனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை தேட்டாக் கயிறு, அடம்பன் கயிறு, பெட்டிக் கயிறு, உப்பட்டிக்கயிறு, துண்டுக் கயிறு, கட்டுக்கயிறு என்பனவாகும்.

காங்கேயன் ஓடை, ஆரையம்பதி வாவியின் கரையோரத்தில் எல்லைகளைக் குடும்பரீதியாக முன்னோர்கள் பிரித்துள்ளனர். அவர்களுக்குப் பிறகு பெண்வாரிசிற்கே அந்த எல்லைகள் சொந்தம் எனும் அடிப்படையில் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பச்சைத் தேங்காய் மட்டைகளை தங்கள் எல்லைக்குள் கிடங்கு தோண்டிப் புதைப்பர். அதன்பின் புதைக்கப்பட்ட மட்டைகள் இளகியவுடன் மட்டைகளைத் தோண்டி எடுத்துத் தட்டித் தும்பாக்குவர்.

வேளாண்மை அறுவடைக்காலத்தில் உப்பட்டிக் கயிறுக்கு நல்ல கிராக்கி நிலவுகின்றது. அலங்காரப் பொருட்கள், கால்தட்டி போன்றவற்றுக்கு அழகிய வர்ணங்களில் பறவைகள், மான், ஒட்டகம் போன்ற விலங்குகள், '*Welcome*' போன்ற எழுத்துக்களும் பாவித்து அழகூட்டப்படுகின்றன. ஆரையம்பதியில், ஆரையம்பதி மேற்கு, ஆரையம்பதி - 03, ஆரையம்பதி தெற்கு, கோயிற்குளம், காங்கேயன் ஓடை, இராசதுரைக் கிராமம் போன்ற இடங்களில் வாழும் பெண்களில் சிலரும், நிறுவன ரீதியாகத் தும்புக் கைத்தொழில் நிலையத்தில் கற்ற இளம் பெண்களும் தத்தமது வீட்டில் இருந்தவாறே இத்தொழிலை மேற்கொள்கின்றனர்.

1930ம் ஆண்டளவில் ஆரையம்பதி 4ம் மைல் கல்லடியில் இருந்த தனியார் காணியொன்றில் ஓர் நவீன தும்புக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையும், தென்னந்தும்பாலையும் திறம்பட இயங்கியதாகவும், அப்பாடசாலையில் பயிற்சிபெற்ற திருவாளர்கள் கணபதிப்பிள்ளை கோணாமலை, காத்தமுத்து தம்பிப்பிள்ளை ஆகிய இருவரும் பின்நாட்களில் இலங்கையில் சில பிரதேசங்களில் இயங்கிய தும்புக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில்

ஆசிரியர்களாகக் கற்பித்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

அக்காலத்தில் ஆரையம்பதி தும்புக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இந்தியா, பர்மா முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் அவ்வேளையில் இப்பயிற்சிப் பாடசாலையில் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றியவர் மலையாளத்தைச் சேர்ந்த ஜோச் என்பவர் எனவும் மூத்தோர் வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

**தேங்காய்ச் சிரட்டையில் கைவினைகள் :**

தேங்காய்ச் சிரட்டைகளை அழகிய வடிவில் அதாவது இதயம், நட்சத்திரம், வட்டம், சதுரம் போன்ற அமைப்பில் வெட்டி நன்றாகச் சீவி வர்ணம் தீட்டி அலங்காரப் பொருட்களைச் செய்கின்றனர். அத்துடன் சிரட்டைகளை அழகாகச் சீவி வெட்டி அகப்பைகள் செய்கின்றனர். இச்சிரட்டைகள் முப்பரிமாணத்தில் செய்யப்படுகின்றன. சிறிது, நடுத்தரம், பெரிது என்பனவாகும். இச்சிரட்டைகளுக்கு பூவரசந்தடி உறுதியானது.

கோயிற்குளம் கிராமம் இவ்வகைத் தொழிலுக்குப் பெயர்பெற்றது. இக் கிராமத்திலுள்ள சில குடும்பங்களே இக்கைத்தொழிலைத் தங்கள் குடும்பப் பரம்பரைக் கைத்தொழிலாகச் செய்துவருகின்றனர்.

**கிடுகிழைத்தல் :**

காய்ந்து விழுந்த தென்னை ஓலை மட்டைகளை நீர் நிலைகளிலும், கிணற்றடியிலும் இழகப்போட்டு இழைத்து சில இடங்களில் விற்பனை செய்கின்றனர். பல இடங்களில் வீட்டுக்கூரைகளுக்கும், வேலிக்கும் பயன்படுத்துகின்றனர்.

ஆரையம்பதி மேற்கு, கோயிற்குளம், ஆரையம்பதி - 02 முதலிய இடங்களில் இக்கைத்தொழில் நடைபெறுகின்றது.

**தும்புத்தடியும், ஈர்க்கில் தடியும் அமைத்தல் :**

ஆரையம்பதி மேற்குப் பிரிவிலும், ஆரையம்பதி தெற்குப் பிரிவிலும் வாழும் சில பெண்கள் மேற்படி கைத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.

## 2. பனைப் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்ட கைவினைகள் :

பனை ஓலைப் பெட்டிகள், பாய், விசிறி என்பனவும் பனம்பழக் கழியில் இருந்து பனாட்டு மற்றும் ருசியான தின்பண்டங்களும் செய்யப்படுகின்றன. சில வீடுகளில் பனம்பழத்துக் கழியுடன் மா, சீனி சேர்த்து பலகாரங்கள் தயாரித்து தென்னை ஈர்க்கிலில் கோர்த்து விற்பனை செய்யப்படுகின்றன. பனம் பழத்துக் கழியைக் காய்ச்சி சாதத்துடன் சேர்த்தும் உணவாகப் பயன்படுத்துகின்றனர்.

பாய், பெட்டி, தட்டு, கூடை பிட்டுப் பெட்டி போன்ற பொருட்கள் பனையோ லையால் செய்யப்படுகின்றன. நெல் காயவைப்பதற்கான பாய் ஒற்றைப்பனை ஓலையால் இழைப்பர். விருந்தினர்களை வரவேற்பதற்கும், வீட்டுப் பாவனைக்கும், குழந்தைகளைத் தொட்டிலில் இடுவதற்குமான (சாணைப்பாய்) பாய்களை இரட்டை ஓலையில் இழைப்பர். இக்கிராமங்களில் பெண்பார்க்கும், மாப்பிள்ளை பார்க்கும் வேளைகளில் பனை ஓலைப் பெட்டிகளின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுவதால் மாப்பிள்ளைப் பெட்டி என்று அழகிய வண்ணங்களில் அலங்கார வேலைப்பாடுகளுடன் செய்யப்படுவதனையும், இவற்றைவிடப் புதிர்ப்பெட்டி என்று புதுநெல் எடுப்பதற்கும் பூசைப்பெட்டி என்று பூசைப் பொருட்கள் கொண்டு செல்வதற்கும் விசேடமாகச் செய்யப் படுகின்றன. மேலும் பூச்செண்டு, பூச்சாடி, கைப்பைகள், தோளில்போடும் தோற்பைகள் என்பனவும் அழகிய வடிவங்களில் செய்யப்படுகின்றன.

மாவிலங்கத்துறை, கோயிற்குளம், காங்கேயன் ஓடை, பாலமுனை ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற சில பெண்கள் இக்கைத்தொழிலில் ஈடுபடுகின்றனர். மேலும் நன்கு முற்றிய பனை மரங்கள் வீடமைப்பு வேலைகளுக்கும், காய்ந்த பனையோலைகள் வேலியமைப்பு வேலைகளுக்கும் பயன்படுத்தப் படுகின்றன.

## 3. பிரம்புக் கைத்தொழில்

சுளகு, மரைக்கால், பெட்டி, கூடை, கரப்பு, தொட்டில் முதலிய பொருட்கள் பிரம்பைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்றன. மாவிலங்கத்துறை, தாளங்குடா, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் சில ஆண்கள் இக் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

**4. பன் கைத்தொழில் (ஒருவகைப் புல்)**

பன்னைப் பயன்படுத்தி அழகிய வண்ணங்களில் பாய் பின்னுகின்றனர். சிறிய பாய், பெரிய பாய், மாப்பிள்ளைப் பாய், மெத்தைப் பாய், தொட்டிற்பாய் எனப் பல ரகங்களில் பாய் பின்னுகின்றனர்.

பன்பாய்களுக்கு மாவட்டத்திலும், வெளிமாவட்டங்களிலும் நல்ல மதிப்புண்டு. கோயில்குளம், காங்கேயனோடை, ஒல்லிக்குளம், மாவிலங்கத்துறை, மண்முனை, தாளங்குடா ஆகிய கிராமங்களிலுள்ள நீர் தேங்கி நிற்கக் கூடிய காணிகளில் பன் செய்கைபண்ணப்படுகின்றது. மாவிலங்கத்துறை, காங்கேயன் ஓடை, பாலமுனை ஆகிய கிராமத்து மக்களில் சிலர் மேற்படி பன்னில் பாயிழைக்கும் கைத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

**5. ஈச்சமரத்து ஓலை மட்டைக் கூடு**

ஈச்சமரத்து ஓலை மட்டைகளை வெட்டிப் பதமாகச் சீவி அதைக்கொண்டு பெரியளவிலான மீன்கூடுகள் செய்யும் கைத்தொழில் மண்முனைக் கிராமத்தில் வாழ்கின்ற ஒரு சில ஆண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக் கைத்தொழில் தற்போது அருகிக் கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.



'திருமணம் நாடி காதலோடு'
(1992) ஜோர்ஜ் கீட்

பிரதேச சாகித்திய விழா 2009

## மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தில், பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்ட கலாசார போட்டி

### பேச்சுப் போட்டி

**01.** **முகம்மது ஸபாஹிர் பாத்திமா ரௌஸான்**
மட்/அக்ஷா மகாவித்தியாலயம்
காங்கேயனோடை

**02.** **கை.கிருஷ்ணவேணி**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்

**03.** **உபைதீன் முகம்மது அஸ்லம்**
மட்/அல் அக்ஷா வித்தியாலம் - காங்கேயனோடை.

### கவிதைப் போட்டி

**01.** **செல்வி.கோ.கீதா**
மட்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்

**02.** **செ.பபிதரன்**
C,S12.செல்வாநகர் ஆரையம்பதி - 02

**03.** **உபைதீன் முகம்மது அஸ்லம்**
காங்கேயனோடை மட்/அக்ஷா வித்தியாலம்

### சிறுகதைப் போட்டி

**01.** **அ.பூஸிதன்**
ஆரையம்பதி - 01

**02.** **த.இன்பராசா**
புளியடி வீதி, புதுக்குடியிருப்பு

**03.** **ஆ.யுகராசா**
மட்/ஆரையம்பதி இ.கி.மி. மகா வித்தியாலயம்



# மண்முனைப்பற்றும் வேடர் குடியிருப்பும்

சூரியகுமாரி

வேடர் குடியிருப்பு என்பது மண்முனைப் பிரதேசத்தில் உள்ள ஒரு பழைய சிறிய கிராம மாகும். இப்பிரதேசத்தில் ஆங் காங்கே தங்கியிருந்த வேடர்கள் ஒன்று சேருமிடமே இந்த வேடர் குடியிருப்பாகும். இதனால்தான் இக்கிராமத்திற்கு இப்பெயர் வந்தது. இது மட்டக்களப்பு - கல்முனை வீதியில் ஆறு மைல் தொலைவிலிருக்கிறது. தாளங்குடாவுக்கும், புதுக்குடியிருப்புக்கும், பாலமுனைக்கும் மத்தியில் உள்ளது. (தற்போதும் வேடர் குடியிருப்பு என்று பெயர் இருக்கிறது. வேடர்கள் தான் இல்லை)

இந்தப் பிரதேசமானது குளங்கள், ஓடைகள், கேணிகள் என பல நீர்நிலைகள் உள்ள இடமாகும். இங்கு ஆனைக்குளம், அலையன்குளம், வண்ணான்குளம், சீராட்டிக்குளம், கோயில்குளம், ஒல்லிக்குளம் எனப் பல குளங்களும் காங்கேயனோடை, நடுவோடை, பால்வாத்த ஓடை எனப் பல ஓடைகளும் வம்மிக்கேணி, துரும்பன்கேணி என பல கேணிகளும் உள்ளன. தற்போது இவற்றில் சில மூடப்பட்டுவிட்டன. சில மூடப்பட்டுக்கொண்டு வருகின்றன. இருந்தாலும் இருந்த இடங்களின் பெயர்கள் மூடப்படவில்லை.

அக்காலத்தில் பல வேடர்கள் ஆங்காங்கே நீர் நிலைகளை அடுத்து வாழ்ந்து வந்தனர். மீன்பிடித்தல், சேனைப்பயிர்ச்செய்கை, வேட்டையாடல்,

தேன் எடுத்தல் போன்ற தொழில்களைச் செய்துகொண்டு வந்தனர். சிலர் தாங்கள் தொழில் செய்யும் நீர்நிலைகளையடுத்து வாழ்ந்து வந்தாலும் பெரும்பாலானவர்கள் வேடர் குடியிருப்புக் கிராமத்திலேயே இரவில் தங்குவார்கள். காலையில் எழுந்து தொழில்களுக்குப் போய்விடுவார்கள். வெறியன், மஞ்சன், கங்கன், திடகன், சோளன், அலையன், ஆனையன், காத்தான், துரும்பன் என்பன இவர்களில் சிலரது பெயர்களாகும்.

சில இடங்கள் இன்றும் இவர்களின் பெயர்களாலேயே குறிப்பிடப் படுகின்றன. மஞ்சன் வாழ்ந்த இடம் மஞ்சந்தொடுவாய். இதற்குப் பக்கத்திலே இவன் சேனை செய்த இடம் 'சேனைத்தெரு' என்ற பெயரோடு உள்ளது. கங்கன் இருந்த இடம் காங்கேயனோடை, காத்தான் இருந்த இடம் காத்தான் குடியிருப்பு. அலையன் வாழ்ந்த இடம் அலையன்குளம், ஆனையன் வாழ்ந்த இடம் ஆனைக்குளம், துரும்பன் வாழ்ந்த இடம் துரும்பன்கேணி, வெறியன் வாழ்ந்து சேனைப்பயிர் செய்த இடம் 'வெறியன்சேனை' என இவர்களது பெயர்களை நினைவூட்டிக்கொண்டு இருக்கின்றன.

பல இடங்களில் இவர்கள் வாழ்ந்திருந்தாலும் சில குறிப்பிட்ட விசேடமான தினங்களில் இரவு பகலாக இங்கேயே தங்கிவிடுவார்கள். சில நாட்கள் தொடர்ச்சியாகவும் தங்கிவிடுவார்கள். இக்காலங்களில் இக்கிராமம் பெரிய ஆரவாரத்தோடு கலகலப்பாக இருக்கும். பேயோட்டுதல், நோய் தீர்த்தல், உருக்கொண்டு ஆடுதல், காவல்செய்தல், கொடிய வைசூரி போன்ற நோய்கள் வராமல் தடுத்தல் இவற்றுக்கான வேட மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு ஆடுவார்கள். இது பார்ப்பதற்கு மகிழ்ச்சியான நிகழ்வாகும். இது இவர்கள் ஒன்றுகூடி மகிழும் விழாக்காலமாகும். இவ்விழாக்களை காண்பதற்காக தாளங்குடா, புதுக்குடியிருப்பு, ஆரைப்பற்றை போன்ற அயல் கிராமங்களில் இருந்தும் மக்கள் கூட்டங்கூட்டமாக வருவதுண்டு.

இவர்கள் தங்களது தொழில்கள்மூலம் பெற்ற இறைச்சி, தேன், கருவாடு, காய்கறிகள் போன்றவற்றை பக்கத்து கிராம மக்களுக்கு விற்பதுமுண்டு. இவர்கள் எடுக்கும் தேனை சுரைக்குடுகு, நாடங்குடுகு என்பவற்றில் சேமித்து வைப்பார்கள்.

ஒரு வகையில் பார்த்தால் வேடர்கள் நமது மூதாதையர்கள் எனலாம். இவர்களே ஆதிக்குடிகள் என்பதை வரலாறு நிறுவியுள்ளது. மட்டக்களப்புக் கிராமங்களில் நடைபெறும் 'மகிடி' என்னும் வேடிக்கை நிகழ்வில் 'வேடர்' முதல் இடம் பெறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இவ்வேடர் தொடர்பாக இலங்கைக்கு வந்த ஆர்.எல்.ஸ்பிட்டல் என்னும் ஆங்கிலேயர் விரிவான ஆய்வுகளைச் செய்து அவர்களைப் பற்றிய சில நூல்களையும் எழுதியுள்ளார். அவ்வாறே தேற்றாத்தீவைச் சேர்ந்த இலக்கிய கலாநிதி க.தா.செல்வராசாகோபால் என்பவர் "யார் இந்த வேடர்?" என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில் மட்டக்களப்பில் வாழ்ந்த வேடர்களைப் பற்றிய விபரங்கள் இடம் பெறுகின்றன. மட்டக்களப்பில் பல்வேறு இடங்களில் வேடர்கள் வாழ்ந்துள்ளனர். அவ்வாறான சில இடங்கள் வேடர் குடியிருப்பு என இன்றும் அழைக்கப்படுகின்றன. உதாரணமாக ஓட்டமாவடியை அடுத்துள்ள ஒரு பிரதேசம் வேடர்குடியிருப்பு என அழைக்கப்படுவதைக்கூறலாம். வேடர் குலப் பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும் தனித்துவமானவை. இவற்றை மீறுபவர்களுக்கு வேடர் தலைவன் அதற்கான தண்டனையை வழங்குவான்.

அந்த வகையில் இந்த வேடர் குடியிருப்பில் வாழ்ந்த இவ்வேடர்களில் பலர் இறந்து விட, பலர் அயலிடங்களுக்குச் சென்றுவிட்டனர். ஆதிக் குடிகளான இந்த வேடர் சமூகம் மறைந்துவிட்டாலும் இவர்கள் வாழ்ந்த இடம் இப்போதும் 'வேடர் குடியிருப்பு' என அவர்களை நமக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது. ■



பிரதேச
சாகித்திய விழா
2009

# போட்டி முடிவுகள்

## ஓவியப் போட்டி

**01. தவராசா தேவகுமார்**
மட்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்

**02. ஆதம்பாவா முனிராபானு**
மட்/காங்கேயனோடை அல் அக்ஷா மகாவித்தியாலயம்

**03. முகம்மது முஸ்தபா பாத்திமா நபீறா**
மட்/காங்கேயனோடை அல் அக்ஷா மகாவித்தியாலயம்

## நடனப் போட்டி

**01. மட்/ ஆரையம்பதி மகாவித்தியாலயம்**

**02. மட்/ மாவிலங்கதுறை விக்னேஸ்வரா வித்தியாலயம்**

**03. புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகம்**

**04. மட்/ பாலமுனை அலிகார் வித்தியாலயம்**

## நாடகப் போட்டி

**01. புதுக்குடியிருப்பு கதிரவன் கலைக்கழகம்**

# சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தின் சமூகப் பொருளாதாரப் பணிகள்

**சி.க.பொன்னம்பலம் – ச.நி.**

சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றம் நலிவுற்றோரின் வாழ்வாதாரத்தை மேம் படுத்துவதில் தன்னார்வம் கொண்ட சமூகத் தொண்டர் நிறுவனமாகும். ஆரம்ப காலத்தில் மண்முனைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் தனது செயற்பாடுகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொண்டு வந்த இந்த நிறுவனத்தின் அப்போதைய பெயர் "சரீரம் ஸ்ரீ லங்கா" என்பதாகும். இந்த அமைப்பு அப்போது ஒரு பிரதேசமட்ட சமூக அமைப்பாக மட்டுமே தென்பட்டது.

தலைவர் திரு.ஆறுமுகம் லோகேஸ்பரன் அவர்களின் விடாமுயற்சி யினாலும், நீண்டகால சமூக சேவைகள் பற்றிய அனுபவ அறிவினாலும், தகைமை சான்ற புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பையும், நட்பையும், பேருதவியையும் இலகுவாகவே பெற்றுக் கொள்ளும் சிறப்பியல்பு காரணமாகவும், துன்ப துயரத்திற்குள்ளான மக்களைப் பல்துறைகளிலும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நல் நோக்கம் காரணமாகவும் அவருடைய தலைமைத்துவம் எல்லோராலும் மதிக்கப்பட்டது; வரவேற்கப்பட்டது; அவருடைய வேண்டுகோள்கள் அவ்வப்பொழுது ஏற்றவாறு நிறைவேற்றப்பட்டன.

இறைபக்தியும், மக்கள் சேவை உணர்வும், இரக்க சிந்தையும், தூர நோக்குடைய சிந்தனைத்திறனும் உடையவரான திரு.ஆறுமுகம் லோகேஸ்பரன் அவர்களின் மன எண்ணங்கள் யாவும் படிப்படியாக நிறைவேறி வந்தன. அவருடன் சேர்ந்து பணியாற்றிய நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களும் தம்மாலான முழு ஒத்துழைப்பையும் நல்கினர். காலத்திற்குக் காலம் வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பணியாளர்கள் இணைக்கப்பட்டனர். இதன் பெறுபேறாக அந்த நிறுவனம் சமூகத்தை ஒருபுறம் முன்னேற்றிக் கொண்டு

வந்த அதேநேரத்தில் நிறுவனக் கட்டமைப்பையும் செயல்திறனையும் வலுப்படுத்திக் கொண்டும் வந்தது. இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளையும், அவற்றின் வெளிப்படைத்தன்மையையும், தலைவரின் முழு நேரப்பணியையும், அவரிடம் காணப்பட்ட உதார குணங்களையும், செயற்திறனையும் மெச்சிய பலரும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்தனர்.

தன்னைத்தானே சுயமாக வளர்த்துக் கொண்ட இந்த நிறுவனம் அதன் பெயரை "சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றம்" என மாற்றிக் கொண்டது. இந்தப் பெயரின் வாசகத்தை ஆராய்ந்து பார்த்தால் அதன் சிறப்புப் பொருளும், நிறுவனத்தின் மனப்பூர்வமான நல்லெண்ணமும் வெளிப்படையாகத் தென்படும். இந்த வகையில், "சரீரம்" என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், அது பௌதீக உடலைக்குறிக்கின்றது. உடல் பேணப்படவேண்டும். நல்வாழ்வுக்கு நல்ல ஆரோக்கியமான தேகம் வேண்டும். அதற்கு உணவு முதலான தேவைகள் அவசியமாகும். இவற்றைப் பெறுவதற்கு பணம் வேண்டும். பணத்தை எங்கிருந்து பெறலாம்? இரந்தோ அல்லது திருடியோ பெறலாமா? இல்லை. சரீரத்தின் நோக்கம் என்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் தனித்துவமான முறையில் தனது வாழ்வுக்கு வேண்டிய வருமானத்தைத் தானே மேற்கொள்ளும் சுய முயற்சி உழைப்பின் மூலமாகப் பெறவேண்டும் என்பதாகும். இதற்கேதுவாக, நல்விருப்பமும், சுறுசுறுப்பும், நாணயத் தன்மையுமுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளம் கண்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சுயதொழில்களில், நவீன தொழிநுட்ப அறிவினைப் பொருத்தமான பயிற்சிகளின் மூலம் இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதற்கும், தொழிலைநடத்துவதற்கும் தேவையான நிதியைக் கடனாக வழங்குவதற்கும் சரீரம் நிறுவனம் முன்நிற்கிறது. இத்தகைய குடும்பங்கள் பயனாளிக் குடும்பங்களாகக் கருதப்படுகின்றன. இவர்களுடைய செயற்பாடுகள் பொருத்தமான வகையில் கண்காணிக்கப்பட்டு எதிர்பார்க்கப்படும் மேலதிக வருமானம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

"ஸ்ரீலங்கா" என்ற சொல்லானது, இந்த நிறுவனம் இலங்கை மணித் திருநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தனது வலிந்துதவு சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மனப்பூர்வமாக விரும்புவதை எடுத்துக் காட்டுகிறது.

"தேசிய" என்ற சொல்லானது, இலங்கைத் தீவின் கண்ணே வாழுகின்ற எல்லாத் தேசிய இனத்தவர்களையும் ஒருதாய் பிள்ளைகள் போன்று சகோதரத்துவத்துடன் அரவணைப்பதற்கும், அணைத்து உதவித் திட்டங்களையும், சமூக மேம்பாட்டுத்திட்டங்களையும், ஏனைய அபிவிருத்தித் திட்டங்களையும் எவ்வித பாகுபாடுமின்றி எல்லா இனத்தவர்களும் பங்குபற்றக்கூடிய வகையில் நடைமுறைப்படுத்துவதையும் துணிவானதும், பரிசுத்தமானதுமான உள்ளு ணர்வுடன் வெளிக்காட்டி நிற்கின்றது.

கள்ளம், கபடமற்ற முறையில் தெள்ளத் தெளிவான பொதுநோக்கு டனும், சமத்துவ உணர்வுடனும் செயற்பட்டு வந்ததால் சரீரம் நிறுவனத்திற்கு எல்லாத்திசைகளிலிருந்தும் ஆதரவும், பாராட்டும் கிடைத்தது.

சரீரம் நிறுவனமானது இலங்கையில் வலுவுள்ள நிறுவனமாகச் செயற்பட்டு வந்த "சனசவிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்" பங்காளி நிறுவனமாகவும், செயற்பாட்டு நிறுவனமாகவும் இருந்த காலத்தில் உலக வங்கியின் வழிகாட்டலின் கீழ் மிக முக்கியமான பயிற்சி நெறிகளையும், சுகாதாரம், கல்வி, வாழ்வாதாரம் முதலான செயற்பாடுகளையும் வியக்கத்தக்க வகையில் செயற்படுத்தி வந்ததை அவதானிக்கும் பொழுது அந்நிறுவனத்தின் தலைமைத்துவம், முகாமைத்துவம், களச்செயற்பாட்டுத்திறன் என்பவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறே வெவ்வேறு காலகட்டங்களில் பலதரப்பட்ட நிதி நிறுவனங்களினதும், அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிதிபெறுதிட்டங்கள் முதலானவற்றின் அனுசரணையுடன் உட்கட்டமைப்பு தொடக்கம் சமாதானச் செயற்பாடுகள் வரையான அனைத்துச் சமூக மேம்பாட்டுத் திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்துள்ளது. யுத்தத்தால் குடிபெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்காக ஆயிரக்கணக்கான தற்காலிக வீடுகளையும், நூற்றுக் கணக்கான நிரந்தர வீடுகளையும் அரசாங்கத்தின் அறிவுறுத்தற்கமைய அவ்வப்பொழுது பல்வேறு பிரதேசங்களில் அமைத்துக்கொடுத்ததுடன், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் நூற்றுக்கணக்கான நிரந்தர வீடுகளை வெவ்வேறு பிரிவுகளில் நிர்மாணித்துக் கொடுத்துள்ளதையும் இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறலாம்.

ஆரம்பகாலமிருந்து அண்மைக்காலம் வரை தனிநபர் கடன் திட்டங்களையும், கிராமியமட்டக் குழுக்கடன் திட்டங்களையும், மத்தியதர சுயதொழில் முயற்சியாண்மையினர் கடன்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வந்த இந்த நிறுவனம், தற்பொழுது அவற்றிற்கெல்லாம் மேலாக கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் தோறும் செயற்பட்டுவரும் மாதர் சங்கங்களின் ஊடாகவும் தங்கள் நுன்கடன் சேவையை விஸ்தரித்துள்ளது. இப்புதிய செயற்பாடானது ஓர் அரச நிறுவனச் செயற்பாட்டினை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது பாராட்டப்படத் தக்கதொன்றாகும். அரச அதிகாரிகளான பிரதேச செயலாளர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைச் செய்துகொண்டு, அவர்களால் அடையாளப்படுத்திக் கொடுக்கப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இச்செயற்பாட்டில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் பணியாற்றும் வாழ்வாதார உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோ கத்தர்கள், நிவாரண சகோதரிகள், மகளிர் அபவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் முதலானோரின் சேவையும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் நுண்கடன் திட்டச் செயற்பாடானது நவீன தொழி நுட்பங்களுடன் கூடிய கணனிமயப்படுத்தப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. இச்சேவையில் போதிய தொழிநுட்ப அறிவையும், கணக்கு மற்றும் முகாமைத்துவ நுண் அறிவையும் பெற்ற உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள். இவர்களுக்குப் பல்வேறு களப் பயிற்சிகளும், தொழிநுட்பப் பயிற்சிகளும், அலுவலக நிருவாகப் பயிற்சிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. நிறுவனத்தின் தலைவர் உட்பட இத்திட்டத்தின் முதுகெலும்பு போன்று பணியாற்றும் உயர் அதிகாரிகள் பலருக்கு உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பயிற்சி நெறிகளை ஆழ்கை செய்யத்தக்க அனுபவமும், திறமையும் வாய்ந்த பயிற்சி நெறியாளர்களும், நிபுணத்துவ ஆலோசகர்களும் இந்த நுண்கடன் திட்டச் செயற்பாட்டினை அலங்கரிக்கின்றனர்.

சீரம் நிறுவனத்தின் நுண்கடன் திட்டத்திற்குத் தேவையான நிதியினைக் கடனாக வழங்கும் முக்கிய நிறுவனமாக இலங்கையில் இயங்கும் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் கருதப்படுகின்றது. இந் நிதியம் திட்டமிடல்

மற்றும் செயற்பாட்டு அமைச்சின் வழிகாட்டலில் இயங்கும் ஒன்றாகும். இவர்கள் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியிலிருந்தே நிதியினைப் பெற்றுச் சரீரம் போன்ற பங்காளி நிறுவனங்களுக்குக் கடன் வழங்குகிறார்கள். ஆதலால் சரீரம் நிறுவனத்தின் நுண்கடன் வழங்கும் சேவையானது ஓர் அரச சேவைக்கு ஒப்பானதாகும் என்பது ஒப்புவிக்கப்படுகின்றது.

மக்களின் அபிவிருத்தி என்பது அவர்களின் மனங்களை வென்றெடுப் பதிலும், தேவையான மனமாற்றங்களை ஏற்படுத்துவதிலும்தான் முற்றிலும் தங்கியுள்ளது. மக்கள் மனமாற்றத்தை வெறும் விழிப்புணர்வு செயற்பாடுகளின் மூலமாகவும், சமூக வலுவூட்டல் செயற்பாடுகளின் மூலமாகவும் மாத்திரம் ஏற்படுத்திவிட முடியாது. சரீரம் நிறுவனம் இந்த உண்மையினை நீண்டகால அனுபவத்தின் வாயிலாகக் கண்டறிந்துள்ளது. ஆதலால், இந்நிறுவனத்தினர் மக்கள் மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஆன்மீக வழிமுறைகள் இன்றியமை யாதனவாகும் என்று உணர்ந்தார்கள். இதன் வெளிப்பாடாகத் தங்கள் நிறுவனத்தின் தலைமை அலுவலக வளாகத்துள் ஆலயமொன்றை அமைக்க முன்வந்தனர். இந்த ஆலயம் "நிஷப்தம் ஸ்ரீ மஹா விஷ்ணு தேவஸ்தானம்" என்ற பெயருடன் மிகவும் பிரபலமாக இயங்கி வருகின்றது. இங்கே பொறுப்பு வாய்ந்த சமய குரு ஒருவர் நாளாந்தம் 03 காலப் பூசைகளையும் நடத்தி வருகின்றார். விசேட காலங்களில் யாகம், அபிஷேகம், சிறப்பு ஆராதனைகள் என்பன நடைபெறுகின்றன. தியானப் பயற்சிகள், பஜனைகள், சமயச் சொற் பொழிவுகள் என்பனவும் அவ்வப்பொழுது நடாத்தப்படுகின்றன. வருடாந்தக் கிருஷ்ண ஜெயந்தி பெரு விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. வருடந் தோறும் இவ்விழாவின்போது சமய அறிவுரைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிய புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட்டு அடியார்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீ கிருஷ்ண பகவானது தர்ம உபதேச தத்துவங்களை மக்களிடையே பரப்புவதை நோக்காகக் கொண்டு ஸ்ரீ பகவத்கீதை உண்மை உருவில் என்ற மகத்துவம் வாய்ந்த நூலின் பிரதிகளும் அடியார்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

சமூக சேவைகளையும், சமய சேவைகளையும் காலத்திற்கேற்றவாறு முன்னேற்றகரமாக இடைவிடாது செய்வதையே தனது முழுநேரப் பணியாக

ஏற்றுக்கொண்டுள்ள சரீரம் நிறுவனத்தின் தலைவர் திரு.ஆறுமுகம் லோகேஸ்பரன் அவர்கள் ஒரு சிறந்த செயல்வீரராகவும், கர்மயோகியாகவும் கருதப்படுகின்றார். இதன் காரணமாகத்தான் போலும், இந்த உண்மையை முன்னரே கண்டறிந்த மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அமரர் திரு.ஜோசப் பரராசசிங்கம் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே இவருக்குக் "கர்மயோகி" என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.

சமூக மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான ஒவ்வொரு துறையிலும் குறிப்பிடத்தக்க அளவு சேவையினை ஆற்றி நற்பெயர் பெற்றுவருகின்ற சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமானது கிழக்கிலங்கையின் முதல்தர நுண்கடன் திட்ட அமைப்புக்களில் ஒன்றாகவும் மளிர்கின்றது. சுருங்கக்கூறின் நவீன வலைப்பின்னல் செயற்பாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ஓர் அமைப்பாகவும் சரீரம் மதிப்பிடப்படுகின்றது. இந்த நிறுவனத்தின் பணிகள் இதே வேகத்தில் தொடர்ந்து செயற்படுமானால் குறுகிய காலத்தில் வறுமையானது ஒழிக்கப்படு வதற்கும், மக்கள் அனைவரும் ஒரே இனமாக வாழ்வதற்கும் வழி பிறக்கு மென்று துணிந்து கூறலாம். இப்பணிகள் தொடர எமது வாழ்த்துக்கள்.

கிருஷ்ணார்ப்பணம்!

பிரதேச சாகித்திய விழா 2009 சிறுகதைப் போட்டியில் முதலிடம்

# பாரம் குறைந்தது



அ. பூஷிதன்

அக்கிராமத்தின் தெரு நாய்களின் ஊளைச் சத்தம் அடங்குவதற்கு முன்பே சாமக்கோழிகள் கூவி நடுராத்திரி என்பதனை சாமக்கட்டு கிராமத்திற்கு தண்டோரா போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. அக்கிராமமே அவ்வேளைதான் உறங்கிக் கொண்டிருந்தது. ஆனால் மங்கம் மாவின் குடிசையினுள்ளே ஐயோ! அம்மா! வலிக்குதே!, ஐயோ! வலிக்குதே! என்ற ஈன சுரஓசை அந்த அமாவாசை இரவின் பேரிருளைக் கிழித்துக் கொண்டு, உறக்கத்தில் கிடந்த பரிமளத்தை திடுக்கிட்டு விழிக்கச் செய்தது. என்னங்க; இஞ்ச, என்னங்க! என்ற முனகலோடு சேர்ந்த பரிதாபகரமான சத்தம் குடித்து விட்டு அயர்ந்து குப்பறப்படுத்துக்கிடந்த காத்தமுத்தின் காதுகளில் கடசிமட்டும் விழுந்ததாக இல்லை.

பரிமளத்தின் பழுவின் மேல் கிடந்த நான்காவது தங்கையின் காலையும், கழுத்தை சுற்றிவளைத் திருந்த கடசித் தம்பியின் கைகளையும் ஒருமாதிரியாக விலக்கிவிட்டு எழும்ப முயன்றவளை, ஐந்தாவது தங்கையின் அலறல் அப்படியே ஒருகணம் அசைவற்று நிற்கவைத்தது. ஆமா; அவள் கழட்டிவிட்ட கைகளால், கடசித் தம்பி ஐந்தாவதின் கழுத்தைக் கட்டி பிடிக்க எட்டியபோது ஏற்பட்ட பயவுணர்வின் பிரதிபலிப்பே அவ்வலறல் ஆகும். ஒரு மாதிரியாக சுதாகரித்துக் கொண்டு காரிருளில் தட்டுத்தடுமாறி சகோதரங்களின்

உறங்கல் முகாமிலிருந்து வெளிவந்தாள் பரிமளம். பக்கத்து புளியமரத்திலிருந்து அலறிய ஆந்தையின் கொடூரச் சத்தம் அவளது இரத்தத்தையே உறையச் செய்தது.

தாயின் ஏழாவது மகவின் பிரசவ வேதனையின் முனகல், தாயின் அருகில் தாவி ஓடச்செய்தது. அம்மா!, அம்மா! என்ன செய்யுது என்ற பரிமளத்தின் குரல் கேட்ட மங்கம்மா, “அந்த மனிசன எழுப்பு புள்ள, மாசமும் செல்லல்ல என்ர இடுப்பு வலி தாங்கமுடியல்ல, நான் கத்தக்கத்த வழமைக்கு மாறாகப் புணம்போல கிடக்காரு” என்று அழுகிற சக்தியை இழந்த நிலையில் கெஞ்சுவது போல அந்த மண்ணெண்ன குப்பி விளக்கின் ஒளியைப் பழிப்பது போல, தாயின் சிறுத்து மின்னின கண்கள் வேதனையின் விளிம்பில் நின்று வேண்டுவது போல தோன்றியது. அவரா? அவரு, வழமைக்கு மாறாக இன்று உச்சஸ்தான போதையில் உழுந்து கிடக்காரு, எப்பையாவது உன்மேல், உன்ர பிள்ளைகளின் மேல அவருக்கு கவலை எப்பவும் இல்லை என்று உரத்துக் கத்தவேணும் போல பரிமளத்துக்கு இருந்தது. பயனில்லை என்பதையறிந்தவள் நான்போய் பக்கத்துக் கிராமத்தில இருக்கிற மருத்துவத் தாதியை கூட்டித்து வாறன், என்று விடைக்கே காத்திருக்காது விரைந்த பரிமளத்தின் செவிகளில்; “வேணாம் புள்ள, அவ்வளவு தூரம் இருட்டுக் குள்ள நீ தனியாக, இந்த பேயிருளில போகாதம்மா” என்ற பாசவார்த்தைகள் பட்டுத்தெறித்தன.

எவ்வளவு காலத்துக்குத்தான் அயலவங்களும் பொறுப்பாங்க. நாள் தவறினாலும் அப்பா குடிச்சிப்போட்டு கெட்ட வார்த்தைகளால் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு ஏசாத நாள் கிடையாது. வீட்டில பொஞ்சாதி, பிள்ளை களுக்கு ஏசாத, அடியாத நாள் கிடையாது. இவரிட குணம் தெரிஞ்சதுகள் “நாயின்ற வால்” அத நிமித்த முடியாது என்று சொல்லி, இவர கணக்கில எடுக்காம எங்கட ஊராக்கள் விட்டுத் தாங்க. ஐயோ! பாவம் பிள்ளைகள் என்று எங்களுக்கு ஆக்கிற காய்ச்சிறதில, இவருட கண்ண மூக்க பார்த்து தந்துதுகளண்டா, அதறிஞ்சு அண்டைக்கு முற்றாக அதுகளுக்கு வசபாடுவாரு.

இவருட கூத்தாலதானாம் அண்ணன்மார்கள் இரண்டுபேரும் அங்கால போயினதாமெண்டு எல்லோரும் கதைக்கிறவங்க. ஆனா இந்த

மனிசன் அதச்சாக்கா வைச்சித்து மேலும் மேலும் குடிச்சித்து வந்து, பிள்ளைகள் போன துக்கமாம் என்று அம்மாவ போட்டடிப்பாரு. அம்மாட குடும்பம் முன்பு ஓரளவு வசதியான குடும்பம் தானாம். ஏழாம் தரம் படிச்சிக்கொண்டிருக்கக்குள அம்மாவ முறமாமன்ட மகனென்று கட்டித்தாங்க, கட்டித்தாங்க என்று கரச்சப்படுத்தினதாம். பொம்பிளப்புள்ள படிச்சித்தான் என்ன செய்யிற, எண்டைக் கெண்டான அவன் காத்தமுத்துக்குத்தானே கட்டி வைக்கவேணும் என்றும் "வைக்கலில விளைஞ்சத்த வைக்கலிலதானே கட்டவேணும்" என்றும், "நான் பள்ளிக்குப் போகவேணும் படிக்கவேணும்" என்று ஒத்தக்காலில நின்ற அம் மாவுக்கு ராவோட ராவாக கலியாணம் செய்து கொடுத்தவங்களாம். ஆரம் பத்தில எந்தவித குடிவெறியுமில்லாம, நல்லாத்தானாம் நடந்தவர்" அதுவும் ஒரு மூன்று மாசந்தானாம். பிறகு வெள்ளாம வெட்ட என்று கரவாகுக்கு போனவரு, இரண்டு கிழமையால நல்ல குடிவெறியோட வந்து எனக்கு இந்த தொழில் செய்ய இயலாது, இடுப்புக் கடுக்கிறது, தாங்கேலா, அதனால தான் குடிச்சனான், செட்டிபாளையத்துக்குப் போய் வெத்தில வாங்கி, வியாபாரம் பண்ணப்போறன், உன்ர கழுத்தில, காதில கிடக்கிறத தா, ஈடுவைச்சிப்போட்டு லாபம் கிடைச்சமட்டில எடுத்துத்தாறன் என்று வேண்டித்துப்போய் வித்துப் போட்டு, பேரளவுக்கு வியாபாரத்தோட குடித் தொழில்தானாம் செய்தவரு.


காலம் போகப்போக தாலிக்கொடி, நிலபுலமெல்லாம் வித்துப் போட்டாராம். புத்தி சொல்லி சொல்லி ஏலாம, அப்பப்பா உழைச்சி தேடி வைச்சிப்போட்டுப் போனதெல்லாம் அம்மம்மா மகளுக்கெண்டு கொடுக்க எல்லாத்தையும் இவரு வாயில போட, ஏக்கத்தில அம்மம்மாவும் பொட்டென்று போயித்தாவாம். எனக்கு கீழ ஐந்து வருடத்தில மூன்று சகோதரங்கள், காணாக்குறைக்கு இப்ப வயித்தில ஒரு பாவ ஜீவனும். இந்த பதினொரு வயதில், பாடசாலையில ஏழாம் தரம் படிக்கக்குளயும் ஒவ்வொரு வகுப்பிலயும் சராசரி அரைவாசி நாளுக்கு மேல அவருட குடிவெறியாலயும், கல்வியறிவில்லாததனாலேயும், வறுமையாலயும், சகோதரங்கள பாக்கிறதனாலயும் பாடசாலைக்குப் போகல்ல அப்படி இருந்த போதிலும் பாடசாலை அதிபரும், வகுப்பாசிரியர்களும் குடும்ப கஷ்ட முணர்ந்தும், எனக்கு படிப்பில இருக்கிற ஆர்வம றிஞ்சும், படிக்கிறதிற்குரிய அனைத்து உதவிகளையும் செய்யுறது கூட அவருக்குப் பிடிப்பில்ல. எத்தனை நாட்கள் பாடசாலைக்குள்ள வந்து அதிபர், ஆசிரியரோட பிரச்சனை

பட்டிருக்காரு. கிராமசேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், ஏன் பிரதேச செயலகத்தில இருந்து வந்த சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கூட குடிக்காத, படிக்கிற புள்ளய பள்ளிக்கனுப்பு என்று சொன்னதற்கு "என்ட புள்ள படிக்காட்டி உங்களுக்கென்ன, உங்கட வேலைய பாத்துத்து போங்க" என்று சொல்லி ஏசுகின்ற இவருடைய பரிதாபகரமான தோற்றநிலை, அறியாமை கண்டு அவங்க நான் எப்படியாவது படிக்கவேண்டுமென்று பல வழிகளில் செய்கின்ற உதவிகளையும் அதிகமா அப்பா துஷ்பிரயோ கந்தான் செய்திருக்காரு. "கடவுளே! அம்மா படுகிற கஷ்டம் நானும், என்ர இருக்கிற சகோதரங்களும் படாம நான் படிச்சி சகோதரங்களை படிக்க வைக்க வழிகாட்ட வேண்டுமென்று" மனதுக்குள்ளே தமது குடும்ப வாழ்க்கை நிலையை இரைமீட்டுக் கொண்டு சென்ற பரிமளத்தை "புதுக்கிராம கலந்தலெவ்வை காஜியாரின் குரல் சுயநினைவுக்கு வரவைத்து தடுத்து நிறுத்தியது". "காத்தமுத்திட மகளெழுவா புள்ளம்மா, தனியா இந்த இருட்டில ஏன்? எதற்காக? எங்க? என்று பட்படம் பொரிவது போல படபட என்று கேள்விக் கணைகளை தொடுத்தார். என்ன புள்ள ஒத்தரும் கூடவரலையா? உங்கப்பா குடிச்சிகிடிச்சி என்னவும் நடந்து போச்சிதா புள்ள?" என்று அன்பு ததும்பவும், அதேநேரம் கண்டிப்புடனும் ஒரு பாசமுள்ள தந்தையின் தானத்திலிருந்து கேட்டதுடன், தனது வீட்டை நோக்கி, "செயினத்து, செயினத்து இஞ்ச எழும்பிக்கிட்டு கெதியா வாபுள்ள, நம்ம சாமகட்டு, காத்தமுத்துட பொம்பிளப் புள்ள, தனியா வந்திருக்கா, என்ன கேட்டாலும் ஒண்டும் சொல்லாம, 'விம்மி, விம்மி' அழுகிறா, என்னவெண்டு வந்து கேளுபுள்ள" என்று குரல்கொடுத்தார். செயினத்தும்மா முக்காட்ட சீர்செய்து கொண்டு வந்து, இஞ்ச வா புள்ள, என்ன நடந்தது என்று கேட்க, இந்த ஆரவாரத்தில புதுக் கிராம பெண்களும், ஆண்களும் வந்து பரிமளத்தை சுற்றி கூடி நிற்க, பரிமளம் விடயத்த சொல்ல செயினத்து கிராமப் பெண்களையும், பரிமளத்தையும் கூட்டிகொண்டு ஊட்டுக் காரரை பார்த்து "நீங்க போய் அந்த மருத்துவ தாதியை கூட்டித்து வாங்க. நாங்க இந்த புள்ளட வீட்டுக்கு போய் தாயைப் பாக்கிறம்" என்று ஓட்டமும் நடையுமாக பரிமளத்தின் வீட்டிற்கு விரைந்தனர்.

வீட்ட அணுகும் போது அங்கு கூடி ஓடியாடி உதவிகளை செய்து கொண்டிருந்த அயலவரையும், காத்தமுத்து கரிசனமாக சொல்லிச் சொல்லி

கத்தும் வார்த்தைகளும், ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதோ என ஒரு கணம் எண்ண வைக்க தோன்றியது. "இந்த பாவி என்னாலதானே, என்ட குடும்பம் ஊராருக்கெல்லாம் எவ்வளவோ தொல்லை. நான் குடிச்சிப்போட்டு எல்லாரோடையும் பகைபட்டன். நான் எவருக்கும் எந்த உதவியும் செய்யல்ல", என்று தாரைதாரையாக கண்ணீர் வடித்த காத்தமுத்து பரிமளத்தை ஓடிப் போய் கட்டியணைத்து, "நீ சின்னவ இல்லம்மா, நான்தான் சின்னவன், ஈனப்பிறவி உனக்குள்ள பாசம், உணர்வுகள் எனக்கில்லம்மா. நீ இல்லாட்டி இந்த ஊரு உறவையும், பக்கத்து கிராம முஸ்லிம் சகோதரர்களிட உண்மை அன்பையும் புரிஞ்சிருக்கமாட்டனம்மா. எவ்வளவோ கெடுமதிகள் எல்லாம் செய்திருக்கிறன். எல்லாத்தையும் மறந்துவிட்டு உண்மையான அன்பு, பாசம், கருணை, கடமை என்பதை இந்த அப்பாவுக்கு உன்னால இவங்க உணரவைச்சிட்டாங்கம்மா. உண்மையாக இனி நான் குடிக்கமாட்டன். எப்படியென்டான உழைச்சி உங்கள படிக்கவைப்பன் இது சத்தியம். எமது கிராமத்து, அயல் கிராமத்து முஸ்லிம் அன்பு சகோதரர்களே என்னை மன்னிச்சிடுங்க. நான் இனிமேல் எத் தவறையும் செய்யமாட்டேன். ஒற்றுமையின் உணர்வை உங்களாலே கண்டுகொண்டேன்" என்று உள்ளம் உருக, உணர்ச்சிவசப்படாது காத்தமுத்து கூறிய வார்த்தைகள் கேட்டு, பரிமளம் எங்கட மனப்பாரம் குறைந்தது என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். மரணவேதனையிலும் மிஞ்சிய பிரசவ வேதனையில் துடித்த மங்கம்மாவுக்கு குழந்தை குறபிரசவத்தால் மரித்து பிறந்த சோகம் கூட இல்லாது, தன் கணவனின் உறுதியான வார்தைகளும் அயலவர்களினதும், முஸ்லிம் உறவுகளினதும் அன்பும், அரவணைப்புமே அவளது பாரத்தை குறைத்தது போல உள்ளத்திலே ஒரு தெளிவு பிறந்ததை உணர்ந்தாள். மரக்கிளைகளிலிருந்து பறவைகள், பட்சிகள் சிறகடித்துப் பறந்தன. கிழக்கு வானிலே விடியலுக்கான கீற்றுக்கள் ஒளியைப் பரப்ப தொடங்கின.

**(யாவும் கற்பனை)**



# ஆசான் பணி

நட்சத்திரம் எத்தனையோ! ஓர் பௌர்ணமி - சினிமா
நட்சத்திர நடிகர்களில் ஓர் நாயகன்
சமுத்திர ஆயிரம் சங்குகளில் ஓர் வலம்புரி - இனிய
சந்ததி வளர்த்திடும் "ஆசான்" உயர்பணி

மெழுகாக தான் உருகி வாழ்வு ஒளிமயமாகவே - நாம்
மழுங்காமல் மகிமை பெற்று மண்ணில் உயரவே
ஒழுக்கம், அன்பு, விடாமுயற்சி, தூய உள்ளம் - நல்
ஒற்றுமையும் நட்பும் தந்த "ஆசான்" சமூகப்பணி

கண் அற்ற மானிடர்க்கு எண் எழுத்தும் - தீய
கறைபடியா கல்வி எனும் உயிர்கொடுத்தார்
பண்ணோடு தோத்திரமும் பரதம் சங்கீதம் - தூய
பகுத்தறிவும் பாரில் தந்த "ஆசான்" சமயப்பணி

பட்சயத்தின் விளக்க மின்னும் விஞ்ஞான விந்தைகள் - இராம
பத்தவதார இதிகாச புராணங்கள் மெஞ்ஞானத்தில்
அட்சய பாத்திரமாம் மணிமேகலை யோடுஐங் காவியம் - உரோம
அட்சர கேந்திர கணிதமும் "ஆசான்" கல்விப்பணி

சொட்சுருக்கம் விளக்கமுறை தமிழிலே - ஆய்வு
சொல்லும் எங்கள் ஆசிரியர் உலகிலே
பட்டம் நாம் பெற்றிட பலகலை விடயங்கள் - ஓய்வு
பாராமல் படிப்பித்தார் "ஆசான்" சிறந்தபணி

ஓதி அறிவு தெளியவைத்தார் வித்தகரே! - நாம்
ஒருபோதும் மறந்திடோம் எம் சொத்தவராம்
மேதினியில் பெருமை புகழ் முத்தழகே! - எம்
மேன்மைக்கே ஆசான் தெய்வ புத்தகமே!

பிரதேச சாகித்திய விழா 2009 கவிதைப் போட்டியில் முதலிடம்

**கோ.கீதா**



# புதுக்குடியிருப்புக் கிராமத்தில் கரகாட்டம்

த. இன்பராஜா

மட்டக்களப்பில் வடமோடி தென்மோடிக் கூத்துக்களுக்கு அடுத்ததாக பக்தியும் கேளிக்கையும் நிறைந்த பல கிராமிய நடனங்கள் இங்குள்ள கிராமங்கள்தோறும் ஆடப்பட்டு வருகின்றன. வசந்தனாடல், கும்மி, கோலாட்டம், காவடியாட்டம் என்பன அவற்றில் முக்கியமானவை. இவற்றில் கரகாட்டமும் ஒன்றாகும். தென்மோடி வடமோடிக்கூத்துகளில் பெரியவர்கள் ஆடுவது போன்று அல்லாமல் இந்நடனங்கள் யாவற்றையும் இங்குள்ள சிறுவர் சிறுமியரே ஆடிவருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒவ்வொரு கிராமத்திலும் சித்திரை தொடக்கம் ஆடி மாதம் வரையான காலப்பகுதியில் அம்மன் முதலிய தொற்றுநோய்கள் பரவுமிடத்தும் பஞ்சம், வறுமை தலை விரித்தாடுவதுமான சகுணங்கள் நிலவும் பட்சத்திலும் கிராம மக்கள் தங்களின் தாய்த் தெய்வங்களான கண்ணகி, மாரி, துர்க்கை முதலிய தெய்வங்களை நினைத்து சிறுவர் சிறுமியர்களைக் கொண்டு இவ்வாறான நடனங்களை ஆடுவர். அவ்வாறு ஆடுவதனால் இத்தெய்வங்கள் மனங்குளிர்ந்து இவற்றில் இருந்து மக்களை விடுவித்து நல்லருள் கொடுப்பாள் என்பது நம்பிக்கையாகும்.

இசையும், நடனமும் கலந்த ஒரு அழகிய கேளிக்கை நிகழ்வே கரகாட்டமாகும். கரகம் என்பது ஒரு வகையான ஒரு வகையான குடத்தை/

செம்பைக்குறிக்கும் நடுத்தர அளவுள்ள அலங்காரம் செய்யப்பட்ட ஓர் அழகிய செம்பில் மேல் வேப்பிலையை வைத்துத்தான் ஆடவைப் பார்கள். ஆனால் அரங்கேற்றும் போது செம்பின் மேல் பக்கம் வேப்பிலைக்குப் பதிலாக அலங்காரமாலை போன்றவைகளை வைத்து உச்சில் துணியினால் செய்யப்பட்ட பொம்மைக் கிளியைச் சொருகி ஆடவைப்பர். இச்செம்பைத் தலையில் வைத்து சிறுமியர் அங்க இயக்கங்களை மிகவும் நளினமாகவும், சாமர்த்தியமாகவும் வெளிப்படுத்தி ஆடுவார்கள். இசையின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க ஆடலின் வேகமும் அதிகரிக்கும்.

ஆடும் சிறுமியர்கள் வளைந்தும், குனிந்தும், விழுந்தும், எழுந்தும், படுத்தும், திரும்பியும் வியப்பூட்டும் வகையில் வெகுதிறமையுடன் ஆடு வர். ஆட்டத்தில் கொஞ்சம் தயக்கமோ தாமதமோ ஏற்படுவதில்லை. கரகம் (செம்பு) கீழே விழாமல் ஆடுவதில்தான் அவர்களின் முழுத்திறமையும் தங்கியுள்ளது. ஏனைய நடனங்கள் போன்றே இதுவும் வட்ட அரங்கில் நான்கு பக்கமும் பார்வையாளர்கள் பார்க்கும் வண்ணம் ஆடப்படுகின்றது.

இந்த வகையில் மண்முனைப் பற்று பிரதேச செயலக பிரிவிலே பல கிராமங்களில் இக்கரகாட்டம் ஆடப்பட்டு வந்திருந்தாலும் இன்றும் இது உயிர்ப்புடன் விளங்கும் ஒரு கிராமம் உள்ளது. புதுக்குடியிருப்பு கிராமமே ஆகும். இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயச் சடங்கை அடிப்படையாகக் கொண்டு ஊரில் பல இடங்களில் இச்சடங்கு காலத்தில் கரகாட்டம் ஆடப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றமை விசேட அம்சமாகும். இங்கு பல அண்ணாவி மார்கள் இக்கரகாட்டத்தினைப் பழக்கி அரங்கேற்றி வருகின்றனர். எனினும் அவர்களில் திரு.செல்லத்தம்பி நாகமணி (வயது 62) திரு.சின்னத்தம்பி தங்கராசா (வயது 55) ஆகிய இருவரும் முதன்மையானவர்களாக உள்ளனர்.

திரு.செல்லத்தம்பி நாகமணி அவர்கள் தமது கரகாட்ட கலைப் பயணம் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "நான் படிக்கும் காலத்திலிருந்து கரகாட்டம், கூத்து, காவடியாட்டம் என்பவற்றில் நடித்துள்ளதோடு இக்கிராமியக் கலைகளில் ஆர்வம் ஏற்பட்டது"

1975ம் ஆண்டு கரகாட்டம் ஒன்றைப் பழக்க நினைத்து பல பழைய அண்ணாவிமாரிடம் சென்றேன். எவரிடமும் அதற்குரிய ஆவணங்கள் கிடைக்கவில்லை. இருந்தும் மனம் தளராமல் அக்காலங்களில் பெயர்பெற்ற அமரத்துவமடைந்த அண்ணாவியார் கதிராமத்தம்பி அவர்களிடம் சென்று கரகாட்டம் ஆடுவதற்குரிய ஆவணங்கள் தரும்படி கேட்டேன். அவர் நடக்க முடியாத நிலையிலும் பழைய ஏட்டுச்சுவடியை எடுத்துத் தந்து தேவையான வற்றை எடுக்கும்படி சொன்னார். அதைப் பார்த்த போது எல்லாம் செல்லரித்து துண்டு துண்டாய் இருந்தன. இருந்தும் மனம் தளராமல் அவற்றை எடுத்துப்

**இங்கு பல அண்ணாவிமார்கள் இக்கரகாட்டத்தினைப் பழக்கி அரங்கேற்றி வருகின்றனர். எனினும் அவர்களில் திரு.செல்லத்தம்பி நாகமணி (வயது 62) திரு.சின்னத்தம்பி தங்கராசா (வயது 55) ஆகிய இருவரும் முதன்மையானவர்களாக உள்ளனர்.**

பார்த்த போது ஒரு சில மெட்டுக்கள் மட்டுமே தெரிந்தது. அந்த மெட்டுக்குரிய பாட்டை நானே இயற்றி இன்னும் பல புது மெட்டுக்களை நானே போட்டு 1975ம் ஆண்டு வைகாசி மாதம் கரகத்தை ஆரம்பித்தேன். இதைப் பார்த்தவர்கள் பாராட்டியதும் அல்லாமல் 2,3 மணித்தியாலமாவது நடிக்கக்கூடியவாறு திருத்தியமைக்கும்படி வேண்டினர். 2,3 மணித்தியாலமாக ஒரே ஆட்டம் ஆடினால் சோபிக்காது என்பதற்காக பழைய இதிகாசக் கதையான காத்தவராயன் கதையை கரகத்திற்கு ஏற்றவாறு மெட்டமைத்துப் பாடி ஆட்டமும் ஒவ்வொருவருக்கு வெவ்வேறாக வைத்து ஆடி அரங்கேற்றினேன். இது மக்களால் பெரிய வரவேற்புப் பெற்றது. மட்டுமல்லாமல் 22 மேடைகளில் ஆடிக்காட்டப்பட்டது. அதன்பின் வள்ளி திருமணம், கண்ணகி காற் சிலம்பு, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் இன்னும் பல கரகாட்டங்கள் என்னால் அரங்கேற்றப் பட்டன.

எனது கரகாட்டங்களுக்குரிய உடுப்புக்கள், தாளம் அமைத்தல் சகல தும் நானும் எனது குழுவினரும்தான் செய்வோம். தாளத்திற்கு மத்தளம், உடுக்கு, மிருதங்கம், மேளம் முதலியன பாவிக்கலாம். ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு தாளத்தை மாற்றி மாற்றி வாசிக்க வேண்டும் என அவர் கூறுகின்றார்.

இவ்வாறு கரகாட்டக் கலையில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டுக் கொண்டிருக்கும் திரு.செல்லத்தம்பி நாகமணி அவர்களைக் கௌரவிக்கும் நோக்கோடு மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார பேரவை 2006ம் ஆண்டு சாகித்திய விழாவில் இவருக்குப் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அடுத்து இக்கலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றுபவர் திரு.சின்னத்தம்பி தங்கராசா என்பவராவார். இவர் தமது கரகாட்டச் செயற் பாடுகள் பற்றி பின்வமாறு கூறுகிறார். “மட்டக்களப்பு தமிழ் மக்களினால் பாரம்பரியமாக நிகழ்த்துகை செய்யப்பட்டு வரும் ஒரு சிறந்த கலைவடிவமே கரகாட்டமாகும். இதற்கு இசைக் கருவிகளாக மத்தளமும், சல்லாரியுமே பயன்படுத்தப்படுகின்றது. சிறுவட்டம் போட்டு ஆடுதல், பெருவட்டம் போட்டு ஆடுதல், எட்டுப்போட்டு ஆடுதல், மாறி ஆடுதல் முதலிய வசந்தன் கூத்தின் ஆடல் முறைகளும் இக்கரகாட்டத்தில் உள்ளது. இதிலும் முக்கிய விடயம் என்னவென்றால் பாத்திரம் போட்டு ஆடுபவர் அப்பாத்திரமாகவே உருமாற்றம் செய்யப்பட்டு காலில் சதங்கை உரிய பாத்திரங்களின் கைகளில் தண்டாயுதம், வில், அம்பு, சக்கரம் முதலிய ஆயுதங்களும் கொண்டு ஆடுகின்றமையாகும்.



பாரத, இராமாயண புராண நாட்டுக் கூத்துக்களை கரகப் பாட்டுக்க ளாக மாற்றி வரலாறுகளை மிகவும் எளிய முறையில் இலகுவாக மக்கள் மத்தியில் தெரியப்படுத்தி நெறிப்படுத்துவதே எமது நவீன கரகாட்டத்தின் நோக்கமாகும்.

இதுவரை சுமார் 31 கரகாட்டங் களை தயாரித்து அரங்கேற்றியமையும் இதில் மயில் இராவணன் சண்டை, சராசந்தன் சண்டை, ஆரவல்லி, வள்ளி திருமணம், அல்லி திருமணம், உருத்திர சேனன் சமர், பாண்டவர் வைகுந்தம், பாஞ்சாலி சபதம், குயலவன், மகாசூரன் சண்டை,

தர்மபுத்திரர் முதலிய கரகாட்டங்கள் விசேடமான வையாகவும் இவர் குறிப்பிடுகின்றார்.

இவர் தம்மால் 1976ம் ஆண்டு உருவாக்கப்பட்ட கதிரவன் கலைக் கழகத்தினூடாக வருடா வருடம் 15 வயதிற்குட்பட்ட சிறுமியர்களைக் கொண்டு இவ்வாறான கரகாட்ட நிகழ்வுகளை நிகழ்த்தி வருகிறார். இக்கரகாட்டங்களை மட்டுமன்றி கதிரவன் கலைக்கழகம் ஆலயச் சடங்குகளிலும், திருவிழாக்களிலும் சமூக நாடகங்கள், கூத்துக்கள், புராண இதிகாச நாடகங்கள் முதலியனவற்றையும் தயாரித்து வருகிறது. மாவட்டத்திலே பல கிராமங்களிலும் ஆலயங்களிலும் 100க்கு மேற்பட்ட மேற்படி நிகழ்வுகளை அரங்கேற்றியதுடன் மாவட்ட ரீதியாக நடைபெறும் கலைவிழாக்கள், நாடக விழா, சாகித்திய விழா முதலிய கலைசார் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து வெற்றிகளும் பாராட்டுகளையும் பெற்றுள்ளதோடு 1993ம் ஆண்டு மாவட்ட ரீதியான கலை விழாவில் தமது கரகாட்டம் முதலாம் இடம்பெற்றமையும் முக்கிய அம்சமாகும்.

இதுவரை இக்கதிரவன் கலைக்கழகத்தினால் 18 புராண இதிகாச நாடகங்களை அரங்கேற்றியதுடன் 28 சமூக நாடகங்களையும் நிகழ்த்தி உள்ளதோடு தமது குழு மூலம் 1012 வீதி நாடகங்களையும் பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்காகத் தயாரித்து நிகழ்த்தி இப்பிரதேசத்தின் சிறந்த ஒரு கலைக் கழகமாக தம்மை அடையாளப்படுத்தி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளமை முக்கிய விடயமாகும்.

இவ்வாறாக திரு.சின்னத்தம்பி தங்கராசா அவர்கள் தமது கலைக் கழகத்தின் மூலம் நாடகக் கலைக்காகவும் குறிப்பாக கரகாட்டக் கலைக்காக சிறப்பாகப் பணியாற்றி வருகின்றமையைக் கௌரவிக்கும் முகமாக மண்முனைப் பற்றுப் பிரதேச செயலக கலாசார பேரவை 2009ம் ஆண்டு பிரதேச சாகித்திய விழாவில் இவரை பொன்னாடை போர்த்தி சான்றிதழும் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கின்றமை பாராட்டத்தக்க விடயமாகும்.

இவ்வாறாக புதுக்குடியிருப்புக் கிராமத்திலே கரகக் கலைக்காக சிறப்பாகச் சேவை செய்துவரும் இவர்களின் பணி மேலும் தொடர வேண்டும் எனவும் இதற்காக இவர்கள் எதிர்காலச் சந்ததியினரையும் உருவாக்கி எமது பாரம்பரிய கலைச் சொத்தாகிய கரகக்கலை அழியாது பாதுகாக்க பணியாற்றிய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்வதோடு இவர்களின் ஆக்கபூர்வமான இப்பணிக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பையும், ஆதரவினையும் வழங்க வேண்டியதும் நம் எல்லோரது கடமையுமாகும்.



# கலைஞர் கௌரவம்

**இயற்பெயர்** : ஐயம்பிள்ளை சிவசுந்தரம்
**பிறந்த திகதி** : 1932.08.18
**முகவரி** : நொத்தாரிஸ் வீதி, ஆரையம்பதி-1.
**கௌரவிக்கப்படும் துறை** : நாடகம்

**ஈடுபாடு :**

- 1955ம் ஆண்டிலிருந்து நாடகத்துறையில் ஈடுபட்டு வருபவர்.

**நாடகப்பணி :**

- இதுவரை 75 நாடகங்கள் வரை எழுதி மேடையேற்றியுள்ளார்.
- அன்றைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடாத்தப்பட்ட மேடை நாடகப் போட்டிகளில் இவரது பல நாடகங்கள் பரிசில்கள் பெற்றுள்ளன.
- மட்டக்களப்பு மத்திய கல்லூரி, சென்.மிக்கேல் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இவரது பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. (கட்டணத்துக்கு)
- 1966 ஆண்டு இலங்கைக் கலைக்கழகம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய மேடை நாடகப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான மூன்று நாடகங்களில் இவரது நாடகம் முதலாம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஏனைய பணிகள் :**

- நாடகம் தவிர சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற துறைகளிலும் ஈடுபட்டு வருபவர்.
- 1987ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- பாடசாலைக் காலத்தில் இவரால் ஆங்கிலக் கவிதைகள் சில தமிழாக்கம் செய்யப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.
- இதுபோல் பாடசாலை மாணவர்களுக்காக எழுதப்பட்ட இவரது பல கட்டுரைகளும் பரிசில்கள் பெற்றுள்ளன.

இயற்பெயர் : மூத்ததம்பி அருளம்பலம்
புனைப்பெயர் : அரையூர் அருள்
பிறந்த திகதி : 1949.09.19
முகவரி : 'துளசிவாசம்' ஆரையம்பதி -01.
கௌரவிக்கப்படும் துறை : நாட்டுக்கூத்து



ஈடுபாடு :

- பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே நாட்டுக்கூத்தில் ஈடுபாடு உடையவர்.
- 1973ல் ஆசிரிய நியமனம் பெற்றதிலிருந்து கற்பித்த பாடசாலையில் மட்டுமன்றி வேறு பாடசாலையிலும் நாட்டுக்கூத்துக் கிராமியக் கலைகளை வளர்த்து வருகிறார்.

கூத்துப்பணி :

- 1974ம் ஆண்டு 'வள்ளி திருமணம்' (வடமோடி) பொல/முத்துக்கல் தமிழ் வித்தியாலயம்.
- 1981ம் ஆண்டு 'வாலி வதம்' (வடமோடி) தயாரிப்பும், பாத்திரமேற்று நடித்ததும். மட்/அரசினர் ஆசிரிய கலாசாலை.
- 1983ம் ஆண்டு 'பணசெருக்கு' நவீன நாட்டுக்கூத்து (வடமோடி) தயாரிப்பு கல்/பொத்துவில் மெதடிஸ்த மிசன் தமிழ் வித்தியாலயம்.
- 1992ம் ஆண்டு 'வழிதவறிய வஞ்சி' (வடமோடி) தயாரித்தும் பாத்திர மேற்று நடித்ததும்.
- 1993ம் ஆண்டு "அனுமன் கண்ட சீதை" (வடமோடி) தயாரித்தும், பாத்திரமேற்று நடித்ததும்.
- 1994ம் ஆண்டு 'மங்களதீபம்' (இருமோடி நவீனநாட்டுக் கூத்து) தயாரித்து நெறியாள்கை செய்து பாத்திரமேற்று நடித்தது.
- 1997ம் ஆண்டு 'மறலியை வென்ற மங்கை' (தென்மோடி) தயாரிப்பும் பாத்திரமேற்று நடித்ததும், மண்முனைப்பற்று சாகித்திய விழா நாட்டுக் கூத்தில் முதலிடம்.
- 1997ம் ஆண்டு 'சுந்தரி விடு தூது' (தென்மோடி) தயாரிப்பு. மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் - தமிழ் மொழித்தினப் போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்.
- 1998ம் ஆண்டு 'இரணிய சங்காரம்' (தென்மோடி) தயாரிப்பு. மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம். தமிழ் மொழித்தினப் போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்.
- 2002 ஆம் ஆண்டு 'குருதட்சனை' வடமோடி தயாரிப்பு. மட்/புதுக் குடியிருப்பு மகா வித்தியாலயம், மட்/மண்முனைப்பற்று கோட்ட மட்டத்தில் 1ம் இடம். வலய மட்டத்தில் 2ம் இடம்.

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | அல்ஹாஜ் M.I.A.முஸ்தபா |
| பிறந்த திகதி | : | 1942.09.28 |
| முகவரி | : | மாஸ்ரர் லேன், பாலமுனை - 11 |
| கௌரவிக்கப்படும் துறை | : | இலக்கியம் |



**ஈடுபாடு :**

- இளமைக்காலம் முதல் ஓய்வு நேரங்களில் கவிதை, கட்டுரை எழுதுவதில் ஈடுபட்டு வந்துள்ளார்.

**இலக்கியப் பணி :**

- இவர் மாணவராய் உயர் வகுப்புப் படிக்கும் காலத்திலேயே பாலமுனைக் கிராமத்தில் "அல்-மதரசத்துல் இலாஹிய்யா" எனும் ஓர் சமயப் பாடசாலையை சமுகசேவை செய்யும் சிலர் எவ்வாறு முயற்சி எடுத்துக் கட்டி முடித்தார்கள் என்பதை கவிமூலம் பாடி 1959ம் ஆண்டு சிறிய நூலாக வெளியிட்டு பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

- 'சிறிலங்கா முஸ்லிம் நாங்கள்' என்ற இவரது கவிதை ஒன்று *"Muslim Times"* என்ற பத்திரிகையில் முதன்முதல் வெளியாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து நவமணி, தினகரன், வார உரைகல் வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி போன்றவற்றில் பல்வேறு தலைப்பில் பிரசுரமாகியும், ஒலிபரப்பாகியுள்ளது.


- காத்தான்குடி முஸ்லிம் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட "காத்தான்குடி வரலாறு" என்ற நூலில் இவரது "பாலமுனை வரலாறு" என்ற ஓர் ஆய்வுக் கட்டுரையும் பிரசுரமாகியுள்ளது.

- 'நபிமணி புகழ்மலர்' என்றவொரு கவிதை நூலை புனித றம்ழான் மாதத்தைச் சிறப்பிக்கும் நோக்குடன் 1978ல் ஒருதடவையும் 1983ல் இன்னொரு தடவையும் வெளியிட்டுள்ளார்.

- 1977ம் ஆண்டு 'சுழன்றடித்த சூறாவளி' என்ற தலைப்பில் ஒரு கவிதை பாடி பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

- மண்முனைப்பற்று பிரதேச செயலகம் 2007ல் நடாத்திய மீலாத் விழா சிறப்பு மலரில் இவரது இரண்டு கவிதைகள் பிரசுரமாகியுள்ளன.

- மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகம் நடாத்திய தேசிய இலக்கிய விழா - 2008 போட்டியில் இவரது கவிதை ஒன்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளார்.



**இயற்பெயர்** : சின்னத்தம்பி தங்கராசா
**பிறந்த திகதி** : 1954.10.29
**முகவரி** : புளியடி வீதி, புதுக்குடியிருப்பு
**கௌரவிக்கப்படும் துறை** : கிராமிய நடனம் (கரகம்)

**ஈடுபாடு :**

- இளம் வயதில் இருந்து கரகம் கூத்து நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருபவர்.

**கிராமிய நடன (கரகம்) பணி :**

- இதிகாச புராண சரித்திரக் கதைகளை கரகாட்டங்களாக எழுதித் தயாரித்தல். இதற்குரிய பாடல்களை இயற்றுதல், இசைத்தல், உடையலங்காரம், ஒப்பனை, நெறியாள்கை, மத்தளம் வாசித்தல் என கரகாட்டம் தொடர்பான சகலவற்றையும் செய்யக்கூடியவர்.
- இதுவரை சுமார் 50 வரையான கரகாட்டங்களைத் தயாரித்துள்ளார். இதில் 31 கரக நடனங்கள் நீண்ட சரித்திரக் கதைகளைக் கூறுவதாக அமைகின்றது. இவற்றுள் மயில் இராவணன் சண்டை, சராசந்திரன் சண்டை, ஆரவள்ளி திருமணம், அல்லி திருமணம், உருத்திர சேனன் சண்டை, பாண்டவர் வைகுந்தம், பாஞ்சாலி சபதம், குயலவன், மகாசூரன் சண்டை, தர்மபுத்திரர் முதலியன குறிப்பிடத்தக்கவை.
- இவரால் தயாரிக்கப்பட்ட 'சராசந்தன் சமர்' எனும் கரகாட்டம் 1993ம் ஆண்டு மட்டக்களப்பு மவட்ட சாகித்திய விழாப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றதோடு, இக்கரகம் சுமார் 28 அரங்குகளில் நிகழ்த்தப் பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.
- மண்முனைப்பற்றுப் பிரதேச சாகித்திய விழா 2006ல் இவரால் தயாரிக்கப்பட்ட கரகாட்டம் கிராமிய நடனப் போட்டியில் முதலிடம் பெற்றது.
- இவரால் தயாரிக்கப்பட்ட அனைத்துக் கரகாட்டங்களும் 10க்கு மேற் பட்ட மேடைகளில் நிகழ்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.
- புதுக்குடியிருப்பு ஸ்ரீ கண்ணகை அம்மன் அரங்கில் ஒவ்வொரு வருடமும் இவர் கரகாட்டங்களைத் தயாரித்து அரங்கேற்றி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



**இயற்பெயர்** : சிவசிறி வ.வல்லிபுரம் குருக்கள்

**பிறந்த திகதி** : 1940.04.19

**முகவரி** : தாளங்குடா - 02

**கௌரவிக்கப்படும் துறை** : நாட்டு வைத்தியம் (விச வைத்தியம்)

**ஈடுபாடு :**

- 18வது வயதிலிருந்து விச வைத்தியம் சம்பந்தப்பட்ட ஏட்டுப் பிரதிகளைக் கற்றுக்கொண்டவர்.

- பின்னர் கிரிவண்டா எனும் வேடுவ சிங்களவரிடமும் கதிர்காமப் போடி விச வைத்தியரிடமும், கணேசமூர்த்தி குருக்களிடமும் விச வைத்தியம் தொடர்பாக அறிவையும், அனுபவங்களையும் பெற்றுக் கொண்ட பின்னர் இவ் வைத்திய முறையில் ஈடுபட்டு வருகிறார்.

**விஷ வைத்தியப் பணி :**


- இப்பிரதேசப் பிரிவிலுள்ள விச வைத்தியர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கும் இவர், விஷ வைத்தியத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்றவராகவும், நல்மதிப்பைப் பெறந்றவராகவும் திகழ்கின்றார்.

- விஷம் சம்பந்தப்பட்ட எந்தவிதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக் கூடிய இவர், இன்றுவரை இப்பகுதி மக்களுக்கு இப்பணியைச் செய்து வருகின்றார்.

- இதுவரை இவர் ஆயிரக்கணக்கானோருக்கு சிகிச்சையளித்துள்ளமை இவரின் திறமையைப் பறைசாற்றுகின்றது.

- தற்காலத்தில் பலர் இவரிடம் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

- விஷ வைத்தியம் மட்டுமன்றி, சோதிடத்திலும் தேர்ச்சி பெற்றவராகவும், ஆலயப் பூசகராகவும் இருந்து வருகின்றார்.



# ஆரையம்பதியில் வீரசாகச விளையாட்டுக்களும் நானும்

ஐ. சிவானந்தராஜா

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிறந்தவரான சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் ஆசியாக்கண்டத்தின் தலை சிறந்த சாண்டோக்களில் ஒருவராக கணிக்கப்பட்டு மைசூர் மகாராஜாவால் கௌரவிக்கப்பட்டு வெள்ளித் தண்டாயுதம் பரிசளிக்கப்பட்டவர். இந்தியாவில் பேராசிரியர் பட்டமும் பெற்றவர். இரும்பரசன் சங்கரதாஸ் எனும் சிறப்புப் பட்டமும் இவருக்குண்டு. இவருடைய சிரேஸ்ட சிஷ்யர்தான் சாண்டோ தியாகராஜா மாஸ்டர் அவர்கள். இவர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உடற்பயிற்சி ஆசிரியராக கடமையாற்றியவர். இவர் மட்டக்களப்பு பாடசாலை மாணவர்களுக்கு உடற்பயிற்சி, மல்யுத்தம், யோகாப்பியாசம், பாரம்தூக்குதல் ஆகியவற்றில் பயிற்சி கொடுத்து போட்டிகளையும் நடத்தியது மட்டுமன்றி தியாகன் சேர்க்கஸ் எனும் மாபெரும் சேர்க்கஸையே நடத்தியவர். இவரிடம் நான் பயிற்சி பெற்றேன்.

ஆரையம்பதி மண்ணிலே பிறந்து 1961 ஆம் ஆண்டு முருகன் கோயில் முன்றலில் எனது குருவான சாண்டோ தியாகராஜா அவர்களின் ஆசியுடன் முன்னைநாள் மட்டக்களப்பு மாநகர முதல் வரான திசவீரசிங்கம் ஐயா அவர்களின் தலைமையில் 2L இரும்புக் கேடரை 04 நிமிடத்தில் உடைத்து ஒரு புதிய சாதனையை நிலை நாட்டினேன். அது மட்டுமன்றி ஓடும் காரை இழுத்தல், 6” ஆணியை விரலால் உடைத்தல் போன்ற சாகசங்களை செய்து காட்டி கவிஞர் மு.க. அவர்களால் இரும்பு வீரன் எனும் பட்டத்தையும் பெற்றேன்.

கிட்டத்தட்ட 15வது வயதில் இருந்தே இக்கலைகளில் ஆர்வமுடையவனாக இருந்தேன். இவ்வரங்கேற்றத்தை தொடர்ந்து பல மேடைகளில் அதாவது நீர்கொழும்பு, கொழும்பு, ஜாயல, மட்டக்களப்பு, காத்தான்குடி, கல்முனை ஆகிய இடங்களிலும் என்னுடைய சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

சாண்டோ சங்கரதாஸ் அவர்களின் மறைவுக்கு பிறகு இக்கலை மங்கிக்கிடந்த காலகட்டத்தில்தான் நான் முதன்முதலாக ஆரையம்பதிக் கிராமத்திலேயே இக்கலையை வளர்க்க முயன்று சில இளைஞர்களை பயிற்றுவித்து சாகச இரவு எனும் ஒரு நிகழ்ச்சியை நடாத்தி பார்வையாளர்களின் பெரும் பாராட்டைப் பெற்றேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1970 என நினைக்கிறேன். பின்னர் நாட்டில் ஏற்பட்ட நிலவரம் காரணமாக என்னால் இந்த நிகழ்ச்சியை தொடரமுடியாமல் போய்விட்டது. பல வருடங்களுக்குப் பிறகு சிறிதாஸ் அவர்கள் பல சாகச நிகழ்ச்சிகளைச் செய்து சாண்டோ சிறிதாஸ் எனப் பெயர் பெற்றார். பல சாகசங்களைச் செய்த இவர் நோய் காரணமாகக் காலமானார்.

அண்மைக்காலத்தில் சிவானந்தா விளையாட்டரங்கில் என்னைக் குருவாகக் கொண்டு அரங்கேற்றம் செய்தவர்தான் ராஜரட்ணம் என்பவர். இவரும் ஆரையம்பதி மண்ணிலேயே பிறந்தவர். இவர் உழவு இயந்திரத்தை மார்பில் ஏற்றல், இரும்புக்கம்பியை புயத்தில் அடித்து வளைத்தல், பத்தடி உயரத்தில் இருந்து ஒருவர் தனது வயிற்றில் குதித்தல், லொறியை இழுத்து நிறுத்தல் போன்ற நிகழ்ச்சிகளைச் செய்து சாண்டோ எனும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவை தவிர நான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் ஆரையம்பதி மண்ணில் பிறந்த பல பலசாலிகளைப் பார்த்தும் கேட்டும் இருக்கிறேன். அதாவது தம்பிப்பிள்ளை மாஸ்டர் என்று ஒருவர் இருந்தார். அவரை வாங்குடைச்சான் தம்பிப்பிள்ளை என்று கூறுவார்கள். காரணம் அவர் பாடசாலை வாங்கொன்றை தனது கையால் அடித்து உடைத்ததால் இவருக்கு இந்தப் பெயர் வந்ததாம். இது தவிர இவர் பத்து மரைக்கால் நெல்லுச்சாக்கொன்றை தனது பற்களால் கடித்துத் தூக்கியுள்ளார் என்றும் அறிகிறேன்.



இன்னும் ஒருவரைக் குறிப்பிட லாம். கோணமலை என்பவர் வாலிபராய் இருந்த காலத்தில் தனது காலால் உதைத்தும் புயத்தால் முட்டிமோதியும் ஓர் அளவான கமுகமரமொன்றை வேருடன் பிடுங்கியவர். இந்த நிகழ்வை கிராம மக்கள் பார்த் துள்ளனர். இவரைப் புட்டப்பா என்று அழைப்பர்.

மற்றுமொருவரைக் குறிப்பிடலாம். அதாவது அக்காலத்திலேயே ஆரையம்பதியில் உள்ள கோயிலடி வெட்டை எனும் இடத்தில் இரும்பரசன் சாண்டோ சங்கரதாஸ் அவர்களின் சாகசம் இடம்பெற்றபோது யானை கட்டும் இரும்புச் சங்கிலி ஒன்றை உடைத்துக் காட்டியுள்ளார். இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பத்தன் அல்லது பத்தினியன் என்பவர் தனது நண்பர்களிடம் இச்சங்கிலியை நான் உடைப்பேன் என கூறியுள்ளார். மறுநாள் நண்பர்களால் அதே சங்கிலி கொண்டுவரப்பட்டது. சில கிராம மக்களின் மத்தியில் சங்கிலி அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் அதை எடுத்து ஒரு முனையை இடுப்பிலும் மறுமுனையை பக்கத்தில் நின்ற மரத்திலும் கட்டி தனது கைகளால் இழுத்து உடைத்துக் காட்டியுள்ளார்.

சீனித்தம்பி என்பவர் இக்கிராமத்தில் பிறந்தவர். அக்காலத்தில் ஆரையம்பதியில் கூத்துக்கள் பிரபல்யமடைந்து விளங்கின. எனவே சீனித்தம்பி என்பவர் கூத்தொன்றில் வாளவீமனாக தோன்றி பிரபல்யமடைந்தமையால் இவர் வாளவீமன்சீனி என அழைக்கப்பட்டார். இவரது வாலிப பருவத்தில் திகிலூட்டும் சாகச செயலொன்றை செய்து காட்டியுள்ளார். அதாவது நிலத்தை நோக்கி சாய்ந்து கிடந்த தென்னை மரமொன்றை சக நண்பர்களுடன் பந்தயம் கட்டி தன்னந்தனியாக இழுத்து நிறுத்தி பக்கத்தில் நின்ற மரத்தில் கட்டி பந்தயத்தில் வெற்றி பெற்றுள்ளார். இவ்வாறாக வீரத்தில் சிறந்த பலர் இங்கு வாழ்ந்துள்ளனர்.

இன்றைய இளைஞர்களும் இவ்வாறான மல்யுத்தக் கலைகளிலும் கால்பதித்து சிறந்த வல்லுனர்களாக, கலைஞர்களாக விளங்க முன்வரவேண்டும்.

# "எண்ணெய்ச் சிந்து"

திருமதி. தமிழ்ச்செல்வி துஷன்

**அறிமுகம்**

16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போத்துக்கீசரும் (1505), 17ம் நூற்றாண்டில் நடுப்பகுதியில் ஒல்லாந்தரும் (1658) இலங்கையின் கிழக்குக் கரைப்பகுதிகளில் தங்கள் அரசியல் நிலமைகளைப் பதிய வைத்த பின்னர் தமது நிர்வாக நடவடிக்கைகளுக்காக நகரங்களில் பெரிய பாடசாலைகளையும், கிராமங்களில் சிறிய பாடசாலைகளையும் கிறிஸ்தவ மதப் பண்பாடுகளோடு நிறுவினர். இக்காலத்தில் ஆரையம்பதியில் சில திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கற்றறிந்த பெரியோர்களினால் நடாத்தப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

பெரும்பாலும் ஆண்பிள்ளைகளே இத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்றனர். அவர்கள் தங்கள் குரு தட்சணைக்காக வசதி படைத்த ஊர் மக்களை நாடிச் சென்றனர். அவ்வேளையில் அந்தத் திண்ணைப் பள்ளிக்கூட மாணவர்களால் பாடப்பட்டதாக அறியவரும் அப்பாடலை எண்ணெய்ச் சிந்து என அழைத்தனர். இப்பாடலை இயற்றியவர் பெயரை அறிய முடியவில்லை. பாடல் இங்கே தரப்படுகின்றது.

**எண்ணெய்ச் சிந்து**

சீரார் சனி எண்ணெய்ச் சிந்துதனை நான் பாட
காரான மேனிக் கணபதியே முன்னடவாய்
முன்னாள் ஆகமத்தில் முன்னுள்ளோர் சொற்படியே
இந்நாளிலே சிறியேன் எண்ணெய்த் தமிழ்பாட
சால நமஸ்கரித்தேன் சரஸ்வதியே உந்தணையே
வால சரஸ்வதியே வந்தருளவேணுமம்மா
எண்ணெய் சிந்தென்று எழியேன் உரைத்த தமிழ்

வண்ணத் தமிழ்ப் புலவீர் வரைந்து தள்ளிப்போடாதீர்
பூவுலகில் மானிடர்கள் பொலிந்து நிதம் வாழ்ந்திடவே
ஆவலுடன் மன்றல் செய்யும் அந்த முறையால் மணந்து
மைந்தரில்லா வாழ்வு மகிமை குறையுமென்று
சந்ததி உண்டாகித் தழைத்திருக்க வேண்டுமென்று
ஆகமத்திலுண்டான அரிய பெரிய நோன்பிருந்து
தாகமுடன் நல்ல தலங்கள் பல சென்று வந்து
ஆராயும் வேதமுடன் ஐந்தெழுத்தையு முணர்ந்து
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தபசுபண்ணி
அந்தி சந்தி தோறும் அன்னதானம் கொடுத்து
புந்தி நொந்த சிந்தையுடன் புகழ் தருமம் மாறாமல்
அன்னம் பகிர்ந்து அகதிகளை ஆதரித்து
பொன்னும் பணவும் கொடுத்துப் புத்திரரைத்தான் வேண்டி
தந்தையும் தாயும் தயவுகொண்ட நாளையிலே
வந்துதித்தோம் அம்மா மாதாவின் உந்தியிலே
.....................................................................................................
உண்மைப்படியாக உபாத்தியாயர் எங்களுக்கு
திண்ணமுடன் இயன்றளவும் திறமையுடன் கற்பித்தார்
ஆகையால் நாங்கள் அறிவு நூல்கள் கற்றதனால்
பாகனைய சொல்லாரே! பரிவுடைய மாதரசே
எட்டு நாளைக் கொருகால் எங்கள் குறைதீர
வட்டத்தில் எண்ணெய் தெண்ட வந்தோம் இங்கே மாதரசே
வாத்தியார் கூலி, மருத்துவிச்சி தான் கூலி
வைத்திருக்கக் கூடாது மாதாவே மன்னிப்பீரே
சீரார் சனி எண்ணெய்ச் சிந்து மிக வாழி!
ஆராய்வோர் கேட்போர் அனைவோரும் வாழியவே!
பாடினோர் வாழி! படிப்பித்தோர் தான் வாழி!
கூடினோர் வாழி! குருபதம் தான் வாழி!
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில் போல் சுற்றம் முசியாமல் வாழியவே!!!



# முஸ்லிம்களின் ஆடைக் கலாசாரம்

பாவலர் சாந்திமுகைதீன்

"ஆள்பாதி ஆடைபாதி", "இரக்கப் போனாலும் சிறக்கப்போ" இவ்விரு பழமொழி களும் ஆடையின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட் டுகின்றது. ஆண்களைவிட பெண்கள் ஆடை ஆபரணங்களில் அதிக ஆசையுள்ள வர்கள். விதம் விதமான ஆடைகளை அணிவ திலும் ஆபரணங்களைத் தேடுவதிலும் அவர்கள் சளைத்தவர்கள் அல்ல. ஏதாவது ஒரு விஷேட நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் போது அவர்கள் நோக்குவதெல்லாம் ஏனைய பெண்கள் உடுத்துவந்திருக்கின்ற ஆடைகளையும் அவர்கள் போட்டு வந்திருக்கின்ற ஆபரணங்களையும் தான். அவைகளில் ஏதாவது அவர்களின் மனதைக் கவர்ந்துவிட்டால் அதைப் போன்றதொன்றை நாமும் அணியவேண்டும் என்று ஆவல்கொண்டு அறிமுகமில்லாதவர்களா யினும் எப்படியாவது அவர்களுடன் உறவாடி, அல்லது தனது உறவினர்க ளுக்குத் தெரிவித்து அவை இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்து அதில் ஒன்றை வாங்க முயற்சிப்பார்கள்.

இன்றைய நவீன காலத்தில் கூடச்சிலர் ஒரு சிறிய துண்டுத் துணியைக் கையில் எடுத்துக்கொண்டு கடைகளில் ஏறி இறங்குவதை அவதானிக்கலாம். என்ன காரணமெனில் அந்தச் சிறுதுண்டுச் சீலையைப் போன்ற வண்ணத்தில் பக்கத்து வீட்டுப் பரிதா ஒரு சட்டையை அல்லது ஒரு சாரியை வாங்கியிருப்பாள். அதேபோன்று வடிவத்தை உடைய அதே

நிறமான சீலையை வாங்கித் தாமும் அணியவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்.

தற்பொழுதெல்லாம் சினிமாப் படங்களின் பெயரில் ஆடைகள் சாரி, ரீசேட் ஏன் சப்பாத்துக்கள் கூட விளம்பரப்படுத்தப்படுகின்றது. இது வியாபாரத் தந்திரங்களில் ஒன்று. ஆனால் இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன் தமிழ் சினிமாப்படங்கள் பிரபல்யம் இல்லாத காலத்தில் ஆடைகளை குறிப்பாக சாரிகளை எப்படிப் பெயர் கூறி அழைத்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கின்ற போது பல சுவையான தரவுகள் எமக்குக் கிடைக்கின்றது.

அப்பொழுதெல்லாம் மின்தறிகள் இல்லாத காலம் கைத்தறி ஆடைகள், நிறம் தீட்டப்பட்ட சாரிகள், கைகளினால் வரைவுகளை உருவாக்கி அதனை அச்சாக வடிவமைத்து அவ் அச்சுக்களை நிறச்சாயங்களில் அமிழ்த்தி சீலைகளில் ஊன்றிய அச்சடியன் சீத்தைகளே நமது ஊரில் அதிகமானவை. இவற்றுக்கெல்லாம் ஒவ்வொரு பெயர் அப்பொழுதும் இருந்திருக்கின்றது. இத்தோடு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச்சாரிகள் சோமன் என்றும் ஏனையவைகளை சேலை என்றும் அழைத்தார்கள். இந்த சேலை சோமன்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயர்கள் இருந்தன. உதாரணமாக: பச்சைவடம், குடமுடைச்சான், வடக்கத்தகருக்குப் பணி, கண்தாங்கி, மாடா வண்ணம், அத்துராசி, சந்திரப்பட்டு, மருதமூட்டு, எள்ளுவண்ணம், சோனகக் கொட்டை, அறவணமொட்டு, சீப்பு வண்ணம், கடுகுவண்ணம், வத்தகப்பட்டு, மோகினிப்பட்டு, அர அடிப்பட்டு, காரக்கால், குட்டுப்பட்டு, சிவத்த தோம்பு, வெள்ளத்தோம்பு என்பனபோன்றது இப்பெயர்கள் காலத்தால் அழிந்து விடாதவாறு நாட்டார் பாடல்களில் இடம்பிடித்து இருப்பதால் வரலாற்று முக்கியத்துவம் பெறுவதோடு, அதுசம்பந்தமாக ஆராயவும் நமக்கு ஆசை ஏற்படுகின்றது.

**உதாரணமாக:**

**"கொச்சிப்பழத்தை குறுக்கால் அரிந்ததுபோல்**

**பச்சவடச்சேலை மச்சி உன்ர பால்மேனிக்கேத்ததுதான் என்றும்**

**பச்சவடத்தில கச்ச கிழிக்கிறான்.**

**பாதிப் புடவல மூக்கத் துறைக்கிறான்.**

**சொத்தய நீட்டிச் சுறுட்டிப் புடிக்கிறான்.**

**சோறுண்ணப் போனால் ஒருசாமம் செல்லுண்டி**

**என் செல்லராத்தாண்டி எனக்கிந்தச்**

**சோதையன் வாணாண்டி."**

இப்பாடல்களில் பச்சவடச்சோமன் இடம் பிடித்துள்ளது இதேபோல்,

**மச்சிமனசுக்கு மதிப்பான பால்சோமன்**

**அச்சிக்கு வாங்கிவாறன்**

**அதுவரைக்கும் காத்திருங்க**

இப்பாடலில் பால்சோமன் அன்று பழக்கத்தில் உள்ளது தெரிய வருகின்றது. மேலும் பால்சோமனை நான் ஹஜ்ஜுப் பெருநாளைக்கு (அச்சுக்கு) வாங்கி வாறன் என்று கூறுவதில் இருந்து இதன்விலை அதிகமோ? இச்சேலை அன்று மிகவும் மதிப்பு வாய்ந்ததோ? என்று எண்ணத்தூண்டுகிறது. மேலும்,

**பொழுபொழுத்த சட்ட - புள்ளிபோட்ட பாவாட**

**அத்துராசிச்சோமன் - மச்சி**

**அழகாகத்தான் இருக்கு.**

என்று நாட்டார் பாடல் எமக்கு அத்து ராசிச் சோமனை அடையாளப்படுத்துகின்றது.

இதேபோல,

**நார்ப்பட்டுச்சோமன் நல்லா இணங்கினாப்போல்**

**பூச்சிலுக்குச் சட்டை**

**பொருந்தினது சாத்தியமாய்**

இப்பாடல் எமக்கு நார்ப்பட்டுச் சோமனையும், பூச்சிலுக்குச் சட்டையையும் நினைவுக்குக் கொண்டு வருகிறது. மட்டுமல்ல,

**குடமுடைச்சான் சேலை எல்லாம் கோலம் போடுதே!**

**அதன் கொசுவமெல்லாம் நம்மளத்தான்**

**கொல்லப்பாக்குதே!**

என்பது குடமுடைச்சான் சேலையின் அழகை இதன் கொசுவத்தை அதில் பாடப்பட்டுள்ள கோலத்தை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது.

மேலும்,

பொட்டகத்தைத் துறந்து பொன்வெள்ளிச் சாமானை
பொற்கொடியே நீயும் போடு
வாட்டிமறிச்ச வடக்கத்திச் சோமனை
எண்ணக்கிழியே கொசுவி உடு
முகத்தையும் மூடி நீ மொக்காட்டப் போட்டுக்க
முன்னாலபோறன் நீ பின்னால வாபொண்ணே!


(பாலம் பார்க்கப் போவோம் வாருமே)

என்று வளரும் வழிநடைச் சிந்துப் பாடல்களில் வடக்கத்திச் சோமன் அடையாளப்படுத்தப்படுவதுடன் அதன் வாட்டி மடித்த (மறிச்ச) து அதாவது வடக்கத்திச் சோமல் கீழ்போடர் உள்ளது என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

இப்பாடல்களில் இருந்து சேலை வேறு சோமன் வேறு என்பதுடன் அன்றைய ஆடைகளில் பெயரை மட்டும் சுட்டாமல் இதற்குள் அகழ்ந்து ஆராயக்கூடிய பல விடயங்கள் நமக்குப் புலப்படுகின்றது.

சேலை சோமன் சாரி என்று கூறப்படுவதிலிருந்து இவை வேறு வேறான தரத்தை, ரகத்தை உடையது என்பது ஓரளவு தெரியவந்தாலும், இதன் தரங்கள் எப்படி? இவைகளில் அன்று உயர்வாக மதிக்கப்பட்டது. சோமனா? சேலையா, திருநாள், திருமணம், பெருநாள் போன்ற நாள்களில் அதிகமாக அணிந்த ஆடைகள் எது? திருமணப் பெண்ணுக்கு அணிவிக்கப்பட்டது எப்படியான சேலை? அன்றையப் பெண்கள் அதிகம் விரும்பியது சேலையா? சோமனா? அன்று சேலையின் அளவு 14 முளம். சோமனின் அளவும் அதுதானா? என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டிய வைகள்.

அன்றைய ஆடை அணிகள் காலத்துக்கு ஒவ்வாதது என்று கருதப்பட்டு நவநாகரிகப் போக்கில், இவைகள் அருகிப் போனதால் அவைகளைப் பார்க்க முடியாது என்றாலும், அதன் பெயர்கள் மட்டக்களப்பு கிராமியப் பாடல்களில் பதிவுசெய்யப்பட்டதும் அழியாமல் இடம்பிடித்திருப்பது. வரலாறுகள் ஆய்வு செய்வதற்கும், நமது நாகரிகங்களைப் பின்னோக்கிப் பார்ப்பதற்கும் பேருதவியாகவுள்ளது.



# ஆரையம்பதியின் மெல்லிசை வளர்ச்சி (பத்தி)

ஐ.மகேசானந்தம்

ஆரையம்பதி முன்னோடி இசைக் கலைஞர் திரு.சீ.கந்தையா ஆசிரியரைப் பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டும் ஏனென்றால் ஆரையம்பதியில் எங்களுக்குத் தெரிந்த வகையில் கந்தையா ஆசிரியர்தான் இசை, நாடகம், ஓவியம், சிற்பம் என பல கலை சம்பந்தப்பட்ட கலைகளில் ஈடுபாடு கொண்டவராக இருந்து பணியாற்றியவர்.

நாங்கள் இளைஞர்களாக இருந்தபோது வருடாவருடம் பல நாடகங்கள் மேடையேற்றுவது வழக்கம். எங்களது சகல நாடகங்களுக்கும் குறித்த கந்தையா ஆசிரியரும் அன்னாரது குடும்பத்தைச் சேர்ந்த, செல்லையா, தங்கராசா ஆகிய மூவரும் தான். ஹார்மோனியம், தபேலா, புல்லாங்குழல், மிருதங்கம், சல்லாரி இவைகளைக் கொண்டுதான் பாடல்களுக்கும், ஆடல்களுக்கும் பின்னணி இசை வழங்குவார்கள். இவரின் செயல்பாட்டுக்குப் பின்னர் எவரும் சங்கீதம், பாடல்கள், வாத்தியம் போன்ற இசையில் நாட்டம் கொள்ளவும் இல்லை, ஈடபடவும் இல்லையெனலாம்.

இப்படியான காலகட்டத்தில் நாங்கள் மேடையேற்றும் நாடகங்களுக்கெல்லாம் நாடகத்திற்குப் பொருந்தக்கூடிய இசையையும் சினிமா இசைத்

தட்டுக்களைப் போட்டு நாடகங்களின் இசை, பாடல்களை காட்சிகளை நடாத்தி வந்தோம்.

இப்படியான ஒரு காலகட்டத்தில் இரா.நாகலிங்கம் (அன்புமணி) அவர்களின் திரைகடல் தீபம் என்னும் நாடகம் மட்டுநகர் மாநகர மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்திற்கான ஒருசில பாடல்கள் எங்கள் நாடகக் குழுவினரால் பாடப்படவிருந்து மேற்குறித்த அந்தப் பாடலுக்குரிய தாள, வாத்தியங்களை இந்த நாடகத்திற்குப் பின்னணி இசை வழங்க வந்தவர்கள் எங்களது பாடகர்களின் பாடலுக்கான இசையை வழங்காது விட்டனர். ஏனென்று கேட்டதற்கு அவர்களுக்குச் சரியான தளவாத்தியங்களோடு பாடத் தெரியாது எனக் கூறினார்கள். கூறிவிட்டுப் பின்னர் ஏனோ, தானோ என்று சாட்டுக்கு வாசித்தனர். இதனால் எங்களது பாடகர்களின் பாட்டு சோபிக்கவில்லை. இந்த நிகழ்வு எங்களுக்கு பெரும் மனவேதனையையும் ஏமாற்றத்தையும் உண்டாக்கியது. இதன்பின்னர் நாங்கள் ஓர் தீர்மானம் எடுத்தோம். இனிமேல் நாங்கள் எங்களது நாடகம், கலை நிகழ்ச்சி யாவற்றிற்கும் இசை வழங்குவதென்று. அதன் நிமித்தம் ஓர் இசைக்குழுவை உருவாக்க எண்ணி எங்களில் பத்துப்பேர் ஒன்று கூடி "இலங்கேஸ்வரன்" எனும் நாமத்துடன் இந்த இசைக்குழுவை உருவாக்கினோம். இந்தக் குழுவிற்கு "இலங்கேஸ்வரன்" எனப் பெயர் வைத்ததற்கான காரணத்தையும் கூற வேண்டும். இராவணன் இசையில் நல்ல பாண்டித்தியம் பெற்றவன். தனது கொடியில் இசைக்கருவியான வீணையைக் கொண்டுள்ளவன். பத்துத் தலைகளையும் கொண்டவன் நாங்களும் பத்து அங்கத்தவர்களைக் கொண்டவர்கள். இராவணன் திராவிடன். நாங்களும் திராவிடர். இப்படியான காரணத்தையும் ஒற்றுமையையும் கொண்டுதான் "இலங்கேஸ்வரன்" இசைக்குழு எனப் பெயர் சூட்டினோம்.

மேற்படி இசைக்குழு 1962ம் ஆண்டு மார்ச் மாதம் 15ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆரம்பகாலம் முதற்கொண்டு அங்கத்தவர்கள் ஆகிய நாங்கள் பல சிரமத்தின் மத்தியில் சிறுசிறு தொகை நிதியினைக் கஷ்டத்தின் மத்தியிலும் சேர்த்து வந்ததுடன், சின்னச் சின்ன கலை நிகழ்ச்சிகள், சரஸ்வதிப்பூசை, பாடசாலை இசை நிகழ்ச்சியில் எங்களிடமுள்ள வாத்தியங்களைக்

கொண்டு இசை நிகழ்ச்சியை நடாத்தி வந்தோம் இவ்வேளையில் நாங்கள் எங்களது இசைக்குழுவை நல்ல முறையிலான ஓர் பிரசித்திப்பெற்ற இசைக்குழுவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எங்களது இசைக்குழுவின் அரங்கேற்றம் என்ற நோக்கத்தோடு ஆரையம்பதி ஸ்ரீ முருகன் ஆலய முன்றலைக் களியாட்ட விழா போன்று நாலாபக்கமும் தகடுகளைக் கொண்டு அடைத்து பிரவேசக்கட்டண ரிக்கட் வைத்து "இலங்கேஸ்வரன் இனிக்கும் இரவு" என்னும் முழு இரவு கலை நிகழ்வாக, நாடகம், நடனம், பாடல் போட்டி, சாண்டோ சாகஸ விளையாட்டு இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகளை மின் அலங்காரங்கள் செய்து ஆரையம்பதியில் இப்படியானதொரு நிகழ்ச்சி இதற்கு முன்னர் நடந்தது இல்லை என்று மக்கள் சொல்லும் அளவுக்கு இந்த நிகழ்ச்சியை நடத்தினோம்.

இனி இந்த இலங்கேஸ்வரன் இனிக்கும் இரவு நிகழ்ச்சியைப் பற்றி சற்றுக் கூற வேண்டும். இந்த நிகழ்ச்சி 1967ம் ஆண்டு யூன் மாதம் 27ந் திகதி நடைபெற்றது. மேற்படி நிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக திரு.மு.கணபதிப்பிள்ளை ஆசிரியர் மூனாக்கானா அவர்களால் இயற்றப்பட்ட எங்களது இசைக் குழுவின் பாடலைப் பிரபல பாடகர் நதங்கராசா (ஆரையூர் அரசன்) அவர்களால் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து எங்களது இசை நிகழ்ச்சி நடந்தது. அதன்பிறகு சாண்டோ சாகஸ விளையாட்டு (ஐ.சிவான் தவராசா இரும்புவீரன் அவர்களால்) பிறகு புராண நாடகமான குந்தியின் மடியில், ஒத்தலோ ஆகியே நாடகங்கள், நடன நிகழ்ச்சி, பாடல் போட்டி. இந்தப் பாடல் போட்டியில் பரிசு பெற்றோருக்கு இரண்டு தங்கப் பவுண் பதக்கம், துவிச்சக்கரவண்டி, ரொக்கப் பணம் இப்படிப் பல சிறந்த பரிசுகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு இந்நிகழ்ச்சியின் போது இந்த நாடகத்தில் நடித்தவர்கள் நடனம் ஆடியவர்கள் அந்தவேளை தலைநகர் பொழும்பில் சினிமா, நாடகம் போன்றவற்றிலும், மணிமேகலை, குமாரி போன்றவர்கள் எங்களுடன் நடிகர்களுடன் சேர்ந்து நடித்தார்கள். அதுமட்டுமன்றி இன்று இலங்கையின் பிரபல ஹிந்திப் பாடகரான ரொணிஹசன் சிறு இளைஞனாக இந்தக் கொழும்பில் இருந்து வந்தவர்களுடன் கூடவந்தபோது நாங்கள் இசை நிகழ்ச்சி ஒத்திகை பார்த்தபோது அவர் ஒரு சில ஹிந்திப் பாடல்களைப் பாடினார். அதைக்கேட்ட நாங்கள் எல்லோரும் அவரைப் பாடவைத்தோம். அவர் ஏறிய முதல்

மேடையும் இந்த இலங்கேஸ்வரன் இனிக்கும் இரவு நிகழ்ச்சியில் தான் என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

எங்களது இந்நிகழ்ச்சியின் பிரதம கலை அதிதிகளாக திரு.N.பத்மநாதன், நிகர்வாக உத்தியோகத்தர் K.சுந்தரலிங்கம் (BA Dip.in.Edu.) இரா.நாகலிங்கம் (அன்புமணி), K.சின்னத்தம்பி (ஆசிரியர்), திரு.க.செல்லத்தம்பி (ஆரையூர் இளவல்), திரு.க.அமரசிங்கம் (ஆரையூர் அமரன்), திரு.த.தங்கவடிவேல் (மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோர் முன்னிலையில் வெகு விமர்சையாக பிரதம அதிதிகளின் பாராட்டுக்கும் மத்தியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதன்பிறகு இசைக்குழுவானது நாட்டின் பல பகுதிகளிலும் இசை நிகழ்ச்சியோடு, ஓரங்க நாடகங்களையும் நடந்தி வந்தது. திருமலை, தம்பலகாமம், பொலநறுவை, திருக்கோவில், கொழும்பு, நிந்தவூர், அம்பாரை, வாழைச்சேனை, மட்டக்களப்பு மாவட்டத்தின் அநேக கோயில் நிகழ்ச்சிகளிலும், கலை விழாக்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் செய்துள்ளோம். கிழக்கு மாகாண சனசமூக நிலையங்களுக்கான இசை, நாடகப் போட்டியில் ஆரையம்பதி சனசமூக நிலையத்தின் சார்பாகக் கலந்து முதற்பரிசும் பெற்றுள்ளது. இனி எங்களது இசைக் குழுவின் இசைத்துறையில் மேற்கொண்ட முறையும் அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் துணையாக இருந்து உழைத்தவர்களையும் சற்றுப் பார்ப்போம்.

அந்தக்காலத்தில் ஹார்மோனியம், வயலின், புல்லாங்குழல், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளைக் கொண்டுதான் இசை நிகழ்ச்சி நடத்தி வந்தார்கள். நாங்கள் இவைகளோடு மேலைத்தேய வாத்தியக் கருவிகளான எக்கோடியன், கிற்றார், றம்பேட், கிளரிநட், வொங்கோஸ், றம்சேட் போன்ற வாத்தியக் கருவிகளையும் சேர்த்து வாசித்து இசை நிகழ்ச்சியை நடத்தினோம். இதன் காரணமாக ஓர் புதிய முறையான இசை நிகழ்ச்சியை மக்களுக்களித்தோம். இது எங்களது நிகழ்ச்சியில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இனி எங்களது இசைக் குழுவை முறையாகவும் சிறப்பாகவும் நடாத்திய அங்கத்தவர்களையும் அவர்களின் பங்களிப்பையும் குறிப்பிடவேண்டியது மிகவும் முக்கியம்.

திரு.கு.கயிலாயநாதன் (தலைவர், வாத்தியம், ஆல்றவுண்ட்)

திரு.ஐ.மகேசானந்தம் (செயலாளர், வாத்தியம், கிற்றார்)

திரு.க.சுந்தரலிங்கம் (வாத்தியம் எக்கோடின், கிளரிநட்)

திரு.சீ.நல்லதம்பி (வாத்தியம், கிளரிநட், புல்லாங்குழல்)

திரு.எஸ்.குழந்தைவடிவேல் (வாத்தியம், டொலக், றம்செட்)

திரு.எஸ்.மகேந்திரன் (வாத்தியம், றம்பேட், சையிட்றம்)

திரு.என்.அழகுராசா (வாத்தியம், ஹார்மோனியம்)

திரு.எஸ்.சோமசுந்தரம் (வாத்தியம், மெண்டலிங், புல்புல்தார)

திரு.K.மயில்வாகனம் (பாடகர்)

திரு.N.வீரசிங்கம் (பாடகர்)

திரு.T.யோகேந்திரன் (பாடகர்)

திரு.K.முத்துலிங்கம் (பாடகர்)

செல்வி.S.புவனேசநாயகி (பாடகி)

திரு.இரா.நல்லையா (ஓரங்க நாடகங்கள்)

மேலே குறிப்பிட்ட பாடகர்களில் திரு.க.மயில்வாகனம் அவர்கள் அந்தக்காலத்தில் இலங்கை வானொலியில் பல இசை நிகழ்ச்சியில் பங்கு பற்றியும் பரிசும் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி மகாபொல முதல்முதல் தொடங்கிய போது அந்த மகாப்பொல நிகழ்ச்சியில் பாடி முதற்பரிசாக ரூபா 5000/= ரூபாவும் சான்றிதழும் பெற்றதோடு மட்டுமன்றி அடுத்தடுத்து பன்னலையிலும், அடுத்து பனிபிட்டியிலும் நடைபெற்ற மகாப்பொல நிகழ்ச்சியிலும் முதற்பரிசும் சான்றிதழும் பெற்றார். இப்படி தொடர்ச்சியாக மூன்று தடவை பரிசுபெற்றவர். இந்த நிகழ்ச்சிதான் ரூபவாஹினியில் முதலில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதன் காரணமாக மட்டக்களப்பில் ரூபவாஹினியில் பாடிய முதற்பாடகர் என்ற பெருமையையும் எங்களது ஊருக்குப் பெற்றுத் தந்தவர்.

திரு.ந.வீரசிங்கம் இவரும் அந்நாளில் பல தடவைகள் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பரிசும் பெற்றவர். இத்துடன் எங்களது இசைக்குழு பல நிகழ்ச்சிகளின் போது பல அமைச்சர்களாலும் பாராட்டப்பட்டுள்ளது.

ஆரையம்பதியின் கிராமசபையால் ஆரையம்பதிக்கு மின்சாரம் முதல்முதலாக

வழங்கிவைத்த வைபவத்தின் போது அப்போதை உள்ளூராட்சி அமைச்சராக இருந்த கௌரவ அமைச்சர் மு.திருச்செல்வம் அவர்களால் வெகுவாகப் பாராட்டுப் பெற்றது.

நிந்தவூரில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது அந்தவேளை நிதி அமைச்சராக ஜனாப் M.M.முஸ்தபா அவர்களின் பாராட்டைப் பெற்றது. வாழைச்சேனை கலை விழாவின் போது சிறப்பு நிகழ்ச்சியாக எங்களது இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது அந்தவேளை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த திரு.K.W.தேவநாயகம் அவர்களால் மிகவும் பாராட்டைப் பெற்றதோடு சகல இசைக் கலைஞர்களுக்கும், மாலை அணிவித்தும் கௌரவித்தார்கள். அடுத்தபடியாக களுதாவளைக் கோயில் உற்சவ விழாவின் போது எங்களது இசை நிகழ்ச்சி நடைபெற்றபோது அந்த விழாவின் பிரதம விருந்தினராக வருகைதந்திருந்த அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.செ.இராசதுரை அவர்களாலும் மிகவும் போற்றிப் புகழாரம் சூட்டி கௌரவிக்கப்பட்டது. இப்படியாக எவ்வளவோ நிகழ்வுகளையெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம். இதன் பின்னர் எங்களிலிருந்து பிரிந்து இதே இசைக் குழுவின் சிலர் 'உதயசூரியன் இசைக்குழு' என்ற பெயரில் சிலகாலம் இப்பணியினைத் தொடர்ந்து செய்ததோடு 'உதயசூரியன் உல்லாச இரவு' என்னும் நிகழ்ச்சியும் நடாத்தினர். அதன் பின்னர் அவர்களும் காலச் சூழ்நிலை காரணமாக இசை நிகழ்ச்சியினைப் படிப்படியாகக் கைவிட்டு விட்டனர்.






கவிஞர் ஆரையூர் அருள்

**பொஞ்சாதி :** தாழங்குடா பட்டியில பால்கறந்து காய்ச்சிருக்கு
காலைக்க போறநீங்க களைப்பாறக் குடிச்சிபோங்க

**புரிசன் :** நேத்துராவு குடிச்சபாலு நெஞ்சிக்குமேல நிக்கி
ஊத்தித்தா போத்தலில உரமெறிய போறன்புள்ள

**பொஞ்சாதி :** உமலுக்க ஒரு துண்டு ஓட்டு கொழுக்கட்ட இருக்கு
மறவாம தின்னுமச்சான் மதியம்வர பசியெடுக்கா

**புரிசன் :** உச்சிவகிடெடுத்து ஓரக்கன்னக் கொண்ட கட்டி
வச்சியிருக்கும் பொட்டழகு தின்ன மனக்குமடி மனசிக்குள்ள

**பொஞ்சாதி :** பாயிழைக்க பன்னறுக்கு கிரான்குளம் போறமச்சான்
திராய்கிடக்கும் புடுங்கிவாங்க சுண்டிவெகு நாளாச்சிது

**புரிசன் :** திராயில பித்தம்புள்ள திண்டா நித்தம் சத்தி வரும்
ராவைக்கு கூத்துப்பார்க்க நாமபோக வேணும் புள்ள

**பொஞ்சாதி :** புதுக்குடியிருப்பு பொன்விளையும் வயலுக்குள்ள
கதிரறுக்க போறநீங்க புதுருக்கதிர் கொண்டுவாங்க

**புரிசன் :** சதிராடும் கதிரழகு சுதிமீட்குமுன் இடுப்பழக
மதிமயங்கி நின்றிடுவன் வந்திரடி தேடியென்ன

**பொஞ்சாதி :** மண்முனத் துறையினில வளைஞ்சி வீசப்போறமச்சான்
கண்ணாக்கடியன் பட்டா கறிக்குக் கொண்டுவந்திடுங்க

**புரிசன் :** மட்டுறால் குழம்புவைச்சி மண்டுப்புட்டு திண்டாப்புள்ள
எட்டுநாள் சென்றாலும் எடுக்காதடி பசியெவர்க்கும்

**பொஞ்சாதி :** வேடர் குடியிருப்பில் விறகுவெட்ட போறமச்சான்
காடேறி காத்தனைவு பார்வையாக்காமப் பாத்துக்கங்க

**புரிசன்** : வெட்டின விறகுதனைக் கட்டி கொண்டு விற்கப்போனா
கட்டாத விலைக்குத்தானே கறவாப்போறவங்க கேக்கிறாங்க

**பொஞ்சாதி** : தர்மபுரத்தினில கருமமாற்றப் போறமச்சான்
வடிவான முந்திரிப்பழம் குலையோட வாங்கிவாங்க

**புரிசன்** : குலையோட வாங்கிவர விலை மிகவும் அதிகம் புள்ள
வைகாசிச் சடங்குக்குள்ள கல்யாணப்பழம் வாங்கித்தாறன்

**பொஞ்சாதி** : பாலன்முனைக்கடற்கரைக்கு வெள்ளாட்போட போனாமச்சான்
சீலாமீன் வாங்கிவாங்க கீலமாக வெட்டி பொரிச்சித்தாறன்

**புரிசன்** : செல்வாநகர் கிழக்குக் காளிகோயில் திறந்திருக்கு
எல்லையெங்கும் மச்சமில்ல என்ர செல்லத்துக்கு தெரியாதடி

**பொஞ்சாதி** : மாவிலங்கத்துறை காளிகோயிலுக்குப் போறநீங்க
மாவிலங்கயில ஆஞ்சிவாங்க வாட்டியிழுக்கவேணும்

**புரிசன்** : கோகுலங்கள் கூவுமிசையில் உன்ரகுரலோசை கேட்கும் புள்ள
ஆயிழையாள் காமாட்சி ஆலயத்திற்கருகே

**பொஞ்சாதி** : காங்கேயனோடப் பள்ளி பாங்கோசை கேட்குதுங்க
தூங்கினது போதும் மச்சான் சுறுக்காக எழுந்திருங்க

**புரிசன்** : பேதுறுவோட சேர்ந்து மீராலெவ்வையும் வாறாங்க புள்ள
மூவருக்கும் சோறுகட்டு தோட்டவேலைக்கு போறம்புள்ள

**பொஞ்சாதி** : கோவில் குளத்துக்குள்ள பூவெடுக்க போறமச்சான்
தாமர கொட்ட கொஞ்சம் தானெடுத்து வாங்கமச்சான்

**புரிசன்** : காசிலிங்க நாதர் கோயில் காலத்தில ஏராளம் புள்ள
தாமரக் கிழங்கெடுத்து குளத்தழிக்கிறாங்க புள்ள

**பொஞ்சாதி** : திருநீற்றுக்கேணியில குறிகேக்க போறமச்சான்
மறுக்காம கறுக்காப்பழம் காச்சிருக்கா மாஞ்சிவாங்க

**புரிசன்** : தருப்பப் புல்விருந்தடமும் சுனாமியால அழிஞ்சிபோச்சி
கடுப்பான கதையவிட்டு எடுதெரிப்ப போயிவாறன்

**பொஞ்சாதி** : ஆரைநகர் கந்தோருக்க வேல முடிக்கப்போறமச்சான்
கோயில கும்பிடப் போறன் கூட்டித்துப் போகவாங்க

**புரிசன்** : ஆரைநகர் எல்லைக்குள்ள முட்டத்தாறுக்கு மேல் கோயில்புள்ள
ஊரெல்லாம் சுற்றியுன்ன எங்கதான் தேடுறபுள்ள.



சர்வதேச மகளிர் ஆண்டாக இவ்வாண்டு அமைவதை முன்னிட்டு எமது பிரதேசத்தில் மூத்த பெண் கலைஞராக **திருமதி.தங்கம்மா சந்திரசேகரம்** அவர்கள் எல்லோராலும் மதிக்கப்படும் தமது கலைப்பயண அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.

# னைக்குள் உயிர்த்த கலையுள்ளம் (பத்தி)

திருமதி.தங்கம்மா சந்திரசேகரம்

கலை வெளிப்பாடு என்பது இயல்பாகவே ஒருவருக்கு ஏற்படுகின்ற உணர்வாகும். என்னைப் பொறுத்தவரை எனக்குள் இருக்கும் குரல் வளமும், எங்கள் கிராமத்தில் அப்போதிருந்த கிராமிய கலை நிகழ்ச்சிகளும் கலை தொடர்பாக எனக்கு கூடுதல் நாட்டத்தை ஏற்படுத்தின.

எனது பிறந்த இடம் கோட்டைக்கல்லாறு ஆகும். இந்தக் கிராமத்தில் நாட்டுக்கூத்து, வசந்தன் கூத்து, கரகாட்டம் மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகள் பெருமளவில் காணப்பட்டன. எனது இளமைக் காலத்தில் இந்த நாட்டுக்கூத்து மற்றும் கிராமிய கலை நிகழ்ச்சிகளை ஆர்வத்தோடு பார்த்து இரசிப்பேன்.

எங்கள் கிராமத்திலே நாட்டுக் கூத்தில் திறமைமிக்க கந்தப்பர் என்ற அண்ணாவியார் இருந்தார். அவரை "குறத்தி கந்தப்பர்" என்றே அழைப் பார்கள். ஏனெனில் நாட்டுக்கூத்து ஒன்றில் குறத்தி பாத்திரம் ஏற்று திறமையாக நடித்து கலைஞர் உள்ளத்திலே அந்த பாத்திரமே உருவமாக இடம்பிடித்துள்ள மையால் ஆகும்.

இவர் அதிகமான நாட்டுக் கூத்துக்களையும் கிராமிய கலை நிகழ்ச்சிக ளையும் தயாரித்து மேடை ஏற்றியுள்ளார். அவருடைய நாடகங் களை நான் மிகவும் விரும்பி இரசித்து வந்திருக்கிறேன். பொதுவாக மட்டக்களப்பு பகுதியிலே கண்ணகி அம்மன் விழா மிகவும் பக்திப் பரவசத்தோடு நிகழ்த்தப் படும் ஒரு சடங்கு ஆகும். இந்த சடங்கு சில இடங்களில் ஒன்பது நாட்களும்

சில ஆலயங்களில் நான்கு நாட்களும் இடம்பெறுகின்றன. இந்த நிகழ்வின் போது கிராமிய கலைகளை வெளிப்படுத்தி நிகழ்ச்சியை சிறப்பிக்கும் பண்பு எமது பகுதியிலே மிகையாகவே காணப்படுகின்றன.

துரதிஷ்டவசமாக எமது நாட்டில் புரையோடிப் போயிருந்த இனமுறுகல் தொடர்பான வன்முறைகள் கலை வெளிப்பாடுகளையும், கலை ஆக்கங்களையும் தள்ளிவிட்டிருந்தது. இவ்வாறெல்லாம் கலை நிகழ்ச்சிகளை வலிந்து, பிரயத்தனப்பட்டு வெளிக்காட்டவேண்டிய நிலை காணப்படுகின்றது.

நான் பாடசாலையில் கல்வி கற்கும்போது கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறேன். நான் கல்வி கற்ற நிலையம் *(Theresa Convent)* திரேசா பெண்கள் பாடசாலையாகும். 1935களில் மட்டக்களப்புப் பகுதியிலே பிரபலமான பாடசாலைகளில் இதுவும் ஒன்று. இப்பாடசாலையில் நான் இடைநிலைப் பிரிவில் பயிலும்போது மாணவர் இலக்கிய மன்றத்தில் பல கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருந்தேன். அதன் நிமித்தமாக நான் கற்றுவரும் போது இடைநிலை பிரிவு மாணவர் மன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தேன். அந்தக் காலத்தில் தலைவர் என்பதை 'அக்கிராசனர்' என்றே அழைப்பர். மாணவர் மன்ற நிகழ்வு மாதந்தோறும் தவறாமல் இடம்பெறும். ஒவ்வொரு நிகழ்விலும் கலை நிகழ்ச்சிகளை சக மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் தயாரித்து நடித்து காட்டி விடுவோம் பின் உயர்நிலை வகுப்புக்கு வந்ததும் அந்த பிரிவுக்கும் நானே அக்கிராசனராக தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அப்போதெல்லாம் கலை வெளிப்பாடுகளை கணிசமான அளவு வெளிப்படுத்தி காட்டியிருக்கின்றேன்.

பாடசாலை கல்வி முடிந்ததும் எனக்கு ஆசிரிய தொழில்கிடைத்தது. 1953/1954ல் நான் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றேன். கலை வளர்ச்சியில் நான் ஈடுபடுவதற்கு ஆசிரிய தொழில் மேலும் வாய்ப்பாக அமைந்தது என்றே சொல்லவேண்டும்.

எனது ஆசிரிய பயிற்சி ஆரம்பப் பிரிவாகும். இந்தப் பகுதியில் கலைகள் தொடர்பான பயிற்சிகள் அதிகம் இருந்தன. அந்த வகையில் எனது கலைத்திறன்களை வெளிப்படுத்தக்கூடிய பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அந்த நிகழ்வுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த திறன்களின் அடிப்படையில் 1954ம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சிப் பதிவுகளுக்கு அழைக்கப்பட்டேன். பாடல்கள் பாடுதல், கூத்து ஒலிபரப்புகளில் பெண் பாத்திரங்களில் குரல்கொடுத்தல் மற்றும் நாடகங்களில் பெண் பாத்திரங்களின்

ஒலிவடிவத்தை பதிவுசெய்தல் முதலான நிகழ்ச்சிகளில் அப்போது நான் பங்கேற்றிருந்தேன். 1970கள் வரை தொடர்ந்தும் இலங்கை வானொலி நிகழ்ச்சி களில் பங்கெடுத்து வந்தேன். அக்காலத்தில் இலங்கை வானொலியில் கடமை புரிந்த மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.எம்.கந்தசுவாமி, இராபத்மநாதன் -இருவருமே தற்போது உயிருடன் இல்லை) ஆகியோர்கள் இலங்கை வானொலி நிகழ்ச்சி பதிவுகளுக்கு தயார்படுத்துவதில் குறிப்பிடத்தக்கவர்கள்.

1963ம் ஆண்டிலிருந்து நான் கடமையாற்றிய மட்/ஆரையம்பதி சுப்பிரமணியம் வித்தியாலயம், மட்/களுதாவளை மகா வித்தியாலயம், கல்/ தம்பிலுவில் மகா வித்தியாலயம், மட்/முதலைக்குடா மகா வித்தியாலயம், மட்/ஆரையம்பதி இ.கி.மி. வித்தியாலயம், மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம் என்பனவற்றில் எல்லாம் கலை நிகழ்ச்சிகளைத் தயாரித்து போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வெற்றி பெறச் செய்திருக்கிறேன்.

எனது கணவர் திரு.சி.சந்திர சேகரம் அவர்கள் கலை உணர்வுமிக்கவர். கவிதை எழுதுதல், நாடகங்கள் எழுதுதல், மேடைப்பேச்சு, புராண படனஞ் செய்தல் முதலானவற்றில் ஆற்றலுள்ள அவர் ஆங்கில ஆசிரியராகவும் தமிழ் ஆசிரியராக வும் இரட்டை ஆசிரிய பயிற்சி பெற்ற ஒருவர். என்னுடைய கலை வெளிப்பாடுகளுக்கு அதிகளவு ஆக்கமும், ஊக்கமும் அளித்திருக் கின்றார். எனது கணவர் தயாரித்த "குடும்பம் ஒரு கோயில்" என்ற சமூக நாடகத்தில் பிரதான பாத்திரமாக - கதாநாயகியாக பாத்திரமேற்று நடித்திருந் தேன். அந்த நாடகத்தை ஆரையூர் இளவல் நெறிப்படுத்தியிருந்தார். அவர் தற்போது கலை நிகழ்ச்சிகளில் மிக ஈடுபாட்டுடன் இயங்கிக் கொண்டிருப்பவர்.

மேற்படி 'குடும்பம் ஒரு கோயில்' என்ற சமூக நாடகத்தில் ஜனாப். எம்.ஏ.சி.எம்.அலியார் என்ற இஸ்லாமிய இனத்தைச் சேர்ந்தவரும் நடித்தி ருந்தார். 1977களில் முஸ்லிம் இனத்தவர்களுக்கும் எமக்கும் நெருக்கமான கலை ஈடுபாடுகள் இருந்தன. அக்கால இன ஐக்கியம் ஆயுதப் போராட்டம் காரணமாக விரிசலுற்றமை எமது பிரதேசக் கலை வளர்ச்சிக்கு ஏற்பட்ட பாரிய அனர்த்தம் என்றே நான் நினைக்கின்றேன்.

1978ல் எமது மட்டக்களப்புக் கலைஞர்களை உள்ளடக்கியதாக ஒரு கலை வட்டத்தை உருவாக்கியிருந்தோம். அதில் திரு.எஸ்.கணேசாநந்தம், திரு.கே.குகநாதன் (இவர் இப்போது பிரதேச செயலாளராக இருக்கும் நிமல நாதன் அவர்களின் சகோதரராவார்) திரு.ரைற்றல் ஹென்றிக், திரு.சிவபாக்கிய ராஜா, ஆரையூர் இளவல், மூனாக்கானா, செல்வி.தா.நேசலெட்சுமி, திரு.எஸ்.

சிவாநந்தராஜா, அன்புமணி, பாடகன் மயில்வாகனம் மற்றும் பலரும் முக்கிய உறுப்பினர்களாக இருந்துள்ளனர்.

இந்தக் கலை வட்டத்தின் மூலமாக 1978ல் " இருளிலிருந்து ஒளிக்கு" என்ற சமூக நாடகம் ஒன்றை மேடையேற்றினோம். இந்த நாடகத்தை ஆரையூர் இளவல் எழுதி, தயாரித்து, மேடையேற்றினார். இந்த நாடகம் ரசிகர்களின் பாராட்டை நிறையவே பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து எமது கலை வட்டத்தில் பல கலைஞர்கள் இணைந்து கொண்டனர். பின்னர் ஆரையூர் இளவலின் மற்றுமொரு படைப்பான "நீறு பூத்த நெருப்பு" என்ற நாடகமும் நேயர் களின் பாராட்டைப் பெற்றிருந்தது. இந்தக் கலைவட்டம் மூலமாகவும் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் பங்கேற்க எனக்கு நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தன. வானொலி நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதற்கு திரு.கந்தசாமி, திரு.இரா.பத்மநாதன் என்போர் எனக்குப் பக்க துணையாக இருந்தனர். 1978ல் நான் வானொலி நிகழ்ச்சியில் 'சுமத்திரை கல்யாணம்' என்ற நாட்டுக்கூத்தில் சுமத்திரையாகப் பாகமேற்று நடித்து பாராட்டும் பல பெற்றிருந்தேன்.

எங்கள் கலைவட்டத்தின் வளர்ச்சி அடிப்படையில் 1979ல் "செம்மனச் செல்வி" என்ற இந்து சமயப் புராணக்கதையை "மண் சுமந்த மகேசன்" என்ற பெயரில் திரைப்படம் ஒன்றைத் தயாரித்திருந்தோம். அதன் பிரதி - நாடாப் பதிவு என்னிடம் இல்லை. ஆரையூர் இளவலிடம் இருப்பதை நான் அறிவேன். இந்தத் திரைப்படத்தில் நான் செம்மனச் செல்வியாகவும் எனது கணவர் மகேசன் ஆகவும் நடித்திருந்தோம். கலை வளர்ச்சியால் இந்த முயற்சி எமக்கு உயர்ச்சி என நான் சொல்வேன்.

மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயத்தில் நான் கற்பித்த காலத்தில் மாணவர்களைக் கொண்டு சுமத்திரை கல்யாணம் என்ற நாட்டுக் கூத்தைத் தயாரித்து தேசிய மட்டத்தில் தமிழ் தினப்போட்டியில் முதலிடம் பெற்றோம்.

அந்தக் கலைவட்டம் 1981களில் எழுந்த ஆயுதப் போராட்டத்தின் விளைவாக சரிவு நிலையைக் கண்டிருந்தது. 1983ல் எமது கலைவட்டம் முற்றாகவே செயலிழந்துவிட்டது. இந்த நிலையில் பாடசாலை மாணவர்களைக் கொண்டு கொம்பு முறி நடனம், வசந்தன் கூத்து, கரகாட்டம், கும்மி, வில்லுப் பாட்டு முதலான நிகழ்ச்சிகளை அரங்கேற்றி இருக்கின்றேன். இதற்கு மேலாக எங்கள் கிராமத்தில் இருக்கும் சிவன் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சிகளை செய்து வருகின்றேன். இப்பொழுதும் அந் நிகழ்ச்சிகளிலே எனது பொழுது உருண்டோடிக்கொண்டிருக்கிறது.

என்கடன் கலைக்கும், சமயத்துக்கும் பணிசெய்து கிடப்பதே.

நன்றிகள்

- ஊக்கமளித்து வழிகாட்டி நெறிப்படுத்திய பிரதேச செயலாளரும் பேரவைத் தலைவருமான **திரு.சி.அமலநாதன்.**
- துணைநின்று உதவிய உதவிப் பிரதேச செயலாளரும் பேரவை உப தலைவருமான **திரு.கோ.தனபாலசுந்தரம்.**
- திட்டமிட்டு நல் ஆலோசனைகள் தந்து, இறுதிவரை பக்கபலமாய் நின்று ஒத்துழைத்த **கலாசார பேரவை உறுப்பினர்கள்.**
- நிதி மற்றும் பல வழிகளிலும் உதவி நல்கிய **கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள்.**
- கலாசார போட்டி நிகழ்ச்சிகள் சிறப்பாக நடாத்துவதற்கு ஆதரவு தந்த **கல்வித்திணைக்களம், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைக்கழகங்கள், கலைஞர்கள்.**
- நடுவர்களாகப் பணியாற்றி ஒத்துழைத்த **பெருந்தகைகள்.**
- நிதியுதவி நல்கிய **"சரீரம்" ஸ்ரீ லங்கா தேசிய நிறுவனம் - தாழங்குடா.**
- நிதியுதவியளித்த **வர்த்தகப் பிரமுகர்கள், சனசமூக நிலையங்கள், நலன்விரும்பிகள்.**
- மலர் சிறப்புற, வாழ்த்துரை வழங்கிய **அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்.**
- ஆக்கங்கள் வழங்கி உதவிய **அறிஞர் பெருமக்களுக்கு.**
- பின்னணியில் நின்று ஆலோசனை வழங்கிய **மலர்க்குழு உறுப்பினர்கள், நண்பர்கள்.**
- வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு சான்றிதழ், பரிசுத்தொகையும் வழங்கி பின்னணியில் செயற்படும் **கலாசார திணைக்களம்.**
- விழாவில் கலந்து சிறப்பித்த **பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர்கள், சொற்பொழிவாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள்.**
- "சிகரம்" மலரைச் சிறப்பாகப் பதிப்பித்த **"சண் அச்சகம்"** இருதயபுரம்.
- மண்டப அலங்காரம், சிற்றுண்டி வழங்குதல், வரவேற்று மற்றும் பல வழிகளிலும் உதவிய **சகலருக்கும்.**

**செயலாளர்**
**கலாசார பேரவை**

சிகரம் சிறப்புற வாழ்த்துக்களும், அனுசரணையும்







சீரம் - ஸ்ரீலங்கா தேசிய மன்றம் - தாளங்குடா.